Registered as a Newspaper

NEW MASTER
Institute.
241, NAVALAR ROAD, JAFFNA.
A/L 89 (Sat & Sun)
BOTANY
Kugatharan.
MICROBIOLOGY
(Unit - 9)
ஆரம்பம்:01-10-1988
Sat, Sun - 6 30 – 7.30
Batch I: 7.30 – 8.30
Batch II:
FUNGUS
Sat, Sun– 12.30 - 1-30 P.M

# சஞ்சீவி

**அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி**

விலை ரூபா 3-50

NEW MASTER
Institute
B.M C. LANE JAFFNA
A/L 90 (Sat & Sun)
BOTANY
KUGATHARAN
MORPHOLOGY
Batch II: 8 30 - 9 30
Batch I: 9 30- 10 30
CYTOLOGY
Batch II: 10 30 –11.30
Batch I: 11 30 - 12 30

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ புரட்டாதி மீ 29 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 03 (15-10-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:32

# தென்பகுதியில் தொடர்ந்தும் வன்செயல்கள்

## கடுகண்ணுவை ரயில் நிலையம் சக்திவாய்ந்த குண்டினுல் தகர்ந்தது

கொழும்பு, அக்டோபர் 15

தென் பகுதியில் அரசாங்கத்துக்கு எதிராக நேற்றும் தொடர்ந்து வன்செயல்கள் பரவலாக இடம்பெற்றன.

கடுகண்ணுவை ரயில் நிலையம் நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தீவிரவாதக்கோஷ்டி ஒன்றினுல் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இதனுல் கொழும்பிலிருந்து மலையகப் பகுதிகளுக்கான ரயில் சேவைகள் யாவும் மறு அறிவித்தல் வரை இடை நிறுத்தப்பட்டன.

இதேசமயம் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே தீவிரவாதிகளினுல் சுட்டுக் கொல்லப்படுவதாக கொழும்பிற்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

சக்தி வாய்ந்த இரு குண்டுகள் வெடித்ததினுல் கடுகண்ணுவை ரயில் நிலையம் பலத்த சேதமடைந்தது.

இந்தச் சம்பவம் அதிகாலை வேளையில் நடந்ததால் ரயில் நிலையத்தில் பிரயாணிகள் எவரும் இருக்கவில்லை. இதனுல் அங்கு உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்று அறிய வருகிறது.

கொழும்பிலிருந்து மலைநாட்டுக்கான ரயில சேவைகள் அனைத்தும் இந்தச் சம்பவத்தையடுத்து ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. எனினும் ரம்புக்கனை வரையான ரயில் சேவை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் நேற்று முன் தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐந்து ஆதரவாளர்கள் தீவிரவாதிகளினுல் சுட்டுக் கொல்லப்பட்டனர்

அவர்களில் ஒருவர் ஊவாமாகாண சபை உறுப்பினர் எச்.ஏ. பொடியப்புஹாமி.

வீட்டில் இருந்து இவர் வெளியே இழுத்து வரப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டார். பதுளையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

காலி மாவட்டத்தில் மகாசுந்தர என்னுமிடத்தில் இரண்டு சகோதரர்களுட்பட மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

திங்கட்கிழமை முதல் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களினுல்

[6ம் பக்கம் பார்க்க)

## செய்திச் சாரம்

### ஆஸ்பத்திரி வாயிலிலும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, அக்.15

பொலீஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மாணவனின் சடலம் மரண விசாரணைக்காக கண்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, சுமார் இரண்டாயிரம் பேர்வரை ஆஸ்பத்திரியின் முன் நின்று ஆர்ப்பாட்டஞ் செய்தனர்.

சில தினங்களுக்கு முன் கண்டியில் இடம்பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டத்தின் போதே இந்த மாணவன் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஐ)

### 50 பஸ்கள் சேதமாகின

கொழும்பு, அக்.15

கடந்த சில நாட்களாக தெற்கில் இடம்பெற்றுவரும் வன்செயல்களின்போது ஐம்பதிற்கும் அதிகமான பஸ்கள் எரிக்கப்பட்டிருப்பதாக அல்லது சேதப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்புக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (உ)

### டிக்ஸிற் பயணம்

கொழும்பு, அக் 15

இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று முன் தினம் அவசரமாக புதுடில்லி பயணமானுர்.

வடக்கு - கிழக்கு நிலைமைகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்திக்கும் மற்றும் முக்கிய தலைவர்களுக்கும் இவர் விளக்கமாக எடுத்துக்கூறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-ஐ)

### மாத இறுதியில் ஜீ.சீ.ஈ. பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், அக். 15

ஜீ. சீ. ஈ. (சாதாரண தர) விசேட பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாத இறுதியில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பரில் தடைப்பட்ட பிரஸ்தாபப் பரீட்சை கடந்த ஜூலையில் யாழ், மாவட்டத்திலும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் நடத்தப்பட்டது என்பது தெரிந்ததே. (உ-9)

### குண்டுவீச்சு!

அம்பாறை, அக். 15

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவரும், முன்னுள் பிரதி அமைச்சருமான அல்—ஹாஜ் எம். எம். முஸ்தபாவின் நிந்தவூரில் உள்ள வீடு குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

சம்பவ தினம் அல்—ஹாஜ் முஸ்தபா கொழும்பிலிருந்ததாகவும், அவரது குடும்பத்தவர்கள் மற்றொரு வீட்டில் தங்கியிருந்ததாகவும் அறிய வருகின்றது. (உ-14)

### கடைகள் திறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், அக் 15

கல்வியங்காட்டில் மூடப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் நேற்றுத் திறக்கப்பட்டன.

அப்பகுதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சு சம்பவம் ஒன்றை அடுத்து கடந்த நான்கு தினங்களாக அப்பகுதிக் கடைகள் மூடப்பட்டிருந்தன. (உ-10)

### வெலி ஓயாவில் 2 சிங்களவர் கடத்தல்

கொழும்பு அக்.15

வெலிஓயா, எலம்பெவவா பகுதிக் காடுகளுக்குச் சென்ற மூன்று சிங்களவர்களில் இரண்டு பேரை இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுவிட்டனர் என்று கொழும்பில் கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் தெரிவித்தது.

அவர்கள் சென்ற ட்ராக்டரும் கடத்தப்பட்டது. (உ-எ)

### தலா ரூ.50 ஆயிரம் நஷ்டஈடு

கொழும்பு அக் 15

மதவாச்சி அருகில் மஹா கொங்கஸ்கடவில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த 43 பேரின் நெருங்கிய உறவினர்களுக்கும் நஷ்டஈடு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

உயிரிழந்த நபரின் அடுத்து வரும் உரித்துக்காரருக்கு தலா 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்படும்.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின் ஊடாக இந்த உதவி வழங்கப்படும் (உ-எ)

### அரசு ஊழியருக்கும் அதேசலுகை

மட்டக்களப்பு, அக்.15

பயங்கரவாத சம்பவங்களினுல் உயிரிழந்த பொலீஸ், ஆயுதப்படை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் பதவி உயர்வுபோல் அரச ஊழியர்களுக்கும் பதவி உயர்வு வழங்கப்படும்.

இதுதொடர்பான சுற்றறிக்கை பொதுநிர்வாக அமைச்சினுல் சகல அரச திணைக்கள தலைவர்களுக்கும் அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியரொருவர் பயங்கரவாத சம்பவத்தில் உயிரிழந்தால் அத்திகதியிலிருந்து அவ் ஊழியர் வகித்த தரம் அல்லது பதவிக்கு அடுத்த நிலைக்கு அவர் பதவி உயர்த்தப்பட்டவராகக் கருதப்படும் என அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-21)

## யாழ் நகரில் இருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், அக்.15

நேற்றும் நேற்று முன் தினமும், இரவும் யாழ். நகரில் இடம்பெற்ற இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

நேற்று நண்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கல்லூரி வீதியைச் சேர்ந்த வி. கதிர்காமநாதன் (வயது 24) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை நேற்று முன்தினம் இரவு கே.கே.எஸ் வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அருளானந்தம் ரவி (வயது 22) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் நடைபெற்றது. (உ-10)

### மேலும் இருவர் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம்.அக் 15

இணுவில், தெல்லிப்பளை ஆகிய இடங்களிலும் நேற்று இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

எனினும் செய்தி அச்சுக்குப் போகும் வரை உயிரிழந்தவர்களின் பெயர், விவரம் தெரியவரவில்லை. (உ-10)

## சுன்னுகத்தில் சூடு ஒருவர் பலி! ஒருவர் காயம்!!

யாழ்ப்பாணம், அக் 15

சுன்னுகம் பகுதியில் நேற்றுக் காலை 7 மணிக்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்

சுன்னுகம் டி. ஆர் ஓ. வீதியில் உள்ள பேக்கரி ஒன்றின் அருகில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த சின்னத்துரை பாலேந்திரன் (வயது 29) என்ற இளைஞர் யாழ்ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10)

## மல்வத்தைப் பண்ணையில் ஸ்ரீலங்கா இராணுவமுகாம்

கல்முனை அக் 15

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்ததமிழ் பிரதேசமான மல்வத்தையில் அமைந்திருக்கும் அரசாங்க விவசாயப் பண்ணை ஸ்ரீ லங்கா இராணுவ முகாமாக மாற்றப்பட்டு அங்கு இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனுல் அங்கு வேலை செய்து வந்த 150 தமிழ் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

ஐநூறு ஏக்கர் நிலப் பரப்பைக் கொண்ட மல்வத்தை விவசாயப் பண்ணை கடந்த 5 ஆம் திகதி முதல் இராணுவ முகாமாக மாற்றப்பட்டிருக்கிறது.

இந்தப் பண்ணையில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைக்

6 ம் பக்கம் பார்க்க)

### நோய் பரவும் அபாயம

மாங்குளம், அக். 15

மாங்குளம் பகுதியில் வாந்திபேதி நோய் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக குழந்தைகளே இந் நோயினுல் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

மாங்குளம் வைத்தியசாலையில் இந்நோய்க்கான மருந்து வகைகளுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேசமயம் கனகராயன் குளத்தில் மூளைக் காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. இந்நோய் நுளம்பினுலும், பன்றியினுலும் பரவுவதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-94)

## ★வடமாகாணத்தின் புனர்நிர்மாண வேலைகளுக்கு கனடாவின் உதவி தேவை

### மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், அக்.15

இலங்கையின் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனருத்தாரண வேலைகளுக்கு குறிப்பாக புனர்நிர்மாண வேலைகளுக்கு கனேடிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறுனகோரிக்கை அடங்கிய அறிக்கை ஒன்று கனேடிய அரசாங்கத்தின் கவனத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி அறிக்கை மனிதஉரிமைகள்ஆணைக்குழு கனேடிய அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்திருக்கிறது.

இந்த அறிக்கை முதலில் கனேடிய ஆசிய செயற்குழுவினுல் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதனை மனித உரிமைகள் ஆணைக்குழு கனேடிய அரசாங்கத்தின் பரிசிலனைக்காக அனுப்பிவைத்திருக்கிறது

அந்த அறிக்கையில் இலங்கை விவகாரம் தொடர்பாக கனேடிய அரசாங்கத்தின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் முக்கிய சிபார்சுகள் வருமாறு'–

★ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கும்படி

(6 ம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

15 - 10 – 1988
புரட்டாதி – 29
சனிக்கிழமை
சுபநேரம்:–
03-02முதல் 04 32வரை
ராகுகாலம்:–
09-02முதல் 10-32வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### மட்டக்களப்பிலும் மூவர் சுட்டுக் கொலை

மட்டக்களப்பு அக் 15

மட்டக்களப்பு படுவான் கரைபகுதியில் கடந்த வார இறுதியில் தாய், மகள் உட்பட மூவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கரவெட்டியில் மா. வள்ளிப்பிள்ளை (வயது 43) ஆவர் மகள் எம். பாக்கியலட்சுமி (வயது 16) ஆகியோரும்–

ஈச்சந்தீவில் கே. முத்துலிங்கம் (வயது 53) என்பவருமே இவ்வாறு உயிரிழந்தனர். (உ-21)

### அம்பாறையில் புதிய இயக்கம்

அம்பாறை, அக் 15

அம்பாறை மாவட்டத்தில் "இஸ்லாமிய மாணவர் புரட்சி அமைப்பு" (ROIS-ரோய்ஸ்) எனும் பெயரில் புதிய அமைப்பு ஒன்று உருவாகியுள்ளதாக அறிய வருகின்றது.

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த சாய்ந்த மருதுப் பகுதியில் இந்த அமைப்பு இயங்கத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

"இஸ்லாத்துக்கு விரோதமான செயல்களிலும், மதுபானம் விற்றல், மதுபானம்

[6ஆம் பக்கம் பார்க்க]

## மதவாச்சி படுகொலைகள்; அரசே பொறுப்பு

### சிறிமாவோ குற்றச்சாட்டு

கொழும்பு, அக் 15

மதவாச்சி படுகொலைக்கு அரசாங்கமே பொறுப்பு என்று சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார். இது தொடர்பாக திருமதி பண்டாரநாயக்கா விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அரசு உறுப்பினர்கள் வீரச்செயல்களுக்குப் பதக்கங்களைப் பெறுவதில் தான் இப்போது ஈடுபட்டுள்ளனர். அதே நேரத்தில் வடமத்திய மாகாணத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர்.

இலங்கை அரசு, தனது கட்டுப்பாட்டிற்குள்ளும். தனது ஆயுதப் படைகளும் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இயேசுவின் போர்வை; கட்டுக்கதை அம்பலம்

ரோம், அக் 14

இயேசு கிறிஸ்துவின் உடல் அடக்கம் செய்யப்பட்டபோது போர்த்தப்பட்ட போர்வை என்று கூறப்படும் ஒரு துணி தொடர்பான மர்மம் தற்போது வெளியாகியிருக்கிறது. அப்படிக் கூறப்படுவது ஒரு கட்டுக்கதை என்று விஞ்ஞானிகள் அறிவித்திருக்கின்றனர்.

இத்தாலியில் வைக்கப்பட்டிருக்கும் இந்தத் துணி தொடர்பாக ஆய்வு நடத்திய இங்கிலாந்து, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து நாட்டு விஞ்ஞானிகள் தமது முடிவை நேற்று இத்தாலியில் வெளியிட்டனர்.

4 34 மீட்டர் நீளமும் சுமார் ஒரு மீட்டர் அகலமும் கொண்ட இந்தத்துணியில் இயேசுநாதரின் உடலும், சிலுவையில் அறையப்பட்டபோது ஏற்பட்ட காயங்களின் அடையாளங்களும் மங்கலான மஞ்சள் நிறத்தில் காணப்படுகின்றன.

இந்தத் துணியை ஆராய்ந்த விஞ்ஞானிகள் அது இயேசு கிறிஸ்துவின் காலத்தைச் சேர்ந்ததல்ல என்பது 95 சதவீதம் நிரூபிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர்.

இந்தத்துணி கிறிஸ்துவுக்குப்பின் 1260 ஆம் ஆண்டிறகும் 1390 ஆம் ஆண்டிற்கும் இடைபபட்ட காலத்தைச் சேர்ந்தது என்று அவர்கள் கருத்து வெளியிட்டனர். (உ)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda - C50, Chaly, Old Model ஆகிய மோட்டார் சைக்கிள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40, மணிக்கூட்டு வீதி. [ஞானம்ஸ் ஸ்ரூடியோ முன்பாக] யாழ்ப்பாணம் [7038]

உபயோகித்த வீட்டுத் தளபாடங்கள், Ceiling Fan. Room Heater, மகாராஜா ஹோல் செற். T. V. Stand. சன்ணுடி மேசை. Ken-Wood, Electric Cooker. Oven. சாப்பாட்டு மேசை, கதிரை, Office மேசை, தையல் மெஷின், கட்டில், மெத்தை, Record Player. கிளாஸ் வகை மற்றும் பலவித பொருள்களும் உடன் விற்பனைக்கு உண்டு. பழைய நம். 14/1, அம்மன் வீதி. கந்தர்மடம், யாழ்ப்பாணம். (7036)

தரமான அலுமினியப் பாத்திரங்கள் பொங்கல் பானைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும் பிள்ளையார், 259 காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். (7095)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள். விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

Broilers இறைச்சிக் கோழிகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். நல்லூர் வீடியோ சென்ரர். நல்லூர்; யாழ்ப்பாணம். [6989]

## கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

Nallur Farm Centre கோழிக்குஞ்சுகளின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு படிப்படியாக விலையில் சலுகை உண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (6988)

## Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் Fudo Enterprises 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (ஷப்ரு, சாமி அன்கோவிற்கு அருகாமையில்) (7100)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## தீபாவளி வாழ்த்து மடல்கள்

பலவகை டிசைன்களிலுள்ள எல்லாவகை தீபாவளிவாழ்த்து மடல்கள் விற்பனையாகின்றன. வியாபாரிகள் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். இம்முறை அனைத்தும் புதிய டிசைன்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை பஸ்நிலையம், மற்றும் எமது களஞ்சியம் மின்சார நிலைய வீதியிலும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (7205)

## உடன் தேவை

சிலிண்டர் மெசின் மைன்டர். பக்கம் கட்டுபவர் (PageMaker), அச்சுக் கோப்பாளர், உதவி ஆசிரியர்கள் எல்லா ஊர்களிலும் நிருபர்கள் தேவை. நேரில் வரவும். 'நம்நாடு' 192. K K S. வீதி, சுன்னுகம் (7202)

## மணமகன் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய யாழ் இந்து உயர் வேளாள குல (சுத்த தாவர போசன) படித்த அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை சீதனம் (வீடு தவிர) காணி, ரொக்சம். நகை வழங்கப்படும். சாதகக்குறிப்பு உட்பட ஏனைய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 386, C/o உதயன், யாழ் பாணம். (7208)

## மணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி, சமயத்திலும் உத்தியோக முறைகளிலும் ஆண், பெண் யாவரும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் நேரே வரலாம். தொடர்பு-: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6654)

## [illegible]

பிள்ளைகளை தகுந்த வயதில் திருமணம் செய்து மகிழ முடியாதிருக்கும் பெற்றோர் உடன் நாட வேண்டியது. புதிய "மாங்கல்யா" மல்ரிசேவிஸ், 14, வி தானையார் ஒழுங்கை, கொழும்புத்துறை மேற்கு, திருவிளங்கம். (7211)

## தவறிவிட்டது

கேசவபொடி வஸ்திரகுமார் ஆகிய எனது அடையாள அட்டை 8 - 10- 88 அன்று Main Streetஇல் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது இல. 19/9, அடப்பன் வீதி, புஸ்பா பேக்கரியில் ஒப்படைக்கவும். (7037)

விமலேஸ்வரி பத்மநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல 396902052 X சுன்னுகத்துக்கும் மல்லாகத்துக்கும் இடையில் K. K. S. ரூட், மினி பஸ்ஸில் தவறிவிட்டது. தயவுசெய்து நேரில்/ தபால் மூலம் சேர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். விமலஸ்தான், மயிலணி, சுன்னுகம். (7028)

28-9 88 அன்று சுன்னுகம் பஸ் நிலையத்துக்கு அருகாமையில் பேர்சுடன் முக்கியமான ஒரு சிறிய திறப்பும் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து அத்திறப்பை சுன்னுகத்தில் உள்ள சன் யோ கோப்பி & கூல் பார் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (7207)

## ஆண்டு 6 அனுமதிப் பரீட்சை

பிரபல பாடசாலைகளில் ஆண்டு 6 அனுமதிப் பரீட்சையில் சித்தி பெறுவதற்குரிய மாதிரிப் பயிற்சி 8 வினுத்தாள்களைக் கொண்டது. யாழ்ப்பாணத்திலுள்ள சகல புத்தகசாலைகளிலும், புதிய கல்வி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா 14. 50 (7209)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் சேர்வதற்கான ஆண்டு 6 பிரவேச முன்னேடிப் பரீட்சை [தமிழ்/ கணிதம்] 16 10-1988 ஞாயிறு பி ப 3.00 மணிக்கு நடைபெறும். பெறுபேறுகள் 19-10-1988 புதன் பி.ப 3.00மணிக்கு வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம். (7210)

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினுல் உங்கள் வீடுகளில் ஆங்கிலம் / சிங்களம் என்பன ஆரம்ப அறிவிலிருந்துபரந்தஅறிவைப் பெறுவதற்கு கற்பிக்கப்படும். இருபாலாரும் வயது வித்தியாசமின்றி தபாலில் மாத்திரம் விண்ணப்பிக்கவும். ஆங்கில / சிங்கள ஆசிரியர், மே / பா, உப தபால் சந்தோர், திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம். (6765)

## தொழில் கல்வி

வெளிநாடுகளில் பிரபல்யமான தொழில் கல்வி ஆரம்பம் 20 – 10 – 88 "Radio Amatures" (Morce Operators) (Ship) (P. M. G) ★ Telex & I. D. D Operators(Interntaional இருபாலரும் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர். அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும் Electronics Engineer Keen Centre, Thirunelvely, (6890)

## G. C. E. A/L - 1989

பௌதிகவியல் வகுப்புக்கள் ஆசிரியர் S. நிர்மலா B. Sc, இல 9, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் வகுப்புக்கள்:- திங்கள், புதன் வியாழன் 4 . 45 - 5. 45 p'm, புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 15-10-88 சனி, ஞாயிறு.4 00-5.30 p m, 8 00 - 9.00 a m, 1989 ற்குரிய மீட்டல் வகுப்புகளும் ஆரம்பிக்படும். (7084)

## G C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினுத்தாள்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும். உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

## ஆங்கில ஆசிரிய நியமனப் பரீட்சை

பயிற்சி வகுப்புகள் இரண்டாவது பிரிவு ஆரம்பம்: 15- 10- 88. சனி, ஞாயிறு நாட்களில் நேரம் 4 30 - 6.00 p m S B Iyar 12, வைமன் தி, நல்லூர். (7012)

## தீபாவளி பரிசு

மீரா வெளியீடுகளான மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனி மலர்கள், முடிவல்ல ஆரம்பம் நாவல்களின் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பன்களை அனுப்பி ஆனந்தனின் "பூஜைக்காக வாழும் பூவை" குடும்ப நாவலை இலவசமாகப் பெறுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (7206)

## சிவதீட்சை பின் போடப்பட்டது

யாழ்ப்பாணம். அக் 15

நவராத்திரி தினங்களை முன்னிட்டுத் திருநெல்வேலியிலுள்ள சைவவித்தியாவிருத்திச் சங்கத்தினரால் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிவதீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளது.

6-11—88 ஆம் திகதி இதே சங்க மண்டபத்தில் சிவதீட்சை நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நவராத்திரிப் பூசைப் பிரார்த்தனைகள் வழக்கம்போல்மாலையில்நடைபெறும். (இ)

## ஓராண்டு நினைவு அஞ்சலி

செல்வி அருந்ததி அருளானந்தம்

ஆண்டவன் படைப்பு 7- 9- 1961

அநியாய அழிப்பு: 15- 10- 1987

அன்பாய் பண்பாய் பாசமாய் எம்முடன் இருந்து எல்லோருக்கும் இனியவளாய் வாழ்ந்த சகோதரியின் ஆத்மா சாந்தியடைய தினமும் பிரார்த்திக்கின்றோம்.

"கிறீஸ்துவிற்குள் மரிப்பவர்கள் பாக்கியவான்கள்"

வெளி. 14-13

கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை ஊழியர்கள்

(7257)

## அன்பின் அழைப்பு

எதிர்வரும் 21, 22, 23 -10 -88ஆம் திகதிகளில்

உயிர் மீட்சிக் கூட்டங்கள்

ஆனைக்கோட்டை கூளாவடி புநுவாழ்வு நிலையத்தில் நடைபெறும்.

காலத்தை ஆதாயப்படுத்தி இரட்சிப்பின் அனுபவத்தை பெலப்படுத்திக்கொள்ள உங்களை அழைக்கின்றோம்.

-புநுவாழ்வு நிலையத்தார்-

(7252

## உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

● COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE

பயிற்சிக் காலம் - 40 நாட்கள் கட்டணம்:- 950/-

(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)

ஆரம்பம்: 28 - 10 - 88 [திங்கள், புதன், வெள்ளி] வகுப்புகள்

BASIC LANGUAGE கற்றவர்களுக்கான

● COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE

பயிற்சிக் காலம்: 3 மாதம் கட்டணம்: 1,500/-

ஆரம்பம்: 29 - 10 - 88 [சனி, ஞாயிறு வகுப்புகள்]

(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

O/L படித்த இரு பாலாரும் சேரலாம் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I B M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

★ குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்து கொள்ளவும்.

UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி,

(உபதபாற் கந்தோர் அருகாமை)

2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(C/592)

# உடலுக்கு அத்தியாவசியமான நீர்த்தன்மை குறைய நேர்ந்தால்...



வயிற்றோட்டம் ஏற்படும்போது எமது உடலில் இருந்து நீரும் உப்புக்களும் வெளியேறுகின்றன. இவ்விதம் இழக்கப்படும் நீரும் உப்புக்களும் தாமதமின்றி எமது உடலுக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டும். இல்லாவிடின் ஏற்படும் விளைவுகளால் மரணம்கூடச் சம்பவிக்க இடமுண்டு.

உங்கள் குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட நேர்ந்தால் பின்வரும் இலகுவான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள். இவை அவனை உயிராபத்தில் இருந்து காப்பாற்றும்:

1. வயிற்றோட்டம் ஏற்பட்டதும் பொரி அரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, உப்புக் கலந்த எலுமிச்சம் பழச் சாறு, செவ்விளநீர், சாயம் குறைந்த தேநீர் போன்ற நீராகாரங்களைப் போதிய அளவு குடிக்கக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானுல் தொடர்ந்து பால் ஊட்டுதல் முக்கியம். புட்டிப் பால் கொடுப்பதானுல் வழக்கத்தைவிட இருமடங்கு நீரில் பால் மாவைக் கரைத்து ஊட்டுங்கள்.

2. இவ்விதம் செய்தும் வயிற்றோட்டம் நீடித்தால் குழந்தைக்கு உடல் உலர்ச்சி ஏற்படக்கூடும்: உடல் உலர்ச்சியின் முதலாவது அறிகுறி கடும் தாகமாகும்.

3. இந்த நிலையில் உடனடியாக குழந்தைக்கு ஜீவனி பானம் தயாரித்துக் கொடுங்கள். குழந்தையின் உடல் இழந்துவிட்ட நீரையும் உப்புக்களையும் ஜீவனி மீள அளிக்கும்.

ஜீவனியை உங்கள் கூட்டுறவுக் கடையில் அல்லது அண்மையிலுள்ள மருந்துக் கடையில் வாங ்கலாம்

ஒரு பக்கெட்டின் விலை: ரூ. 5/- மட்டுமே.

வளரும் பயிரான உங்கள் குழந்தையின் உயிரைக் காப்பாற்றுங்கள்.

JWT UF 2652

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருவெனப் போற்றியே சிறப்போமடி

பொன்னியின் மலரடி தொழுவோமடி — நாங்கள்
பொற்பான பூசைகள் புரிவோமடி
சென்னியில் வைத்தடி பணிவோமடி — நாங்கள்
செல்வத்தை வேண்டியே அழுவோமடி.

சக்தியின் பாதங்கள் பிடிப்போமடி — நாங்கள்
சத்திய பூஜை செய்வோமடி
பக்தியின் பாடல்கள் படிப்போமடி — நாங்கள்
பக்தியாய்ப் பண்ணினை இசைப்போமடி.

மலைமகள் கோயிலைச் சேர்வோமடி — நாங்கள்
மன்பதை வாழவே நினைப்போமடி
கலைமகள் கொலுவினை வைப்போமடி — நாங்கள்
கல்வியிற் திளைத்துமே வாழ்வோமடி.

அலைமகள் காட்சிகள் காண்போமடி — நாங்கள்
ஆரத்தி ஏந்தியே வாழ்வோமடி
நிலமகள் தன்னையே நினைப்போமடி — நாங்கள்
நித்தமும் முயற்சிகள் செய்வோமடி.

வீரமும் கல்வியுஞ் செல்வமும் — நாங்கள்
விரைவினிற் பெற்றுமே வாழ்வமடி
தீரமும் ஞானமும் வாழ்க்கையும் — நாங்கள்
திருவெனப் போற்றியே சிறப்போமடி.

- முருக. வே பரமநாதன் -

## அம்மா! எமக்கு வரமருள்வாய்!

அம்மா எமக்கு வரமருள்வாய்
ஆய கலைகள் நாம் பெறவே!
இம்மா நிலத்தில் கலைத்தாயே!
ஈவாய் அருளைப் பணிகின்றோம்.

உலகம் உய்யும் நல்லறிவை
ஊட்டி வளர்க்கும் கலைத்தாயே!
எண்ணும் எழுத்தும் ஈந்திடென
ஏத்தி வழுத்தி வணங்குகிறோம்!

ஐயம் நீக்கும் ஆசான்நீ
ஒழுக்கம் நல்கும் தெய்வம்நீ
ஓங்கும் ஒன்பது நாள் பணிந்தோம்!
ஔவைக் களித்த கவியருள்நீ.

வை. தவசிலன்

# சோதிடக் கலையின் துணையோடு

## எண்சோதிடம் செயற்பட வேண்டும்

**எண்** சோதிடத்திற்கு இன்று கவர்ச்சியான விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. வாசகர்களும் அக்கவர்ச்சியை நாடிச்சென்று கொண்டிருக்கின்றனர்.

அதற்குக் காரணங்கள் இரண்டு.

1) சோதிடக்கலையில் உள்ள நுட்பமான கணித வேலைப்பாடுகள் எதுவுமே எண் சோதிடத்தில் இல்லை.

2) வாழ்க்கையில் முன்னேறுவதற்கு மிக இலகுவான வழியொன்றை அது சொல்லிக் கொடுக்கின்றது.

ஒருவரின் பிறந்த திகதியைச் சொன்னவுடன், அவரது பிறப்பெண், கூட்டெண், பொருத்தமான கல், பொருத்தமான நிறம், அவரது குணம் இவற்றை எண்ணிப் பத்து நிமிடங்களில் சொல்லிமுடித்துவிடலாம். ஓரளவு ஞாபகசக்தி இருந்தால் போதும்.

எண் சோதிடப்படி முன்னேறுவதற்கு வழி என்ன என்று கேட்டால்,

அ) அதிர்ஷ்டமான இலக்கத்தில் பெயரை மாற்றச் சொல்லலாம்.

ஆ) அதிர்ஷ்டமான கல்லை அணிந்து கொள்ளச் சொல்லலாம்.

இ) அதிர்ஷ்டமான திகதிகளில் கருமங்களைச் செய்யச் சொல்லலாம்

> கற்கோவளனை கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ''துளபகிரி சோதிடம்'' சஞ்சிகையின் இரண்டாவது இதழில் வெளியான எண்சோதிடம் பற்றிய தொடர் ஆய்வுக் கட்டுரையின் முதலாவது பகுதி இங்கு பிரசுரமாகிறது.

ஈ) பொருத்தமான நண்பர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்ளச் சொல்லலாம்

உ) அதிர்ஷ்டமான நிறங்களில் ஆடைகளை அணிந்து கொள்ளச் சொல்லலாம்.

இவ்வாறாக மிகக்குறைந்த சிரமத்துடன் முன்னேற வழி சொல்வதும். பலன் சொல்லும் தன்மையை அடைவதும் எண் சோதிடத்தில் இருப்பதனுல் மிக வேகமாக மக்கள் எண் சோதிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ஆனுல் குறைந்த சிரமத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய எந்த ஒன்றின் தரமும் அதற்கேற்பவே இருக்கும் என்பது மட்டுமல்ல, சில சமயங்களில் பாரிய பக்க விளைவுகளையும் ஏற்படுத்தி விடலாம்.

எனவே நாம் எண்சோதிடத்தின் பலனைத் தீர்மானிக்கின்றபோது மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

எண்சோதிடத்தில் சொல்லியிருக்கின்றபடி பெயர் எண்களை மாற்றுவது, கற்களை ஆபரணங்களில் பதிப்பது பாரிய பாதிப்புகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இவற்றையெல்லாம் பட்டுத்தான் தெளியவேண்டும் என்பதில்லை. பட்டுத் தெளிந்தவர்கள் கண்ட அநுபவம் சோதிடக்கலை எம் இந்துமதத்தின் அளப்பரிய சொத்தாக உள்ளது.

எனவே சோதிடக்கலையின் துணைகொண்டு, குறிப்பிட்ட கிரகம் எமக்கு யோககாரனு, அல்லது அவயோககாரனு பாவியா அல்லது சுபரா என்பதை முதலில் தெரிந்து கொண்ட பின்னரே அவற்றைச் செயற்படுத்த வேண்டும்.

மொத்தத்தில் சோதிடக் கலையின் துணையோடு எண் சோதிடம் செயற்படும்போது தான் நன்மை உண்டு. அல்லாமல் எண்சோதிடத்திற்குத் தனித்தியங்கும் வல்லமை கிடையாது.

உங்களுக்குச் சுப பலனைத் தராத ஒரு கிரகத்திற்கு மேலும்சக்தியை அதிகரித்தால் நீங்களே உங்கள் தாழ்விற்கு வழி வகுக்கின்றவராகின்றீர்கள்.

எனவே எண்சோதிடப்படி உங்கள் வாழ்க்கையில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினுல் முதலில் சோதிடர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். ★

# குத்துச் சண்டை வீரர் டைஸனிடம் இருந்து தப்ப மனைவிக்கு ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம்!

**கு**த்துச்சண்டை வீரரின் குடும்ப வாழ்க்கையே குத்தும் சண்டையுமாக மாறிவிட்டது.

மைக் டைஸன் இன்றைய உலக குத்துச்சண்டை சாம்பியன்.

ஒரு நிமிடத்தில் ஸ்பிங்ஸைத் தோற்கடித்து 60 கோடி ரூபாவை பரிசுப்பணமாகப் பெற்றவர்.

அவரின் வயது 26. பிரிட்டிஷ் குத்துச்சண்டை வீரர் புருனோவுடன் மோத திகதி நிர்ணயிக்கப்பட்டும் இன்னும் மோதல் இடம்பெறவில்லை.

நியூயார்க் வீதியில் இன்னொரு குத்துச்சண்டை வீரருடன் மோதப்போய் காயமடைந்தார். பின்னர் கார் விபத்து ஒன்றில் சிக்கிக் கொண்டார்.

இவர் மனைவி ரொபின் கிவின்ஸ்; வயது 23; அவர் ஒரு நடிகை. டைஸனைக் காதலித்துத் திருமணஞ் செய்து கொண்டார்.

திருமண வாழ்க்கை எட்டு மாதங்கள் இன்பமாக நீடித்தது.

60 கோடி ரூபா பரிசுப் பணம் பெற்ற பின்னர் டைஸன் வீட்டிலும் குத்துச் சண்டை போடத் தொடங்கினுர்;

வெறியில் சென்று மனைவியைத் தாக்கத் தொடங்கினுர்.

ஒருநாள் மனைவியையும் அவரின் தாயையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்.

கடந்த 2 ஆம் திகதி நடிகை மனைவி விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்துவிட்டார். 'இவருடன் வாழமுடியாது. அவர் ஒரு மனநோயாளி. என்னையும் என் தாயார், சகோதரியையும் கொல்லப்போவதாக பயமுறுத்தி வருகிறுர். அவரிடமிருந்து விடுதலைபெறவேண்டும்'— என்று விவாகரத்து மனுவில் அவர் கூறியிருக்கிறுர்.

நீதிமன்றம் மனைவிக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளது.

★ மனைவியுடன் தொடர்பு வைக்கக் கூடாது.

★ அவர் மீது பாலியல் தாக்குதல் நடத்தக் கூடாது. தொலைபேசியில் கூட அவரை ஏசக் கூடாது.

★ மனைவி இருக்கும் இடத்தில் இருந்து 1000 மீற்றர் பிரதேசத்துக்கு வெளியே தான் டைஸன் இருக்க வேண்டும்.

இப்படி மைக்டைஸனுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பூரண விசாரணை இம்மாதம் 26ஆம் திகதி நீதி மன்றத்தில் நடைபெறவுள்ளது.

டைஸன் மனநோயாளியா என்பதை அறிய மனநோய் வைத்திய நிபுணர் ஒருவரின் ஆலோசனை கோரப்பட்டது. முதலில் ஒரு நிபுணர் டைஸனைப் பரிசோதித்தார். மூளை பாதிக்கப் பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

டைஸனை, அவரின் மனேஜர் இன்னொரு நிபுணரிடம் கொண்டு சென்றுர். அந்த நிபுணரும் டைஸனைப் பரிசோதித்தார்.

அவர் முந்திய நிபுணரின் முடிவை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனுல் டைஸனின் ஆக்ரோஷ குணம் மாற ஒரே வழி மீண்டும் குத்துச் சண்டை ஹோதாவில் இறங்குவதே என்று இரண்டாவது நிபுணர் கூறியிருக்கிறுர்.

ஆகவே டைஸன் மீண்டும் குத்துச்சண்டை ஹோதாவில் இறங்கி எதிரியின் மண்டையை உடைப்பாரா?

அல்லது குடும்ப வாழ்க்கையில் சமரசம் செய்து கொண்டு போய் மனைவியின் தாடையை உடைப்பாரா?

ஓர் உலகக் குத்துச் சண்டை சாம்பியனின் கதை இப்படிப் போகிறது. ★

# இரண்டாம் ஆண்டு வீர அஞ்சலி!


தமிழ் மக்களின் விடுதலையை பரந்துபட்ட மக்களின் விடுதலையுடன் ஒன்றிணைத்துப் பார்த்தாய். சொந்தப்பலத்தில் போராட மக்களின் சக்தியை அணிதிரட்ட வேண்டி

**போராட்டத்திற்காக ஐக்கியம்**
**ஐக்கியத்திற்காக போராட்டம்**

எனும் அடிப்படையைப் பின்பற்றி உறுதியாக நின்றுய். இன்றைய ''நிலைமைகளை'' அன்றே நீ எதிர்வு கூறினுய்.

மக்கள்பால் நீ கொண்ட அன்பு மகத்துவமானது. அது சகல்வித தடைகளையும் தகர்த்தெறிந்து புதிய வரலாறு படைக்க முயன்ற உன் முயற்சிக்கு அடிப்படையானது இடையே.

**காலன் உன்னைப் பறித்தாலும்**
**காலம் உன்னை உயிர்ப்பிக்கும்**



நடுக்கடலில் கொல்லப்பட்டன அந்தவிடுதலைப் பறவைகள்
கொலைசெய்தவர்களுக்கு எதிராக
நட்சத்திரங்களும் மேகங்களும்
காற்றும் கதிரவனும் சாட்சி கூறவில்லை என்றுலும்
பாயும் அலைகளும் தாவும் மீன்களும்
அவற்றை மறந்துபோய் விட்டாலும்
ஆழ்கடலின் அமைதி
அந்த கொடுஞ்செயலை பதித்துத்தானிருக்கும்.
அதனைத்தொடர்ந்து வரும் புதிய ஆர்ப்பரிப்புக்கள்
அவ்வநியாயக்காரர்களை முளையோடு அள்ளி எறியும்

## வி. விஸ்வானந்த தேவன்

(பொறியியலாளர், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை)

தாயின் மடியில்: 15 - 10 - 1951 மக்களின் மனதில்: 15 - 10 - 1986

இவருடன் கூடவே கடலில் கொல்லப்பட்ட ரேய் ரூபின்சன் (மன்னர்), நரேஸ் சர்மா (யாழ்ப்பாணம்) ஆகிய இருவருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துககொள்கின்றேம்.


கல்லுவம், கரவெட்டி.

மனைவி, மகள், பெற்றேர், உறவினர், நண்பர்கள்.

(7161)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு



# கூர்ந்து கவனியுங்கள்!

## 'ஷப்ரு' வின் புதிய வட்டி வீதங்களை

### கூர்ந்து கவனியுங்கள்!!

### முழுத் திருப்தி தானே கிடைக்கும்!!!

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும், அபரிமிதமான வளர்ச்சியும்
உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை
உறுதிப்படுத்துகின்றன.
வங்கியியலிலும் நிதியியலிலும்
சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள
எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன்
அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்களுடன்
பல்வேறு விசேட சலுகைகளையும்
வசதிகளையும் வழங்குகின்றது.
உங்கள் தேவைக்கேற்ப வட்டியை
மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில்
பணமாகவோ, காசோலையாகவோ அன்றி
வங்கிக் கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே
எமது பிரதான நோக்கமாகையால்
அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும்
சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து
திறமையான சேவைகளை வழங்குகின்றோம்.

### பணிப்பாளர் சபை

திரு. எஸ். பி. ஈ. கருணரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B., (Lond.), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond.), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

## SHABRA UNICO FINANCE LIMITED


61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. சோமசுந்தரம் லோகேஸ்வரன்
(சட்டத்தரணி)

அன்னையின் மடியில்: 21 - 11 - 1942
அநியாய அழிப்பில்: 15 - 10 - 1987

ஓராண்டு மட்டுமென்ன?
ஒரு நூற்றுண்டானாலும்
தீராது நம் கவலை;
தெளியாது நம் மனங்கள்
ஆராத வாஞ்சையுள்
அருந்துணையை நாமிழந்து
நீராக உருகியழும்
நிலைதந்தாய் ஏனோ?

தெய்வத்தில் நம்பிக்கை
சிவதொண்டில் நல்லார்வம்
உய்வுக்கு ஒழுக்க நெறி;
உயர்வுக்கு பொதுநோக்கு
ஐயத்துக் கிடமின்றி வழக்குவாதம்;
அமைந்த வீரம்
வையத்தில் இவையெல்லாம்
நின்பாற் கண்டோம்
வருக சாந்தி!

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள், தாய்,
சகோதரர், சகோதரிகள்,
உற்றூர், உறவினர், நண்பர்கள்.

16. சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (7190)

## புஸ்பா ரான்ஸ்போட்

உங்கள் பொதிகளை பாதுகாப்பாகவும் விரைவாகவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் கொண்டு செல்வதற்கு

நாடுங்கள்:

**புஸ்பா அன் கோ**
101, மானிப்பாய் றோட்,
யாழ்ப்பாணம்.

கொழும்பில்:
புஸ்பா அன் கோ
162, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13. (C/590)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



உயர்திரு கனகசபை துரைராசா
(குணம்)

மலர்வு: 31. 10. 1928
உதிர்வு: 16. 09. 1988

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியமும் 16 - 10 - 88 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

உற்றூர், உறவினர், நண்பர்களை அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நடைபெறும் இக்கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.

"மாகியம்பதி"
அப்பிளாசகை வீதி,
சண்டிலிப்பாய் (7197)

## Computer Programming in Basic

Duration - 2½ Months
Week day Batch (Tue & Wed 11-30a.m.)
Commencing on: 18-10-88
1st Instalment : Rs 400/- Only
Practicals on IBM & other Computers
Valuable Certificate will be awarded

**IDP**
Institute of Data Processing
K. K. S Road (சிவன்கோவிலடி.)
யாழ்ப்பாணம்

● தெல்லிப்பளை கிளையில்
17-10-88 (3 30 மணிக்கு) ஆரம்பமாகும் (7196)

## நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்

ஸ்தாபனத்தின்
38ஆவது ஆண்டு நிறைவை
முன்னிட்டு
எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உளம் கனிந்த
**வாழ்த்துக்கள்**

உங்கள் தேவைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்!

Philips தயாரிப்புக்களான:

- Gas Cooker
- Refrigerators
- Pedestal Fan
- Table Fan
- Electric Bulbs
- Chinese Hot Plates
- Chinese Electric Oven
- Chinese Electric iron
- Rice Cooker

C.B.E. Bulbs
Eveready Batteries and Torch lights
S-lon Pipes & Fittings
Newtone Electric Water Pumps

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

மற்றும்
மின் பாவனைப் பொருள்கள் அனைத்தும்
மலிவு விலையில் கிடைக்கும்.

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு
சிறந்த ஸ்தாபனம்:
**நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்**
141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## பாராட்டத்தக்க முயற்சி
### ஓவியக் கண்காட்சியை ஆரம்பித்துவைத்து உரை

யாழ்ப்பாணம், அக் 15
ஓவியர் அனுஷாவின் ஓவியங்கள் பாராட்டத்தக்கவை. தமிழ் மக்கள் மத்தியில் இத்துறை மேலும் வளர எல்லோருக்கும் ஊக்கம் அளிப்பது அவசியம்.

அனுஷாவின் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் யாழ். பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் சு. சிவதாசன் மேற்கண்டவாறு கூறினர்.

கடந்த 13 ஆம் திகதி சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் திறந்து வைக்கப்பட்ட இந்த ஓவியக் கண்காட்சி இன்று நண்பகல் 12 மணி வரை நடைபெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

ஓவியக் கண்காட்சி ஆரம்ப விழாவில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ராஜன் கதிர்காமர், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெயவீரசிங்கம், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரதம விருந்தினராக திரு. சு. சிவதாசன் கலந்து கொண்டார். (இ-10)

## திருப்பணிச் சபைகள் சீராக இயங்க வேண்டும்
### உதவி அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம். அக் 15
எமது ஆலயங்களின் திருப்பணி வேலைகளைக் கவனிக்க நாம் ஒரு சபையைத் தேர்ந்தெடுத்து அவ்வேலைகளை ஒப்படைக்கின்றோம். அச்சபை தான்தோன்றித்தனமாக நடக்கும்போது பிரச்சினைகள் தோன்றுகின்றன.

இவ்வாறு கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரசத்தி விநாயகர் ஆலய அறங்காவல்சபை தெரிவு பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது கோப்பாய்உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரா கூறினர்.

அறங்காவல் சபைகள் முன்னைய காலங்களைப் போல் பிரச்சினைப்படாது சீராக இயங்கி எமது மதத் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்.

திரு எம், முருகேசு ஆசிரியர், பரமசுவாமிக் குருக்கள், திரு எஸ். விக்னேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (உ-ச-72)

## விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டத்தை ரத்துச் செய்தது
### அரசமைப்புக்கு முரணனதா?

கொழும்பு. அக் 15
விசேட ஜனாதிபதி ஆணைக்குழுச்சட்டத்தை ரத்துச் செய்வதானல் அரசமைப்புச் சட்டத்துக்கு திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமாம்.

அரசமைப்புச் சட்ட நிபுணர்கள் இப்படிக் கருதுவதாக தெரிய வருகிறது.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்தை ரத்துச் செய்தது அரசமைப்புச் சட்டத்துக்கு முரணனது.

ஆகவே அரசமைப்புச் சட்டத்தின் 81 ஆவது ஷரத்துக்கு திருத்தம் கொண்டு வரப்பட்டு அது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவும் வேண்டும் என சட்டநிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருப்பதாகத் தெரிய வருகிறது. (உ-எ)


## பெண் விற்பனையாளர் தேவை

தெல்லிப்பளையில் உள்ள மருந்தகச்சாலைக்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை பயிற்சி பெற விரும்பும் ஆங்கில அறிவுள்ளோரும் விண்ணப்பிக்கவும் தெல்லிப்பளை சுற்றாடலில் உள்ளோர் விரும்பத்தக்கது. 25-10-1988 க்கு முன் யூனிவேசல் மெடிக்கல் சென்ரர், தெல்லிப்பளை என்னும் விலாசத்திற்கு விண்ணபிக்கவும்.

உரிமையாளர்

(7255)

## ஓராண்டு நினைவஞ்சலி







| தம்பிஐயா | செல்வநாயகம் | செல்வநாயகம் |
|---|---|---|
| **செல்வநாயகம்** | **கருணாகரன்** | **சிவஞானவதி** |
| தோற்றம்: 30 - 10 - 1917 | தோற்றம்: 30 - 9 - 1963 | தோற்றம்: 22 - 12 - 1928 |

அநியாய அழிப்பு: 15 — 10 — 1987

பாசமலராய் மலர்ந்து அறிவு மணம் வீசி
அன்பாலும் பண்பாலும் உயர்ந்த எம் பெற்றோர்
எமக்கெல்லாம் தேனபாகு போல் மாறுத அன்பைப்
பருகத் தந்தீர்களே! என்றும் இன்பமாய் வளர்த்து
வந்த எங்கள் அருமைத் தம்பி கண்ணனையும்
பறி கொடுத்துக் கலங்குகின்றோம்.
ஒரு யுகம் முடிந்தாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சை விட்டகலாது.

கிரியைகளிற் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

உரும்பராய் வடக்கு,
உரும்பராய் (7026)

## விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:- 24- 12- 1939
● ● ●
மறைவு:- 21- 10- 1987

திருமதி இமெல்டா ஜெயம்மா
வின்சன் டிபோல்

மதுரமான இயேசுவே! இரக்கம் காட்டுவதும் பொறுத்தல அளிப்பதும் உமது இயல்பாமே. எனவே இப்பூவுலக வாழ்வை நீக்கி உம்முடன் ஒன்றித்திருக்க தேவரீர் நேசத்துடன் அழைத்துக் கொண்ட திருமதி இமெல்டா ஜெயம்மாவின் பாவங்களையும், குற்றங்களையும் மன்னித்து நித்திய பேரின்ப வாழ்வை அளித்தருளும். சமாதானத்தில் இளைப்பாறுவாராக. ஆமென்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ் மரியன்னை பேராலயத்தில் 21-10-1988 வெள்ளிக்கிழமை காலை 06 15 மணிக்கும் அன்று மாலை 05 15 மணிக்கு கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலிகளில் பங்கு பற்றி ஜெபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர், மகன்

1/10, புது வீதி,
1-ஆம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (6995)

## உஷா தையல் மெஷின் தொடர்



டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்)
ட்ரொப் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும்.
ரூ.பா 3850/-
தையற்காரர் மொடல் ரூ. 4000/-



எக்ஸெலா 30 (சிக்சாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-



சிக் சாக் எக்ஸெலா 55
பிக்கொட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலைவிளிம்புத் தையல். பொத்தான் துளை தைத்தல், முதலியன.
ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள்.

விநியோகத்தர்
**உஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்**
68. அத்திடிய றோட், ரத்மலானே.
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381

Mel Ads 9353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நுளம்புத் தொல்லையா"
"உங்கள் பொன்னை மேனியில் நுளம்புகள் ஊசி போடுகின்றதா?"
இன்றே நீம் சுகாதாரா தூபத்தை உபயோகியுங்கள். இது வேப்பம் விதையில் இருந்து தயாரிக்கப்பட்டது.
ஒருபைக்கெட் விலை ரூபா 1/-மட்டுமே.
ஓர் மில்க்வைற் தயாரிப்பு
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

15 - 10 - 1988 சனிக்கிழமை

"ஓம் சக்தி"
நவராத்திரி விரதத்திற்கு தேவையான
"சகலகலாவல்லி மாலை"
என்ற புத்தகத்தையும் அழகிய சரஸ்வதி ஸ்ரிக்கரையும் பெறுவதற்கு 20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்புங்கள்.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.

## நாடு திரும்பிய அகதிகள் வீடு அமைக்க நிதி உதவி

யாழ்ப்பாணம், அக் 15

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதிகளின் வீடுகள் சேதமடைந்திருப்பின், அவற்றைத் திருத்தவும், காணிகள் இருக்கும் பட்சத்தில் புதிதாக வீடுகள் அமைக்கவும் நிதி உதவிகள் வழங்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

இந்நிதி உதவியைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படஉள்ளன.

மே 14, 28 ஆகிய திகதிகளில் நாடு திரும்பியவர்களுக்கு இம் மாதம் 20 ஆம் திகதியும்–

ஜூன் 6 ஜூலை 9 ஆகிய திகதிகளில் நாடு திரும்பியவர்களுக்கு இம் மாதம் 21 ஆம் திகதியும்–

ஆகஸ்ட் 6, 28 ஆகிய திகதிகளில் நாடு திரும்பியவர்களுக்கு இம் பாதம் 22 ஆம் திகதியும் படிவங்கள் வழங்கப்பட உள்ளன.

படிவங்கள் காலை 9 மணி முதல் நண்பகல் 1மணி வரை வழங்கப்படும்.

படிவங்களைப் பெற விரும்புவோர் தமது தேசிய அடையாள அட்டை, இந்திய அரசினால் வழங்கப்பட்ட அகதிகள் பதிவு அட்டை, காங்கேசன்துறையில் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட அறிமுக அட்டை ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டும் எனக் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-10)

## மீனவர்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், அக் 15

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய அகதிகளில் மீன் பிடித்தலைத் தொழிலாககொண்டவர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். மாவட்ட மீன்பிடித்தல் விரிவாக்க அலுவலரினால் அடைக்கலமாதா கோவிலுக்கு அருகாமையில் உள்ள வடமாகாண மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வைத்து விநியோகிக்கப் படவுள்ளன.

1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் நாடு திரும்பியவர்கள் எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் பகல் 1 மணி வரை படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சம்பந்தப்பட்டவர்கள் தமது தேசியஅடையாள அட்டை, இந்திய அரசினால் அகதி முகாமில் வழங்கப்பட்ட பதிவு அட்டை, இலங்கை அரசினால் காங்கேசன்துறையில் வழங்கப்பட்ட அறிமுக அட்டை ஆகிய மூன்றையும் எடுத்துச் செல்ல வேண்டும் என யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (உ-10)

## வயோதிபர் கலை நிகழ்ச்சி

குருநகர், அக் 15

முற்றிலும் வயோதிபர் கலந்து கொள்ளும் கலை நிகழ்ச்சிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி - முதியோர் இல்லத்தில் நடைபெறும்.

அக்டோபர் 10 தொடக்கம் 16 ஆம் திகதிவரையான வயோதிபர் வாரத்தை ஒட்டி இச்சிறப்பு நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வயோதிபர் இல்லப் பொறுப்பதிகாரி திரு. த. பாலதேவன் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

(உ-51)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் அக் 15

செஞ். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின் யாழ்-நல்லூர் படை அத்தியட்சகர் பிரிவுக்குள் அடங்கும் பிரிவுகளுக்கான பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பிறவுண் வீதியில் உள்ள தலைமைக்காரியாலயத்தில் நடைபெறும். (உ-10)

## பஸ் உரிமையாளர் மீதான அபராதம் இடை நிறுத்தம்

கொழும்பு, அக் 15

கடந்த திங்கட்கிழமை ஜே. வி. பியின் வேலை நிறுத்தத்தின் போது போக்குவரத்துச் சேவைகளை நடத்தாத தனியார் பஸ் உரிமையாளர் மீது விதிக்கப்பட்ட அபராதத்தை போக்குவரத்து அமைச்சு இடைநிறுத்தி வைத்துள்ளது.

தனியார் பஸ் உரிமையாளர் தூதுக்குழு ஒன்று நேற்று அமைச்சர் எம். எச். முஹம்மதுவைச் சந்தித்து அபராதத்தை வாபஸ் வாங்கும்படி கேட்டுக் கொண்டது.

வேலை நிறுத்தத்தினத்தன்று சேவையில் ஈடுபடாத தனியார் பஸ்களின் உரிமையாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன்–

அந்த பஸ்கள் 10நாள் போக்குவரத்துச் சேவைகளை நடத்தக் கூடாது என்றும் தடை உத்தரவும் விதிக்கப்பட்டிருந்து தெரிந்ததே. (உ-எ)

## கண்காட்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக் 15

இன்றும் நாளையும் வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரியில் மாணவர் இளைஞர் பொது மன்றத்தினால் (கைஸ்) நடத்தப்படவிருந்த புத்தகக் கண்காட்சி ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக அவ்வமைப்பு அறிவித்திருக்கிறது.

பாடசாலைகள் திறக்கப்படாமையாலும், இராணுவ நெருக்கடிகள் காரணமாகவுமே இது ஒத்திவைக்கப்படுவதாக அமைப்பின் அறிக்கை ஒன்று தெரிவித்தது. (உ)

## தாதிகள் பயிற்சி அனுமதிச்சீட்டு:

யாழ்ப்பாணம், அக் 15

நாளை நடைபெற இருக்கும் தாதிகள் பயிற்சிப் பரீட்சைக்கான அனுமதிச் சீட்டுக்களில் மேலும் சில யாழ். சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஐ துரைராணி (இராமநாதபுரம்.) எஸ். ராஜா செல்வி (பரந்தன்). வீ. சுகுமாரி (கொடிகாமம்), ஆர். பீற்றர் (சாவகச்சேரி,) கே. ஜெயலட்சுமி (வல்வெட்டித் துறை). ஆகியோர் இன்று பிரஸ்தாப அலுவலகத்திற்கு வந்து அனுமதிச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (உ-9)

## கொள்ளையர் பிடிபட்டனர்

கல்முனை, அக். 15

சம்மாந்துறையை அடுத்துள்ள மாவடிப்பள்ளி முஸ்லிம் கிராமத்தில் உள்ள தனியார் அரிசி ஆலையொன்றில் இரவில் ஆயுத பாணிகளாகப் புகுந்து கொள்ளையிட முயன்ற நான்கு கொள்ளையர்களை அரிசி ஆலையிலுள்ளவர்களும், பொது மக்களுமாகச் சேர்ந்து பிடித்துள்ளனர்.

தற்போது நால்வரும் சம்மாந்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (உ-84)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம் அக் 15

சுகாதார எழுது வினைஞர் சேவை நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை ஒன்று எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 8·30 மணிக்கு கொழும்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களக் கட்டிடத்தின் மூன்றும் மாடியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சு அலுவலகத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு பின்வருவோர் அழைக்கப்பட்டுள்ளனர்:-

ஜே செல்வரட்ணம் [அரியாலை] ரி. செல்வநாதன் [மல்லாகம்] எஸ். பாலபாஸ்கரன் [கைதடி] எஸ். மாலினி [சுண்டுக்குளி] சரோஜினி நடராஜா [வட்டுக்கோட்டை] கே. நரேந்திரன் [தெல்லிப்பளை] எஸ்.விஷ்ணுகாந்தி [புத்தூர்] வீ. சுந்தரலிங்கம் [புலோலி] த. இந்திரா [அச்சுவேலி].

இவர்கள் மேலதிக விபரங்களைப்பெற யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும் படி கேட்கப்பட்டிருக்கின்றனர். (உ-9)

## ஸியாவின் மரணத்துக்கு சதி காரணம் அல்ல!

### அமெ. இராணுவ நிபுணர்கள் கருத்து

நியூயோர்க் அக் 14

அதிபர் ஸியா - உல்ஹக் பயணம் செய்த விமானம் வெடித்துச் சிதறியதற்கு சதி காரணம் அல்ல; வெறும் விபத்தே அது.

—இப்படி அமெரிக்க இராணுவ நிபுணர்கள் தெரிவித்திருப்பதாகநியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டது.

விமானம் நடுவானில் வெடித்துச் சிதறவில்லை. இயந்திரக் கோளாறு காரணமாக தரை இறங்கிய சமயத்தில் தரையுடன் மோதி ஏற்பட்ட அதிர்ச்சியில் விமானம் வெடித்தது.

இந்த விபத்திற்குஎந்த நாடும் குழுவும் காரணம் அல்ல.

—இப்படி அமெரிக்க நிபுணர்கள்கருத்துவெளியிட்டனர் என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

விபத்து வெடிகுண்டு. ஏவுகணையால் நேர்ந்தது என்ற ஊகங்களுக்கு அமெரிக்க நிபுனர்களின் அறிக்கை முடிவு கட்டியிருக்கிறது (உ-எ)

## கரை ஒதுங்கிய சடலம்

மட்டக்களப்பு அக் 15

புதிய ஆசிரிய நியமனம் பெற்ற இளைஞரொருவர் 2 ஆம் நாள் அடிகாயங்களுடன் கல்லடிப் பாலத்தில் சடலமாக கரை ஒதுங்கினார்.

ஈச்சந்தீவு வாசியான ஞா. பாஸ்கரன் வயது23 என்ற இளைஞரே இவ்வாறு உயிழந்தார். நடந்த வாரம் இச் சம்பவம் இடம் பெற்றது.

(உ-21)

## புஷ் முன்னணியில்

வாஷிங்டன் அக் 15

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு வேட்பாளராக போட்டியிடும் உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ஜனநாயகக்கட்சி வேட்பாளர் மைக்கல் டுக்காகிஸும் இரண்டாவது டெலிவிஷன் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

இவ் விவாதத்தை லட்சக்கணக்கானோர் பார்த்தனர். அதன் பின்னர் நடந்த கருத்துக் கணக்கெடுப்பில் திரு. புஷ் முன்னணியில் நிற்கின்றார் என்று தெரியவந்தது. (உ-எ)

## "சாரணர் உலகம்"

காங்கேசன்துறைஅக் 15

காங்கேசன் துறை மாவட்டச் சாரணர் சங்கம் "சாரணர் உலகம்" என்னும் மாதசஞ்சிகை ஒன்றை வெளியிட்டுள்ளது.

காங்கேசன் துறை மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் ஆசிரியராகக் கொண்டு இச் சஞ்சிகை வெளியிடப்படுகிறது. (இ68)

## காணவில்லை

### ச. சுபாஸ்கரன்

சாவகச்சேரியைச் சேர்ந்த சந்திரசேகரம் சுபாஸ்கரன் (குட்டி) (வயது 13) என்பவரை 6- 10- 88 ல் இருந்து காணவில்லை.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 6ம் வகுப்பிற் பயிலும் இவர் நீலக்கோடு போட்ட வெள்ளை நிறச் சேட்டும், நீலநிறக் காற்சட்டையும் அணிந்திருந்தார்.

சைக்கிளுடன் காணமற்போய் விட்டார். இவர் பற்றிய தகவலை சாவகச்சேரி கண்டி வீதி "ரஞ்சனா கபே" யிடம் தெரிவிக்கவும்.

(C/406) தகவல்: வே. நடராசா.

கரைச்சி தெற்கு பல.நோ.கூ. சங்கம்
கிளிநொச்சி

## பாவித்த லோறி உதிரிப்பாக பகிரங்க ஏல விற்பனை

11- 10- 88 அன்று நடைபெற இருந்த மேற்படி ஏல விற்பனை 18- 10- 88 முற்பகல் 10.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு
ப நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
(C.405)

## பொருத்தமான தொழில் நுட்பம் (Appropriate Technology)

எமது நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபாடும், ஆர்வமும் உள்ள அறிஞர்கள், பொருத்தமான தொழில்நுட்பக் கொள்கைகள் பற்றி அறிய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தில்லைநாதன்,
121, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(7030)

## மல்வத்தை...

[1ஆம் பக்க தொடர்ச்சி)

குடியேற்றும் திட்டமும் மறைமுகமாக நடைபெறுவதாகக் கூறப்படுகின்றது.

இதனால் இப்பகுதியில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டிருக்கிறது.

இந்த இராணுவ ஆக்கிரமிப்பையும் திட்டமிட்ட குடியேற்றத்தையும் தடுத்துநிறுத்துமாறு கோரும் மகஜர்களை பிரஜைகள் குழுவினர் இந்திய அமைதிப்படையினருக்கு அனுப்பி வைத்துள்ளனர். (உ-84)

## புனர்......

(1ஆம் பக்கதொடர்ச்சி)

இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

★ பொது மக்களைப் பாதுகாப்பதற்கான திட்டங்களுக்கு இலங்கை அரசுஒத்துழைப்புவழங்க வேண்டும்.

✶ மனித உரிமை மீறல் தொடர்பான சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் திட்டங்களுக்கும் இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

✶ சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சாசனததை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

✶ இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அவை பொதுமக்களைப் பாதிக்கும் பட்சத்தில், இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான ஜெனிவா உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை இந்தியாவும், இலங்கையும் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருகிறது (உ-ஐ)

## அம்பாறை.....

(1ம்-பக்கத் தொடர்ச்சி]

அருந்துதல் முதலான செயல்களிலும் ஈடுபடுவோர் கடுமையாக எம்மால் தண்டிக்கப்படுவர்"–எனும் சுவரொட்டிகளை இந்த இயக்கம் சாய்ந்தமருது பகுதியில் ஒட்டியுள்ளது. (உ-14)

## மதவாச்சி..

(1ம்-பக்கத் தொடர்ச்சி[

பிரதேசத்தில் வாழும் மக்களுக்கே பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் உள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உத்தரவாதம் தரப்பட்ட அமைதியும் பாதுகாப்பும் இது தானா?

இப்படி அறிக்கையில் திருமதி பண்டாரநாயக்கா கேட்டிருக்கிறார்.

(உ-எ)

## தென்பகுதி....

(1ஆம் பக்கதொடர்ச்சி)

கண்டி, ஹரிஸ்பத்துவ, யட்டிநுவர, மாத்தறை, வெலிகம, திக்வெல, [illegible] ஆகிய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (உ-எ-ஐ)

## A/L 90 விஞ்ஞான மாணவர்களுக்கு

✶ பொது இரசாயனம் ✶

ஆரம்பம் :- 16 - 10 - 88

பிரிவு III Sat / Sun 11 . 30 – 12 . 30

ஆசிரியர்:– Mr. நாகரெட்ணம் (B. Sc.)

3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C/597)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜீ. ஏ. சத்தியநாதன்

(உரும்பராய்)

திருமதி ஜீ. ஏ. சத்தியநாதன் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு. அல்பிரட் சத்தியநாதனின் அன்பு மனைவியும், தயாளி (கனடா), ஜெயா ஆகியோரின் அருமைத் தாயாரும் திரு. சத்தியகுமாரனின் (காந்தி – மாலைதீவு) மாமியாரும் திரு. ரி. தம்பிராஜாவின் (ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்) சகோதரியும் ஆவார். இன்று 15ஆம் திகதி காலை 10. 30 மணிக்கு நல்லடக்க ஆராதனை நடைபெற்று பூதவுடல் கோப்பாய் சென் மேரிஸ் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ஜெயா

ஜெயாபதி,
உரும்பராய். (7035)

### திரு. C. இராமநாதன்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

பிறவுண் வீதியைச் சேர்ந்த திரு. செல்லப்பா இராமநாதன் (இளைப்பாறிய S S.A) அவர்கள் 13ஆம்திகதி வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் அளவெட்டி காலம் சென்ற வென்றரசர் செல்லப்பா, தம்பதிகளின் மகனும் நீராவியடி வீரசிங்கம் தம்பதிகளின் மருமகனும், வைத்தீஸ்வரா வித்தியாலய ஓய்வு பெற்ற ஆசிரியை தையல் நாயகியின் கணவனும், மைதிலி (ஆசிரியை D. S சேனநாயக்கா வித்தியாலயம், கொழும்பு) மாதினி (U. K.) ஆகியோரின் தந்தையாரும், தியாகலிங்கம், (கனடா). ரவீந்திரன், (U. K) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அருணாசலம், கைலாயபிள்ளை, தனபாலசிங்கம் (R M. P), விசாலாட்சி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 15 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல்மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தை. இராமநாதன்
154, பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
(7034)

### திருமதி சிதம்பரம் கந்தையா

ஏழாலை வடக்கைச்சேர்ந்த திருமதி சிதம்பரம் கந்தையா 13-10-88 வியாழக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு கந்தையாவின் அன்பு மனைவியும், செல்லம்மா, காலஞ்சென்ற ஆசிரியர் ஆறுமுகம், இளைப்பாறிய ஆசிரியை இராசம்மா, இளைப்பாறிய ஆசிரியர் இராசரத்தினம், பேரம்பலம்.பேராசிரியர் குணரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும், இளைப்பாறிய ஆசிரியை உமையம்மாவின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-10-88 இல் நடந்தேறியது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
க.குணரத்தினம்.
(யா/பல்கலைக்கழகம்)
(7258)

### பொன்னையா சிறீதரன்

(உரிமையாளர் மதவடி பேக்கவுஸ், Morning Glory Cream House, சுன்னாகம்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த பொன்னையா, ராணிமலர் தம்பதியரின் புதல்வன் சிறீதரன் (கஜன்) அகாலமரணம் அடைந்தார். இவர் தமயந்தியின் அன்புக் கணவரும் புருசோத்மனின் பாசமுள்ள தந்தையும் வனஜா, லதா, மோகன் (Saudi Aradia) முரளீதரன், தாசன், கௌரி விஜித்தா, கீதா ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோண் (Bank of Ceylon Chunnakam) சோதிமலர் ஆகியோரின் மருமகனும், நாகமுத்து, தம்பிப்பிள்ளை ஆகியோரின் பெருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 15·10·88 சனிக்கிழமை பி.ப. 200 மணிககு ஆன்மா நல்லடக்கத்திற்காக ஏழாலை சேமக்காலைக்கு சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் உள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
யோண்

மின்சார நிலைய வீதி.
சுன்னாகம். (7260)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 15- 10- 1988இல அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Saturday 15th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Your Friends In Finance
**SHABRA**
61, New Bullers Road, Co-6.

சஞ்சீவி சஞ்சிகை

நிதித்துறையில்
நாணயம்மிக்க நண்பன்
**"ஷப்ரு"**
207, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

15-10-1988 சனிக்கிழமை

# பக்திதான் பெரிய செல்வம் அதுவே நாம் தேடும் லக்ஷ்மி!

'இதைத்தா, அதைத்தா' என்று நாம் பிரார்த்திக்க வேண்டியதே இல்லைதான்.

நம் யோக்கியதைக்கு என்ன தரவேண்டும் என்று அம்பாளுக்கே தெரியும்.

இருந்தாலும் நடைமுறையில் இப்படி விவேகத்துடன் இருக்க முடியமாட்டேன் என்கிறது.

'இது வேண்டும், அது வேண்டும்' என்பதற்காகத்தான் பிரார்த்தனை செய்கின்றோம்.

யோசித்துப் பார்த்தால் இதை அடியோடு தப்பு என்று சொல்லமுடியவில்லை.

கீதையில் பகவான் பக்தர்களை நான்கு தினுசாகப் பிரித்துச் சொல்கிறார்.

அதிலே மோக்ஷத்தை விரும்பி உபாசிக்கிற சாதகன், அந்த மோக்ஷ லட்சியத்தையே பிடித்துவிட்ட ஞானி ஆகிற இரு சாராரைச் சொன்னதோடு பகவான் நின்றுவிடவில்லை.

நோய், நொடி முதலான துன்பங்கள் நீங்குவதற்காகப் பிரார்த்திக்கிறவன், பொருளை வேண்டிப் பிரார்த்திக்கிறவன் ஆகிய இரு சாராரைக் கூட சேர்த்துக்கொள்கிறார்.

இம்மாதிரி லௌகிக சௌக்கியத்துக்காக வழிபடுகிறவர்கள்கூடத் தன்னைப் பூஜிப்பதாக பகவான் ஒப்புக்கொள்கிறார்.

**மகாசக்தி**

பகவானே ஒப்புக்கொண்ட விஷயத்தை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை.

ஆனால் கீதா சாஸ்திரம் முதலிய எந்த ஞான நூலாகட்டும், சமயகிரந்தமாகட்டும், இகலோக சௌக்கியங்களைத் தள்ளிவிட்டு சாசுவதமான பேரின்பத்தைத்தான்



காஞ்சி சுவாமி

நாட வேண்டும் என்பதை லட்சியமாக வலியுறுத்துகின்றன. அப்படியானால் பகவானே முரண்பாடாகப்பேசுகிறாரா? அப்படி அர்த்தமில்லை.

லௌகிக காரியங்களை எடுத்த எடுப்பில் யாராலும் விட்டுவிட முடிகிறதில்லை; ஆனாலும் இந்த நிலையில் இருக்கிறபோது கூட எல்லாம் நம்மாலேயே முடியும், நாம் நினைத்ததை எல்லாம் நாமே ராஜாவாக நடத்திக்கொள்ள முடியும் என்று நினைத்துவிடாமல் நமக்கு மேலே ஒரு மகா சக்தி இருக்கிறது, அதற்குச் சக்தி இருப்பதோடு கருணையும் இருக்கிறது. நாம் தழைந்து வேண்டினால் அது அனுக்கிரகம் பண்ணும் என்கிற நம்பிக்கை இருந்தால் அது விசேஷம் தானே?

பணம் வேண்டும், வீடு வேண்டும், பதவி வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்கிறபோது கூட இப்படி ஒரு மகாசக்தியிடம் நம்பிக்கை வைத்து அதனிடம் நம் அகங்காரத்தை எல்லாம் தாழ்த்திக் கொண்டு நிற்கின்றோம் அல்லவா!

அந்த மட்டில் இது நாஸ்திகத்தைவிட எத்தனையோ சிலாக்கியம் தானே?

முதலில் ஏதேதோ வஸ்துக்களுக்காகப் பகவானிடம் போகிறோம்; பூஜை, ஆலய தரிசனம், ஸ்தோத்திரம், ஜெபம் என்று செய்கிறோம். கொஞ்சம் இதுகளில் பிடிப்பு உண்டாக, உண்டாக மற்ற வஸ்துக்களில் பிடிப்புக் குறைகிறது. கடைசியில் பகவானுக்காகவே பகவானைப் பக்தி பண்ணவேண்டும் என்கிற ருசி பிறக்கிறது.

**லக்ஷ்மி கடாக்ஷம்**

அதனால்தான் லக்ஷ்மிகடாக்ஷத்தை விரும்பியே பக்தி செலுத்துகிறவர்களைக் கூட 'அர்த்தார்த்தி' என்று தனியாகச் சொல்லித் தன்னை பூஜிப்பவனாக பகவான் ஒப்புக்கொள்கிறார்.

'ஆசைக்கோர் அளவில்லை' என்றார்கள். முக்கியமாக செல்வம் வேண்டும் என்கிற ஆசைக்கு எல்லையே இல்லாமல் போய்விடுகிறது,

இதனால்தான் அனர்த்தம் எல்லாம் வந்துவிடுகிறது. ஞானம் வேண்டும், குணம் வேண்டும் என்றெல்லாம் பிரார்த்திக்கிறவர்கள் எங்கேயாவது துர்லபமாக இருப்பார்களோ என்னவோ?

லக்ஷ்மிகடாக்ஷத்துக்கு மட்டும் பிரார்த்திக்காதவர் இல்லை. இதிலே எந்தக் கோடீஸ்வரனுக்காவது திருப்தி வந்திருக்குமா என்றால் அதையும் காணோம்.

சௌக்கிய அனுபோகம் அதிகமாக ஆக ஞானம் வேண்டும் என்ற எண்ணம் குறைந்து கொண்டே போகிறது.

இதனால்தான் லக்ஷ்மி இருக்கிற இடத்தில் சரஸ்வதி இருப்பதில்லை என்று பொதுவில் வசனம் வந்துவிட்டது.

**வேடிக்கையான காரணம்**

இதற்கு வேடிக்கையாக ஒரு காரணம் தோன்றுகிறது.

சாதாரணமாக மாமியாரும் மாட்டுப்பெண்ணும் ஒரே இடத்தில் ஒத்து இருக்க மாட்டார்கள்.

மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் தகப்பனும் பிள்ளையும் ஆகிறார்கள் என்றால் அப்போது மஹாலக்ஷ்மியும் சரஸ்வதியும் மாமியார் மாட்டுப்பெண் ஆகிறார்கள்; இவர்கள் சேர்ந்து சௌஜன்யமாக இருக்கமாட்டார்களே! அதனால்தான் பொதுவில் லக்ஷ்மி கடாக்ஷம் இருக்கிற இடத்தில் சரஸ்வதி கடாக்ஷம் இருப்பதில்லை. அல்லது இதையே நல்லபடியாகச் சொல்லலாம்.

மாமியாரிடம் உள்ள மகா மரியாதை காரணமாகவே அவள் இருக்கிற இடத்தில் தான் முந்திரிக்கொட்டை மாதிரித் தெரியக்கூடாது என்று சரஸ்வதி ஒதுங்கிப் போவதாகவும் சொல்லலாம்.

இது எல்லாம் வேடிக்கையாகச் சொல்கிற பேச்சு.

**பராசக்தி**

உண்மையில் இருக்கிறது ஒரு பராசக்திதான்.

அவள்தான் எந்த எந்தச் சமயத்தில் எந்த எந்த விதமாக அனுக்கிரகம் செய்து பக்குவத்தைத் தரவேண்டுமோ அப்படிச் செய்வதற்காக மகாலக்ஷ்மியாக, சரஸ்வதியாக, ஞானம்பிகையாக வருகிறாள்.

ஏதோ ஒரு ரூபத்தில் பக்தி என்று வைத்துவிட்டால் போதும்.

அப்புறம் நடக்கவேண்டியதை அவளே பார்த்துக் கொள்வாள்.

இந்தப் பக்திதான் நமக்குப் பெரிய செல்வம். அதுவே பெரிய லக்ஷ்மி. ★

-காஞ்சி காமகோடி பரமாச்சாரியசுவாமிகள்-

## கருத்துக் கலசம்

மயூரா

### சக்தி வழிபாடு

இது நவராத்திரி காலம். சக்தி வழிபாடு விசேடமாக இயற்றப்படும் காலம். சக்தியின் மகத்துவத்தை உணர்த்தும் பொருட்டு எழுந்த விழாக் காலம். அன்னை பராசக்தியை முக்கோலத்தில், மூன்று உருவத்தில் ஏண்டு ஏற்றித் துதித்து, பூசித்து அருள்வேண்டும் காலம்.

சக்தி என்பது காணமுடியாத பேராற்றல்படைத்த ஒன்று. சக்தியை மனத்தில் உய்த்து உணர மட்டுமே முடியும். இந்த உலகம் மட்டுமன்றி அண்டசராசரங்கள் யாவும் கோடானுகோடி பிரபஞ்சக் கூற்றுகளும் சக்தியினால் இயங்குபவை.

சக்திதான் பிரபஞ்சம் இயங்குவதற்கு ஆதாரமானது: எல்லோருக்கும் ஆதாரமானவள் அன்னை. அன்னையே சக்தியாகவும் விளங்குவதால் தாய்மைக்கு முதலிடம் கொடுத்தல் அர்த்த புஷ்டியுடன் எமது பண்புகளில் ஒன்றாய் மலர்ந்தது; இன்னும் அது மிளிர்கிறது.

சக்தி வடிவானவள் அன்னை. சகல ஆற்றலையும் தரவல்ல சக்தியை அன்னையாக்கிப் பார்த்து அவளைப் பாடித் துதித்து, பூசித்து அருள்பெறும் பாங்கு சக்திக்கு உரிய மதிப்பை, மாட்சியை எடுத்துக் காட்டுவதாகவும் அமைகிறது.

சக்தியிலிருந்து தான் அறிவு, ஆற்றல், ஞானம், வீரம், பொருள் எல்லாமே உற்பத்தியாகின்றன. பிரபஞ்சங்களை இயக்க வல்ல சக்தி இல்லையேல் மனித இனம் மட்டுமன்றி உயிரினமே இருக்கமுடியாது. கோள்களின் பரிணமத்தை இயக்க சமத்துவத்தைப் பேணி அவற்றை பல ஆண்டுகளாக இயக்குவது சக்தி.

சக்தியை அன்னையாக்கிப் பார்க்கும் போது அன்னை பராசக்தியின் மகிமையும் மாட்சியும் உயர்ந்து நிற்கக் காண்கிறோம். வெளியில் தெரியாத தேவி (சக்தி), மகா காளியாக வந்து உலகை உருவாக்குகிறாள்; இயக்கவும் செய்கிறாள்.

ஆகையால் அன்னை வழிபாடு, சக்திவழிபாடு, அர்த்தம் நிறைந்த தத்துவ மயமானது. நவராத்திரி விழாவும் தத்துவம் பொருந்தியதே.

சக்தியைத் துர்க்கையாக, இலக்குமியாக, சரஸ்வதியாக உருவகித்துப் பூசிக்கின்றோம். வீரத்தின் தலைவி வீரத்தாய்- துர்க்கை. செல்வத்தின் தலைவி- செல்வத்தாய்- இலக்குமி ஞானத்தின் தலைவி- ஞானத்தாய் சரஸ்வதி. சரஸ்வதியையே நவராத்திரி நாயகியாகக் கொள்வதுண்டு: சரஸ்வதியே கலைவாணியுமாகிறாள்.

ஞானமும், செல்வமும், வீரமும் ஒன்று சேர வேண்டும். ஒன்றில்லாத மற்றது வலுக் குறைந்து விடும். சக்தியின் திருவருள் வாழ்வுக்கு இன்றியமையாதது.

எனவே நவராத்திரி விழாவை உணர்ந்து நயந்து அனுஷ்டியுங்கள். அது உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப் பெற ஒரு கால்கோலாக அமையும். ✱

# வாழ்வின் தர்மவிதிகளை வலியுறுத்துவது இந்துமதம்

குருக்ஷேத்திர யுத்தகளத்தில் ஒரு காட்சி. பாண்டவர்களும் கௌரவர்களும் எதிர் எதிரே அணிவகுத்து நிற்கிறார்கள். யுத்தம் ஆரம்பிக்கச் சிறுபொழுதே இருந்தது. யுத்த நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதாக இரு பகுதியினரும் வாக்குறுதி செய்கிறார்கள்.

நிராயுதபாணிகளை தாக்குவதில்லை. இரவில் யுத்தம் செய்வதில்லை. தூக்கத்தில் இருக்கும் எதிரிகளைத் தாக்குவதில்லை. எதிரியிடம் என்ன ஆயுதம் இருக்கிறதோ அதற்கு ஒப்பான ஆயுதத்தைக் கொண்டே தாக்குதல் வேண்டும். குதிரை வீரன் எதிர்ப்படையில் உள்ள குதிரைவீரனையே தாக்கலாம். தரையில் நிற்பவனைத் தாக்கக் கூடாது. சரணடைந்தவர்களைப் பாதுகாத்தல் வேண்டும். யுத்தத்துக்குத் தயார் நிலையில் இல்லாதவனையும், ஆயுதங்களை இழந்துவிட்டவனையும், பின்வாங்கி ஓடுபவனையும் கொல்லலாகாது. இவ்வாறான நேர்மையின் அடிப்படையில் வகுக்கப்பட்ட நியதிகளைக் கொண்டதே யுத்த தர்மம்.

**யுத்ததர்மம்**

யுத்த தர்மத்தைப் பேணுவதாக வாக்குறுதி செய்த கையோடு பாண்டவர்களின் அணியிலிருந்த யுதிஸ்திரன் தனது தேரைவிட்டு இறங்கி நிராயுதபாணியாகச் சென்று எதிரிகளின் அணியில் இருந்த தனது பாட்டனார் பீஷ்மரையும் குரு துரோணரையும் வலம் வந்து காலில் விழுந்து வணங்கி அவர்களது நல்லாசிகளைக் கோருகின்றான்.

தன்னை வளர்த்து ஆளாக்கிய பாட்டனார் பீஷ்மரையும் சகல கலைகளையும் போதித்த குரு துரோணரையும் எதிர்க்கப் போகிறோமே என்ற ஆதங்கத்தில் அவர்களை எதிர்த்துப் போர் புரிவதற்கு அவர்கள் அனுமதியைக் கேட்கின்றான் யுதிஸ்திரன். இது க்ஷத்திரிய தர்மம். சிஷ்ய தர்மம்.

-அ. குமரகுரு-

பீஷ்மரும் துரோணரும் நல்ல ஆசானுக்குரிய மரபுகளுக்கேற்ப தங்களால் உருவாக்கப்பட்ட யுதிஸ்திரனை மனதார வாழ்த்தி 'நீ தர்மத்தைச் சார்ந்து நிற்கின்றாய்! வெற்றிக்குரியவனாக' என்று ஆசிகூறினார்கள். இது குரு தர்மம்.

இவ்வாறாக வேதகாலத்தில் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு வாழ்க்கை முறைக்கும் அதற்குரிய தர்மம் வலியுறுத்தப்பட்டது.

**வாழ்க்கை தர்மம்**

நல்ல குடும்பஸ்தர்களுக்கு கிரஹஸ்த தர்மமும் நல் மனைவிகளுக்கு பத்தினி தர்மமும் உணர்த்தப்பட்டன.

வைத்தியர்களுக்கொரு தர்மம், சிற்பிகளுக்கொரு தர்மம் என எல்லாத் தொழிற்துறைகளில் உள்ளவர்களுக்கும் அதற்குரிய தர்மம் எது என நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

பிராமணர்கள் க்ஷத்திரியர்கள், வைசியர்களுக்கு அவரவருக்குரிய 'வர்ண தர்மம்' நடைமுறையிலிருந்தது. சாமான்ய மக்கள் எல்லோருக்கும் பொதுவான 'சாமான்ய தர்மம்' கடைப்பிடிக்கப்பட்டது அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், சௌச்சம், இந்திரிய நிக்கிரஹம் என்னும் ஒழுக்க நெறிகள் ''சாமான்ய தர்மம்'' எனப்பட்டன,

நாளாந்த வாழ்க்கையின் நெறிகளையும் ஒழுக்கங்களையும் வலியுறுத்தும் தர்மவிதிகளை மனுசு மிருதிகள் அல்லது யுக தர்மம் என்று அழைக்கப்பட்டன. இவைகள் காலமாறுதல்களுக்கேற்ப மாற்றம் பெறுபவை.

மனித இயல்புகள், ஆன்மாவின் தன்மை, பரப்பிரம்மத்தின் தன்மை, ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு, அண்டத்தின் சிருஷ்டி, பிரளயம் போன்ற விடயங்களைப் பற்றிய நெறிமுறைகள் காலாதிகாலமும் மாற்றமடையாத சாசுவதமான சுருதிகள், இது தான் சனாதன தர்மம்.

சாசுவதமான இத்தர்மத்துக்குப் பெயர் இந்துமதம்.

## உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது!



வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.


பாட்டாளி சேர்பொற்கொன்றையோ பாரிலில்லாக் கற்பகமோ
வாட்டமுறுதவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டாளி சேர்பொற் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது.

- சுவாமி விபுலானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்தமனத்தில் ஓர் உதயம்

சஞ்சீவி சிறுகதை



ஏதேதோ சொல்லி உரக்கக் கத்தினான் விசு. அவனது இதயத்திற்குத் தெரியும் அது அவளுக்குக் கேட்காது என்று. இருந்தும் அவன் எத்தனை நாள் இப்படிச் செய்திருப்பான்?

சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டான். ஒருமுறை இழுத்து நெஞ்சைப் புகையால் நிரப்பி கண்களை ஒரு கணம் மூடி அதன் சுகத்தை அனுபவித்து வெளியே ஊதினான். புகையுடன் சேர்த்து மன உளைச்சல்களையும் ஊதிவிடத் தெண்டிக்கிறானா?

அவள் எங்கோ சந்தோஷமாக இருந்து கொண்டிருப்பாள். இவன் ஏன் படிப்பை வெறுத்துக் குடித்து தன்னைத் தானே அழித்துக் கொண்டிருக்கிறான்?

அவனருகே கந்தசாமி நின்று கொண்டிருந்தான். ''ஐயா!'' என மெதுவாக அழைத்தான். எதையோ அவனுக்குச் சொல்வதற்குத் தயங்கினான். ஒருவாறு தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அவனுக்குச் சொல்ல முயன்ற போது—

''டேய் கந்தசாமி! நல்லையா கடையிலை போய் நாலு சிகரெட் வாங்கியா'' பத்துரூபா நோட்டை அவனிடம் நீட்டினான் விசு. கந்தசாமி அதை பயபக்தியுடன் வாங்கிக் கொண்டு கடையை நோக்கி நடந்தான்.

கடவுளுக்குத்தான் எத்தனை ஓரவஞ்சனை. கந்தசாமிக்கும் அவனைப் போன்றவர்களுக்கும் வசதியைக் கொடுக்காத போதும் எவ்வளவு மனநிறைவையும் சந்தோஷத்தையும் கொடுத்திருக்கிறான். அவர்கள் எவ்வளவு துடிப்புடன் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவன் இந்த மரநிழலில் அரை மயக்கத்தில்...

உலகில் அறிவுரை சொல்லத்தான் எத்தனை மனிதர்கள். உலகிலேயே மிக இலகுவாக வழங்கக்கூடியது அது ஒன்றுதானே? அது அவனுக்குத் தாராளமாகக் கிடைக்கிறது. சிறிதளவு போட்டுக் கொண்டால் அவனே புத்திஜீவியாகி விடுவான். அறிவுரைகளை அள்ளி வழங்குவான்.

'சீதனக் கொடுமையால் கரைசேர முடியாது கண்ணீர் சிந்தும் சகோதரிகளே! உங்கள் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள். உங்கள் சாதி, அந்தஸ்து என்னும் போர்வைகளை நீக்கிவிட்டு வெளியே வாருங்கள். உங்களுக்காகப் பல கரைகள் காத்துக் கிடக்கின்றன'

அவனது இந்த அறிவுரையைக் கேட்டவர்கள் அவனது துயரங்கள் சாதி, அந்தஸ்து என்னும் அத்திவாரங்களில் எழுந்தவை என எண்ணக் கூடும். சில சமயம் அதுதான் உண்மையோ?

'பெண்களுக்கு ஆண்களை விடச் சிறிய இதயம் என்று சொல்லுவார்கள். அதனால் தானோ அவள் அப்படி எல்லாம் நடந்து கொண்டாள்' என அவன் அடிக்கடி எண்ணிப் பார்ப்பதுண்டு.

காலம் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருக்கிறது. வழிவழியே எத்தனை நெஞ்சங்களை மிதித்துக்கொண்டு அந்த இனிய காலத்தில் அவன் இதயத்தில் பூத்த கவிதை மலர்கள் சசங்கிக் கருகிக் காலத்தின் காலடியில் சிக்கிச் சேறு போலாகிக் கிடக்கின்றன.

கந்தசாமி சிகரெட்டுடன் வந்தான். அது எவ்வளவு நேரத்துக்குத் தாக்குப்பிடிக்கும்?

'ஐயா! உங்கடை வீட்டை வந்து சொல்ல வேணுமெண்டு தான் இருந்தனான். பிறகு நேரமில்லாமல் போச்சுது. என்ரை மகன் இனிமேல் உங்கடை வீட்டை வேலைக்கு வரமாட்டான்'

சொல்லிவிட்டுச் செல்வதற்கு ஆயத்தமான கந்தசாமியை இடைமறித்தான் விசு:

''டேய்!எங்கை அவசரமாய் போறாய். இரன் கொஞ்சத்துக்குக் கதைப்பம்''

''ஐயா! நான் போகவேணும்'

'இவன் குடிகாறனோடை என்ன பேச்சு' எண்டு நீயும் நினைச்சிட்டாய் என்ன? டேய்! எல்லாருமே என்னைப் புறக்கணிச்சால் என்ரை கவலையளை யாரிட்டைச் சொல்லுறது''

'சீச்சி இல்லை ஐயா?' என்று கூறிக்கொண்டே கந்தசாமி மரவேரொன்றில் உட்கார்ந்தான். அவனை ஊடுருவிப் பார்த்தான். இரண்டு வாரங்களுக்கு மேலாகச் சவரம் செய்யப்படாதிருக்கும் விசுவினது முகத்தில் தொனிக்கும் உணர்ச்சிகளை அவனால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

'கந்தசாமி! என்ன அப்பிடிப் பார்க்கிறாய் தலையிலை என்ன காயமெண்டு பாக்கிறியோ? நேற்று விழுந்தனான். மூளையிலை சரியாய் அடிபட்டுதெண்டு டொக்ரேஸ் சொன்னவை. நான் அதை நம்பேல்லை. ஏனென்டால் எனக்குத்தானே மூளையே இல்லை எண்டு எல்லாரும் கதைக்கிறாங்கள். சின்னனிலை நான் சரியான கெட்டிக்காறன். எல்லாப் பாடத்துக்கும் 100 மாக்ஸ். இவன் சுத்தப் பொய் சொல்லுறான் எண்டு பாக்கிறியா? உலகமே பொய் தாண்டா. கதையள், கவிதையள், படங்கள், விளம்பரங்கள் இதுகள் எல்லாமே பொய்தாண்டா சொல்லுது. கவிஞர் ஒருநாள் சொல்லுறார் மங்கை மயிலோடு சொந்தமாம். நானும் அப்பிடித்தான் சொன்னனான். இதை கூர்ப்பு ரீதியாய்ப் பார்த்தால் மயிலோடை சொந்தமில்லை கூடியளவு குரங்கோடை தாண்டா சொந்தம். அது தான் உண்மை. ஆனால் அந்த உண்மையை ஒருத்தரும் சொல்லுறேல்லை'

அவனைத் தொடர்ந்து பேசவிடாமல் இருமல் தடுத்தது. இருமினான்.

'டேய் கந்தசாமி! என்னைச் சிகரெட் குடிக்க வேண்டாமாம். குடிச்சால்கெதியிலை செத்துப்போயிடுவனாமாம் எண்டு டொக்ரேஸ் சொல்லுகினம். இல்லை. தெரியாமல்தான் கேக்கிறன் அப்பிடியெண்டால் அவை ஏன் குடிக்கினம். ஊருக்கு மட்டும் உபதேசமா?

சிறிது நேரம் எதையோ வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தான். தொடர்ந்து பேசினான்.

'நான் ஏன் குடிக்கிறன் எண்டு கேக்கிறியா? மறக்கத் தாண்டா. அது தான் அதோடை சம்பந்தமில்லாத ஏதேதோ கதையள் எல்லாத்தையும் வில்லங்கத்துக்குக் கதைச்சுப் பாக்கிறன். உலகத்திலை ஒரு இடத்திலை உதயம் எண்டால் எங்கையோ ஒரு இடத்திலை அஸ்தமனம் இருந்துதான் ஆகவேணும். அவளின்ரை வாழ்க்கேன்ரை உதயம் என்ரை அஸ்தமனத்திலையாய் இருந்தால் நான் இப்படியே ஒரு நாளைக்கு அஸ்தமிச்சுப் போயிடுவேன்'

மூச்சுவிடாமல் எதையோ எல்லாம் பேசிவிட்டு அமைதியாக இருந்தான் விசு. கந்தசாமி அவனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

சிறிதுநேர மௌனம்

கந்தசாமிக்கு எதுவும் தெளிவாகப் புரியவில்லை. என்ன சொல்ல வேண்டுமென்றும் தெரியவில்லை. ஆனால் நான் வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்ற உந்தல் மட்டும் அவன் உள்ளத்தில் இருந்துகொண்டிருந்தது.

'ஐயா! பொழுது படுகுது. நீங்கள் இனி வீட்டிற்குப் போங்கோவன். என்ரை மகன் இனிமேல் வேலைக்கு வரமாட்டான் எண்டும் வீட்டிலை சொல்லிவிடுங்கோ'

விசு வரட்சியாகச் சிரித்தான். ஒவ்வொருவனுக்கும் தன் தன் அலுவல்கள் என்று எண்ணிக் கொண்டானோ?

ஏன்: என்னவாம்: மூன்று நாலுநாளாய் ஆளைக்காணேலை எண்டு வீட்டிலை ஏதோ கதைச்சவை'

சிறிதுநேரம் கந்தசாமி பதில் எதுவும் கூறவில்லை. எதையோ உற்று நோக்கிக் கொண்டிருந்தான். பின் அமைதியாகப் பேசினான்.

'அவன் செத்துப்போனான் ஐயா!...... ஒரு நாள் முழுக்க சரியான காய்ச்சலும் சத்தியுமாய் இருந்தது. அடுத்தநாள் காலைமை இருந்தாப்போலை...'

விசுவிற்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. கந்தசாமியின் கண்களை ஊடுருவிப் பார்த்தான்.

'டேய்! நீயும் ஒரு மனிசனா? உனக்குக் காசுதான் இல்லையெண்டு நினைச்சன். ஆனால் இப்பதான் தெரியுது உனக்கு இதயமும் இல்லை எண்டு. உன்ரை வீட்டை பிறந்து வளர்ந்த ஒரு உயிர் இனிமேல் பார்க்கவே முடியாத ஒரு இடத்துக்குப் போயிட்டுது. உன்ரை மனதிலை ஒரு சின்ன உறுத்தல் கூட இல்லாமல் உன்ரை அலுவல்களைப் பார்த்துக்கொண்டு திரியிறியே! இந்தளவு நேரமாய் என்னோடை கதைச்சுக்கொண்டிருக்கின்றாய். இதைப்பற்றி ஒரு சொல்லுக் கதைப்பமெண்டு உனக்கு நினைவு வரேலைத்தானே. சீ! என்ரை முகத்திலையும் முளிக்காதை'

கூறிவிட்டு விசு எழுந்து வீடுநோக்கி நடந்தான். பின்புறம் ஏதோ சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். கந்தசாமி அழுதுகொண்டிருந்தான்.

சால்வையால் முகத்தை மூடி விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான். அவன் நடிக்கவில்லை ஊர் உலகத்திற்குக் காட்ட அழுபவன்போல் இல்லை, பொங்கிவரும் அழுகையை அடக்க முயன்று தோற்றுப்போய் குலுங்கிக் குலுங்கி அழுதான்.

விசு கந்தசாமியருகில் வந்தான் 'கந்தசாமி! என்னை மன்னிச்சுக்கொள். உன்ரை மனநிலையைத் தெரியாமல் சொல்லிப் போட்டன்.

ஐயா!... நீங்கள் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறியள். இதைப்பற்றியும் சொல்லி உங்கடை மனதைக் குளப்பப் படாதெண்டுதான் நான் இந்தளவு நேரமும் இதைப்பற்றி ஒண்டும் சொல்லேல்லை. அவனைச் சாகும் வரைக்கும் என்னாலை மறக்கவே ஏலாது, ஆனால் நான் நாலுநாளைக்கு கவலைப் பட்டுக்கொண்டு மரத்தடியில் படுத்துக் கிடந்தால் நானும் என்ரை நாலு பிள்ளையளும் பட்டினிதான் கிடக்கவேணும்'

அவன் இன்னும் ஏதேதோ சொன்னான். அழுதான். பின் அவசரம் அவசரமாக முகத்தைத் துடைத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தான்.

விசு அவனையே பார்த்துக் கொண்டிருந்தான், அவன் உள்ளத்தில் ஓர் உதயம் ஒளிக்கீற்றாகத் தென்பட ஆரம்பிக்கிறது. 'கண்டறியாத அவளும் உதயமும் அஸ்தமனமும்' என்று எண்ணிக்கொண்டான். தன் கடமைகளைச் செய்யத் தயாராகிவிட்டானோ?

★

- உரும்பராய் சிவன் சுதன் -

ஆங்கிலத்தில் பேச வேண்டும்
என்ற விருப்பம் -
ஆனால் தவறாகப் பேசி
விடுவோமே என்ற தயக்கம் -
இதுதானே
உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்
இதனைக் கருத்திற் கொண்டு

BRIGHT TRAINING CENTRE

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில்,
மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க.

BRIGHT
TRAINING CENTRE
P. O. Box 162, Colombo.
(7160)

# வாசகர் தராசு

## தித்திக்கும் சஞ்சிகையே!

திக்கெட்டும் சுவைபரப்பும்
தித்திக்கும் சஞ்சிகையே
பக்திக்கும் புத்திக்கும்
புத்தூக்கம் அளிப்பவளே
வாரத்தில் ஒரு நாளே—உன்
வண்ணமுகம் கண்டால்—என்
துன்பங்கள் சோம்பல்கள்
எல்லாமே ஓடிவிடும்
என்றென்றும் தவறாமல்
எம் அறிவை வளர்த்திடுவாய்
அதிசயங்கள் அறியவைப்பாய்.

— க. கலா, நெடுந்தீவு

★

## அறிவை வளர்க்கும் சஞ்சீவி

சஞ்சீவி — ஒரு மருந்து. பெயர், நல்ல பொருத்தமாக அமைந்துள்ளது.

எமது அறிவை வளர்க்க சஞ்சீவி எமக்கு உறுதுணையாக அமைகிறது.

— விஜிதா, சாவகச்சேரி.

★

## மகிழ்ச்சி தரும் சஞ்சீவி

சனிக்கிழமை தோறும் சஞ்சீவி சஞ்சிகையில் சிறந்த கட்டுரைகள், கதைகள், கவிதைகள போன்றவற்றை வாசிக்கக்கூடியதாக உள்ளது. மகிழ்ச்சியுடன் வாசிக்கின்றோம்.

— பழனி லோகநாதன், சுன்னாகம்.

★

## சஞ்சிகை பிரமாதம்

ஒவ்வொரு சனிக்கிழமையும் மலர்ந்து மணம் வீசும் சஞ்சீவி மலரின் ஒவ்வொரு இதழும் பிரமாதம்.

என்போன்ற கலை, இலக்கிய உள்ளங்கள் வளம்பெற உன்பணி தொடரட்டும். வாழ்த்துக்கள்.

— [illegible]

# மருத்துவம் தோன்றிய வரலாறு

சில சமயங்களில் நாய், பூனை ஆகிய மிருகங்கள் குப்பைமேனி, அறுகம் புல் போன்ற தாவரங்களைப் புசிப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் மேற் கூறியவற்றை அவை தமது அன்றாட உணவில் சேர்ப்பவை அல்ல என்பது தெரிந்ததே.

அப்படி இருந்தும் அவை ஏன் இந்த உணவுகளைப்புசிக்கின்றன? இவற்றை உண்ண வேண்டும் என்ற அறிவு யாராலும் அவற்றிற்குப் புகட்டப் படவும் இல்லை.

ஆனால் தாம் அனுபவத்தில் கண்டவற்றையே இந்த ஐந்தறிவு ஜீவன்கள் செய்கின்றன. அதாவது முதல்நாள் தாம் உண்ட உணவு ஜீரணம் ஆகாத நிலையில் அவற்றை வெளியே அகற்றுவதற்கு அவை பயன்படுத்திய 'மருந்து' இத்தாவரங்களாகும்.

### பறவையின் சிகிச்சை

15 ஆம் நூற்றுண்டளவில் சொலமின் என்னும் அரசன் நைல்நதிக்கரையில் ஒரு பறவை உருண்டு புரள்வதைக் கண்டான்.

சில நிமிடநேரம் அப்பறவையை அவதானித்துக் கொண்டிருந்தபோது அப்பறவை தனது நீண்ட சொண்டால் ஆற்று நீரை எடுத்து அதன் குதத்தினுள் (Rectum) செலுத்தியது.

அவ்வாறே இரண்டு மூன்று தடவை மீண்டும் மீண்டும் செலுத்தியது. பின்னர் அது மிகுந்த அளவில் மலம் கழித்தது.

அதன்பின்னர் அப்பறவை தன் உணவை விரும்பி உட்கொண்டதை அவதானித்துக் கொண்டிருந்த அரசன், அப்பறவை மலம் கழித்த இடத்திற்குச் சென்று பார்த்தான்.

அங்கு ஜீரணிக்காத உணவுகள் மலத்துடன் இருப்பதைக் கண்டான்.

இதிலிருந்து பறவை அஜீரணத்தால் வருந்தியது என்பதை ஊகிக்க முடிகின்றது. அதாவது கடல் நீரிலுள்ள உப்பு(Nacl)பறவைக்கு வயிற்றோட்டத்தை உண்டுபண்ணியுள்ளது என்ற முடிவுக்கு வரலாம்.

இதிலிருந்துதான் Enema என்னும் முறை கையாளப்படுகிறது. தற்போது இம்முறை மானிட சிகிச்சைமுறையில் முக்கியஇடம் வகிக்கின்றது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆதிகால மனிதர்களுக்கு காய்ச்சல், அம்மை போன்ற நோய்களும், உடல்வேதனையும், மரணமும் பெரும் புதிராகவே இருந்துவந்தது.

வைத்தியர்கள் என்று கூறப்பட்டு வந்தவர்களிடம் மந்திர தந்திரங்களுடன் ஏதோ சிகிச்சை பெற்றுவந்தனர்.

இதனால் மக்கள்பல துயரங்களையும், இடர்ப்பாடுகளையும் அனுபவித்து வந்தனர். சிறிது அறிவு வளர வளர, துயரங்கள் நீங்க அவர்கள் கையாண்ட வழிவகைகள் மருத்துவமாக பரிணமித்தது.

இவ்வாறாக உலகின் ஒவ்வொரு இனமும் தமது சுற்றாடலுக்கமைய அதாவது அந்தந்த நாடுகளின் வெட்ப, தட்ப நிலைகளுக்கேற்ப, அங்குள்ள மூலிகைகளுக்கேற்பவும், (Medicinal Plant) ஒவ்வொரு நோய்களுக்கும் மருந்தைக் கண்டுபிடித்தார்கள்.

சிலநாட்டவர்கள் தாங்கள் கண்டறிந்த மருத்துவத்தைப் பிறருக்குப் பயன்படக்கூடாது என்பதற்காக எழுதிவைக்காது தங்கள் பரம்பரைக்கே விட்டுச் சென்றனர். சிலர் எழுதி வைத்தனர்.

### மூலிகைகள்

அவ்வாறு எழுதிவைக்கப்பட்ட ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட மூலிகைகள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உட்படுத்தி இரசாயனமயப்படுத்தப்பட்ட (Chemicalized) ஔடதங்களாகவும்(Mixture) Sugar Coat பண்ணப்பட்டு குளிகைகளாகவும் இன்று உருமாறிவிட்டன.

உலகம் ஆரம்பமானதிலிருந்து மக்கள் பல துயரங்களை அனுபவித்து வந்தனர். அதாவது இவர்கள் பெற்றுவந்த சத்திரசிகிச்சை படுபயங்கரமானதாக இருந்தது.

நோயின் வேதனை தாங்காமல் இறக்க எண்ணியவர்கள் தங்களை இச்சத்திர சிகிச்சை செய்துவந்தவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் உபயோகித்து வந்த உபகரணங்களைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை.

### சத்திரசிகிச்சை

கூர்மையாகச் செதுக்கப்பட்ட திக்கல்லை (Flint) எடுத்து சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய பாகத்தைக் கிழித்துத் தைத்து விடுவார்கள்.

அதன்பின் நோயாளி தப்புவது விதிவிட்டவழி. விஞ்ஞானம் வளர வளர அந்நிலை மாறி அதிநவீன கருவிகளால் சத்திரசிகிச்சை, மக்களுக்குத் துயரங்கள் குறைக்கப்பட்டு; நடைபெற்று வருகின்றது.

ஆனால் இன்று குறிப்பிட்ட சத்திரசிகிச்சைக்கு உட்படுத்த வேண்டிய பாகம் வெட்டப்படாமல் சத்திரசிகிச்சை நடைபெறுகிறது. இம்முறை அண்மையில் மூளை சத்திர சிகிச்சை டாக்டர்களினால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

★

- நா. வர்ணகுலேந்திரன் -

## கவித்துளி

### அவதி

நீளவகிடெடுத்து
நீள் விழியில் மையிட்டு
ஆள் மயக்கும்
ஆடை அணிந்து
ஆரணங்கு அவதிப்பட்டாள்!
ஏனாம்...?
பூஜைக்கு நேரம் போச்சாம்.

### குப்பைகள்

வீட்டுத் தேவைகள்
முடிந்த பின்
வீதியில் வீசப்பட்ட
குப்பைகளாம் நாங்கள்
மீண்டும் எங்களைக்
கூட்டி அள்ளி...
தங்கள் உணவுக்கு எருவாக
புதைத்து விடுகிறார்கள்
ஏனென்றால் நாங்கள்
ஒன்றுக்கும் உதவாத
வெறும் குப்பைகளாம்.

- குமார் தனபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணாவின் கேள்வி!



அறிஞர் அண்ணாவிடம் ஒருசமயம் இந்தி ஆதரவாளர் ஒருவர் தனது ஐயத்தைக் கேட்டார்.

'தமிழ் மிக அழகான மொழி தான். ஆனால் இந்திதானே இந்த நாட்டில் அதிகமான வர்களால் பேசப்படுகிறது. அதனால் இந்தியைத்தானே இந்தநாட்டு தேசிய ஆட்சி மொழியாக வைக்கமுடியும்? இதை ஏன் நீங்கள் எதிர்க்கிறீர்கள்?

இதற்கு அண்ணா தனக்கே உரிய புன்னகையுடன் பதில் அளித்தார்.

அப்படியானால் இந்தியாவில் அதிகம் இருப்பது காகங்கள்தானே? அவைகளை இந்திய தேசியப் பறவையாக அறிவிக்காமல் மிக குறைவாக வாழும் மயில்களை அறிவித்தது ஏன்?

அண்ணாவின் இந்தப் பதிலைக் கேட்டு இந்தி ஆதரவாளர் வாய்மூடி நழுவினார். (—ச)

## சீனாவில் அதிசய அருங்காட்சிசாலை

சீனாவில் சிப்போ ... நகரில் மிகப்பெரிய அளவில் அதிசய அருங் காட்சியம் ஒன்றுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தில் கிட்டத்தட்ட 600 க்கும் மேற்பட்ட இறந்த குதிரைகளின் எலும்புக் கூடுகளை மக்கள் பார்வையில் வைத்திருக்கிறார்கள்.

அதிவிரைவாக ரேஸ்களில் ஓடிய குதிரைகளின் எலும்புக் கூடுகளும் ராணுவத்துக்காக பயன்படுத்தப்பட்ட போர்க் குதிரைகளின் எலும்புக்கூடுகளும் இந்த அருங்காட்சியகத்தில் முக்கிய இடம்பெற்றுள்ளன.

மேலும் உயிருடன் இருக்கும்போது வெகு சிறப்பாக இயங்கியகுதிரைகள் உலகில் எந்த இடத்தில் இருந்தாலும் அவைகள் இறந்தவுடன் அதன் எலும்புக்கூடுகளை சீனா பெற்றுக்கொள்ள முன் வந்திருக்கிறது. ★

## வாழை இலை வாழ வைக்கும்

இப்பொழுது எல்லாம் தட்டுக்களில் சாப்பிடுவது வழக்கமாகிவிட்டது,

ஆனால் ஆரோக்கியத்திற்கு அது சரிஇல்லை.

இலையில், முக்கியமாக வாழை இலையில் சாப்பிடுவது பலவகையிலும் ஆரோக்கியத்துக்கு நல்லது.

வாழை இலையில் தவறாமல் உணவுபோட்டுச் சாப்பிட்டு வந்தால்,

முகம் பளபளக்கும்.

அழகும் கவர்ச்சியும் கூடும்.

தலைமுடி நரைப்பது தள்ளிப்போகும்.

கண்பார்வையும் கூடிவரும்.

நம் முன்னோர்கள் ஏன் தவறாமல் வாழை இலையில் சாப்பிட்டுவந்தார்கள் என்று இப்பொழுது தெரிகிறது அல்லவா.

—'பொது அறிவுக் களஞ்சியம்' நூலிலிருந்து. ★

## உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனை

உலகின் அதிவேக பெண் ஓட்டவீராங்கனை என்றபட்டமும் அதற்கான தங்கப்பதக்கமும் புளோரன்ஸ் கிரிபித் ஜோய்னர் என்ற அமெரிக்கப் பெண்ணுக்குக் கிடைத்திருக்கிறது.

100 மீற்றர் தூரத்தை அவர் 10.54 வினாடிகளில் ஓடி முடித்தார்.

'எப்படி உலகின் அதிவேக ஓட்ட வீராங்கனையாக வருவது என்று கடவுளை யாசித்தேன். பதில் கிடைத்துவிட்டது' —என்றார் புளோரன்ஸ். ★

ஒரு விண்வெளி வீராங்கனையின் விருப்பம்

# 'செவ்வாய்க் கிரகத்தில் 'பனிச்சறுக்கு' விளையாட்டு

அமெரிக்காவில் மேலும் பல வீராங்கனைகள் விண்வெளியில் பறக்கத் தயாராக இருக்கின்றார்கள்.

விண்வெளி வீராங்கனையான மேரி கிளீவ் கூறும் போது,

"எனக்கு மட்டும் அதிகாரங்கள் இருந்தால் விண்வெளிக் கலங்களை அடிக்கடி ஏவ வேண்டுமென உத்தர விடுவேன். இதன் மூலம் அடிக்கடி விண்வெளிப் பயணம் செய்வேன்"— என்கிறார்.

1989 ஆம் ஆண்டு ஏப்ரலில் விண்ணில் அமெரிக்கா ஏவ இருக்கும் விண்வெளிக் கலத்தில் பயணம் செய்ய உள்ளார் மேரி கிளீவ்.

செவ்வாய்க் கிரகத்தில் பனிச் சிகரங்களில் சறுக்கு விளையாடவேண்டும் என்று இவர் ஆசைப்படுகின்றார்.

1980 இல் விண்வெளி வீரர்கள் அணியில் சேர்ந்தார்.

1985 இல் முதலாவது விண்வெளிப் பயணத்தை 'அட்லாண்டிஸ்' எனும் விண்வெளிக் கலத்தில் மேற்கொண்டார்.

இதனிடையில் —

செவ்வாய்க்கிரகத்தை நோக்கி அனுப்பப்பட்ட போபோஸ் - 1 விண்கலத்தில் தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்கலத்தைக் கடந்த ஜூலையில் சோவியத் யூனியன் அனுப்பியது.

செவ்வாய்க் கிரகத்தையும் அதைச் சுற்றியுள்ள சந்திரன் போபஸையும் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவே இந்த போபஸ் - 1 அனுப்பப்பட்டது.

தரையில் இருந்து அனுப்பப்பட்ட பிழையான தகவல்களே இவ்விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

எல்லாம் சரியானபடி நடந்தால், அடுத்த ஜனவரியில் இந்த விண்கலம் தனது பணியைத் தொடங்கவேண்டும்.

ஆனால் இப்போது ஏற்பட்டு உள்ள கோளாறு, விண்கலத்தையே பயனற்றதாக்கிவிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் போபஸ் - 1 அனுப்பப்பட்டு ஒரு வாரம் கழித்து போபஸ் - 2 விண்கலம் அனுப்பப்பட்டது. அது நன்றாகச் செயல்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ★

## சஞ்சய் காந்தி மனைவி நாவலாசிரியை ஆகிறார்

மேனகா காந்தி நாவலாசிரியாக மாறியிருக்கிறார்.

இந்தியாவின் பிரச்சினைக்குரிய அரசியல் வாதியான அவர் 'சூர்யா' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

இப்போது மிருக வளர்ப்புச் சங்கப் பிரமுகராக இருக்கிறார்.

பிரதமர் ராஜீவின் தம்பி சஞ்சயின் மனைவியான இவர் 'பெலிலபாபா' என்ற கதை ஒன்றை எழுதியிருக்கின்றார்.

கொழுகொழு இளவரசர் ஒருவர் அழகிய பெண் ஒருத்தியை மனைவியாக அடைய எடுக்கும் முயற்சிகளை இக்கதை சித்தரிக்கின்றது.

மகன் வருண்பெரோஸுக்கு குழந்தைப் பருவத்தில் மேனகா காந்தி சொன்ன கதையை அடிப்படையாக வைத்தே இது எழுதப்பட்டிருக்கின்றது.

கதையை வாசித்த அன்பர்கள் பிரசுரிக்கச் சொல்லி மேனகாவிடம் கூறினார்கள். விரைவில் வெளியிடப்பட விருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ★

## 'ஐஸ்' தயாரிக்க புதிய முறை

★ தண்ணீரை பனிக்கட்டியாக மாற்ற குளிர வைக்கத் தேவையில்லை.

★ தண்ணீரை ஆவியாக மாற்றக் கொதிக்க வைக்க வேண்டியது இல்லை.

தேவையான ஒளிக்கீற்றை தண்ணீரில் பாய்ச்சுவதன் மூலம் அதனை ஆவி அல்லது பனிக்கட்டி (ஐஸ்) ஆக்கும் முறையை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ★

## தேனீயின் விஷத்தை சேகரிக்கும் சாதனம்

தேனீக்கள் சேகரிக்கும் தேனைத் தேன் கூடுகளில் இருந்து எடுப்பது எல்லோரும் அறிந்ததே

இப்போது தேனீக்களிடமிருந்து விஷத்தைச் சேகரிப்பதற்குப் புனேயில் உள்ள மத்திய தேனீ ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் ஒரு சாதனத்தை உருவாக்கியுள்ளனர்.

தேனீக்களுக்கு லேசான மின்சார அதிர்ச்சியை அளிக்கும்போது அது தனது கொடுக்கின் மூலம் விஷத்தை வெளிப்படுத்தும்.

கண்ணாடிப் பலகையில் படியும் இந்த விஷத்தைச் சேகரிக்க முடியும். தேனீ வளர்ப்பவர்களுக்கு இச்சாதனம் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

மூட்டுழவு, வாதம் ஆகியவற்றுக்கு நிவாரணம் அளிக்க தேனீயின் விஷம் பயனுள்ளதாக இருப்பதெனக் கூறப்படுகிறது.

## 'நாய்'க்கு தனி பங்களா



அமெரிக்காவிலுல் உள்ள சான்பிரான்ஸிஸ்கோ அருகே வசிப்பவர் சந்திரா ஓர்னம்.

இப்பெண் பல்வேறு ரகத்தைச் சேர்ந்த பத்து நாய்களை வளர்த்து வருகிறார்.

இந்த நாய்களின் குரைப்புச் சத்தத்தினால் தங்கள் தூக்கம் கெடுவதாக அயலார் முறைப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து இப்பெண் தனது நாய்களுக்கு ஒதுக்குப்புறமான இடத்தில் 14 சதுர மீட்டர் பரப்பளவில் தனி பங்களா கட்டி இருக்கிறார்.

அந்த பங்களாவில் கலர் டெலிவிஷன், கதகதப்பு அடுப்பு, சம்பளிப்போர்வைகள் காலாற, நடமாட முற்றம் உள்பட பல வசதிகள் உள்ளன. ★

## 9ஆவது மாடிக்கு காரிலே சென்று புத்தகம் வாங்கலாம்

காரிலே அமர்ந்து ஒன்பதாவது மாடிக்குச்சென்று, காரிலேயே அமர்ந்தவாறே வேண்டிய புத்தகங்களை வாங்கலாம்.

எங்கே? உழைப்பால் உயரும் ஜப்பானில்தான்.

ஜப்பானில் டோக்கியோவில் ஷபுய புகைவண்டி நிலையத்துக்கு எதிரில், 1966 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஒன்பது மாடிக்கட்டடம் திறக்கப்பட்டது.

ஒன்பதாவது மாடி முழுவதையும் ஒரு புத்தகக் கடை வாடகைக்கு எடுத்திருக்கிறது.

அங்கே வந்து புத்தகம் வாங்குவோருக்கு அதிசயமான வசதி செய்து தரப்பட்டுள்ளது.

காரிலேயே மாடிக்குச் சென்று, காரிலேயே அமர்ந்து, தனக்கு வேண்டிய புத்தகத்தைக் கேட்ட உடனேயே கவுண்டருக்கு அருகில் இருக்கும் டெலிவிஷனில் அந்தப் புத்தகம் காட்சியளிக்கும்.

அதுதான் வேண்டிய புத்தகம் என்றால் மறு நிமிடம் அவர் கைக்கு வந்துவிடும்.

காரில் மாடிக்குச் சென்று புத்தகத்தை வாங்கி வர 3நிமிடங்கள்தான் பிடிக்கிறதாம், ★

## பி.பி.சி டெலிவிஷனில் அறிவு போதிக்கும் நிகழ்ச்சி

பி.பி.சி நிறுவனம் நான்கு சானல்களில் காலை 6 மணிமுதல் நள்ளிரவு 12 மணி வரை டெலிவிஷனில் நிகழ்ச்சிகளை வழங்குகிறது.

காலை 6 மணிக்குச் செய்திகளுடன் ஒளிபரப்பு ஆகும்.

எந்த ஒளி அலையை திருப்பினாலும் அறிவு போதிக்கக் கூடிய நிகழ்ச்சிகள்.

சின்னக் குழந்தைகளுக்கான பள்ளி 'ரைம்ஸ்' களை இன்னிசையும் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

வீட்டுப் பெண்களுக்குச் சமையல் குறிப்புக்கள் கற்பிக்கிறார்கள்.

குறிப்பாக மக்கள் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புக்களை அறிய நீதிமன்றத்தில் நடப்பதையே நேரிடையாகக் காண்பிக்கிறார்கள்.

அறிவுப் புதிர்ப்போட்டிகளில் வயது முதிர்ந்த பெண்கள்கூட அறிவுத்திறன் படைத்தவர்களாக இருக்கிறார்கள்.

அவர்களின் பொது அறிவுத் திறன் திகைக்க வைக்கிறது.

போட்டியின் முடிவில் பி பி சி நிலையம் வழங்கும் பரிசுகள் வியக்க வைக்கின்றன.

அண்டை நாடுகளுக்குச் செல்ல விமானத்தில் முதல் வகுப்பு டிக்கட், நட்சத்திர ஓட்டல்களில் தங்க வசதிகள், செலவு செய்யக் கைநிறையப் பணம் – இப்படிப் பரிசுகள்.

திறமை எங்கிருப்பினும் அதனைப் போற்றி மகிழ்விப்பதில் பிரிட்டிஷ் மக்கள் சிறந்தவர்கள்.

பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## இவரல்லவா மக்கள் தலைவர்

மேற்கு ஜேர்மனி அதிபர் ஹெல்மட் கோல் கிட்டப் பார்வை கோளாறு காரணமாக மூக்குக் கண்ணாடி அணிந்து வந்தார்.

அந்தக்கோளாறு சரியானதும் கண்ணாடி அணிவதை நிறுத்தி விட்டார்.

ஆனால் கண்ணாடியுடன்தான் அதிபர் கவர்ச்சியாக இருக்கிறார்.

எனவே அவர் மீண்டும் கண்ணாடி அணிய வேண்டும் என்று மேற்கு ஜேர்மனி மக்கள் விரும்பினார்கள்.

எண்பது சதவீதம் மக்கள் இந்த விருப்பத்தை ஒரு கருத்துக் கணிப்பில் தெரிவித்திருந்தனர்.

மக்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வதற்காக அதிபர் கோல் இப்போது மீண்டும் கண்ணாடி அணிந்து இருக்கிறார். ★

## காந்தியின் பதில்!



தென் ஆபிரிக்காவில் காந்திஜி நடத்திக்கொண்டிருந்த பாடசாலைக்கு ஒருமுறை அவர் குருநாதர் கோபால கிருஷ்ண கோகலே விஜயம் செய்தார்.

மாணவரிடம் கோகலே ஒரு கேள்வி கேட்டார்.

கேள்வி இதுதான்;

'அன்னையும் பிதாவும் இரண்டு பக்கத்திலும் உடன் வர நீ ஒரு பெரிய காட்டின் வழியே போய்க்கொண்டிருக்கிறாய்.

'வலது புறத்தில் நான்கு அடி தூரத்தில் தந்தை. இடது புறத்தில் நான்கு அடி தூரத்தில தாய்.

'திடீரென்று உன் எதிரே நான்கு அடி தூரத்தில் சிங்கம் பாய்ந்து வந்து விட்டது. தந்தையைக் காப்பாற்ற வலதுபுறம் சாய முயற்சி பண்ணினால் சிங்கம் உன் தாயைக் கொன்றுவிடும். அதேபோல் தாயைக் காப்பாற்ற முயற்சி பண்ணினால் சிங்கம் தந்தையைக் கொன்று விடும்.

'நீ யாரைக் காப்பாற்றுவாய்?— என்று கோகலே கேட்டார்.

மாணவர் யாருக்கும் விடை சொல்லவே முடியவில்லை.

கோகலே நிதானத்துடன் காந்திஜியைப் பார்த்தார்,

காந்திஜி பதில் சொன்னார்.

'இருபுறமும் சாய மாட்டேன். நேர் எதிரே சிங்கத்தின் மீதே பாய்ந்து என்னை இழக்கச் சித்தமாகி விடுவேன் இதனால் இருபுறமும் அன்னையும் பிதாவும் நிச்சயம் காப்பாற்றப்படுவார்கள்'— இப்படி காந்திஜி சொன்னார். ★

## 'தாய்' மொழியில் இராமாயணத் தொடர்

இந்தியாவில், இராமாயணத் தொடர் இந்தி மொழியில் ஒளிபரப்பப்பட்டது அல்லவா?

இப்போது அது 'தாய்' மொழியில் டப் செய்யப்பட்டு தாய்லாந்து டெலிவிஷனில் ஒளிபரப்பப்பட்டு வருகிறது.

இதைத் தாய்லாந்து நாட்டினர் விரும்பிப் பார்க்கிறார்கள்.

'தாய்' மொழியில் டப் செய்யப்பட்ட ராமாயண வீடியோ கசட்டுக்களுக்கு அங்கு கடுமையான கிராக்கி உண்டு.

இதனிடையில்—

சர்வதேச இராமாயணக் கருத்தரங்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி புதுடில்லியில் நடக்கவிருக்கிறது.

மூன்று நாள் நடக்கவிருக்கும் இக்கருத்தரங்கில் 15 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

சோவியத் யூனியனைச் சேர்ந்த பிரபல மேதை செலிக்கோவ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். ★

## 'சிகரெட்'டினால் லியூகேமியா நோய்

சிகரெட் குடிப்பது பற்றி மருத்துவ ஆய்வு ஒன்று பின்வருமாறு கூறுகிறது.

சிகரெட் அதிகம் பிடிப்பவர்களுக்கு ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் மிகுதியாக 'லியூகேமியா' என்ற வியாதி வந்து மரணம் ஏற்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தினமும் 10 சிகரெட் குடிப்பவர்களில் 34 சதவீதம் பேரும்,

20 சிகரெட் வரை குடிப்பவர்களில் 57 சதவீதம் பேரும்,

20 சிகரெட்டுக்களுக்கு மேல் குடிப்பவர்களில் 63 சதவீதம் பேரும் லியூகேமியா வியாதியால் மரணமடைகிறார்கள்.

இப்படி அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. ★

# மகாகவி பாரதியார் அருந்திய 'அமுதம்'

பாரதியாருக்கும் அவர் துணைவியாருக்கும் இடையே சிறு மனஸ்தாபங்கள் தோன்றுவதுண்டு. அவர் பாண்டிச்சேரியில் வாழ்ந்த காலத்தில் அவ்வாறு மனைவியோடு பிணக்கு ஏற்படும் நாட்களில் இனி வீடு திரும்புவதில்லை என்பது போல் ஒரு வீராப்போடும் வெறும் வயிறோடும் வெளியே புறப்பட்டுப்போய் விடுவார்...

ஏதோ கோபம் இப்போது வந்துவிடுவார் என்று கணவரை எதிர்நோக்கி இருக்கும் செல்லம்மாள் பாரதி நேரம் ஆக ஆகக் கவலைக்கு ஆளாகி விடுவார்.

அந்தச் சமயத்தில் தான் தற்செயலாய் பாரதிதாசன் இல்லத்திற்குச் செல்வார்.



பாரதிதாசன்

உடனே பாரதியின் துணைவியார் 'பார்த்தீர்களா உங்கள் கவிஞரை வீட்டில் கோபித்துக்கொண்டு வெளியேபோனவர் திரும்பவில்லை' என்று முறையிடுவார்.

இம்மாதிரி கோபம் வந்த சமயம் பாரதியார் எங்கே போவார். பாரதிதாசனுக்கு அனுபவத்தில் புரிந்த ஒன்று. எனவே 'கவலைப்படாதீர்கள் இன்னும் சிறிது நேரத்தில் கவிஞரோடு வருகிறேன் என்று அங்கிருந்து உடனே புறப்பட்டு நேராக பாண்டிச்சேரி புகைவண்டி நிலையத்திற்குச் செல்வார். எதிர்பார்த்தபடியே தனது கோர்ட் பைக்குள் இரு கைகளையும் நுழைத்தபடி பாரதியார் அங்கு மிங்குமாக நடந்து உலாவிக் கொண்டிருப்பார்.

வேகமாக நெருங்கி என்ன இப்படிச் செய்துவிட்டீர்கள்? ஏதோ கோபதாபம் வருவது இயற்கைதான். அதற்காக ஒரேயடியாக வீட்டிற்கு திரும்பாமல் இருந்துவிட்டால் எப்படி? என்று பாரதிதாசன் பேச்சை ஆரம்பிப்பார்.

'பிறகு என்ன? நமக்கு மரியாதை இல்லாத வீட்டில் மேலும் தாமதிக்கமுடியுமா? இனி நான் வீடு திரும்பப்போவது இல்லை. எங்காவது தூரதேசம் போகப்போக முடிவுசெய்திருக்கிறேன் என்று இன்னும் அந்த வீராப்புக் குறையாமல் பாரதி பதில்சொல்வார்.

'தாங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது ஆனால் ஒன்றை யோசித்துப்பார்க்க வேண்டும். எங்கேயாவது போவது என்றால் அதற்கு குறைந்தபட்ச தேவைக்காவது ஏதாவது நிதி பையில் இருந்தால்தான் நல்லது. இன்றைய நிலையில் தங்களிடம் ஏதும் பணம் இருக்க நியாயமில்லை. அதுபோன்றுதான் தற்போது என் நிலையும்' என்று பாரதிதாசன் இழுப்பார்.

இந்த நிதர்சன நிலையை உணர்ந்திருக்கும் பாரதியும் பதில்பேசாமல் மவுனம்பூணுவார்.

இந்த மவுனத்தை சாதகமாக்கி பாரதிதாசன் மேலும் இதமாகப் பேசுவார்.

பாவம் வீட்டில் அவர்களும் தங்களிடம் கோபித்துக் கொண்டதற்காக மனம் ஒடிந்துவிட்டார்கள். நீங்கள் திரும்பவில்லையே என்பதினால் பச்சைத் தண்ணீரும் பருகாமல் இருக்கிறீர்கள் என்பார் பாரதிதாசன்.

எனவே இப்போது வீட்டிற்கே திரும்பலாம் ஆனால் எனக்கு இப்போது நடக்கும் சக்தி இல்லை. ஒருவண்டி பிடியுங்கோ என்று கூறுவார். பாரதி.



பாரதி

பாண்டிச்சேரியில் ரிக்ஷா மாதிரி ஒருவகை வாகனம் உண்டு அதை வாடகைக்குப் பிடித்து பாரதி புறப்படுவார்.

ஒரு முறை இப்படித் திரும்புகிற வழியில்தான் வ. வே. சு. ஐயர் இல்லம் இருந்தது. அந்த வீட்டைக் கண்டதும் பாரதி வண்டியை நிறுத்தச் சொல்லி 'சுப்பு நீங்கள் ஐயர் மனைவியிடம்போய் சாப்பிட ஏதாவது இருக்கிறதா இருக்கிறதா கேளுங்கள்' என்றார்.

எப்போதுமே பாரதி வந்தால் உடனே இருக்கிறதைக் கொடுத்து அவரை உபசரிக்க வேண்டும் என்பது வ.வே.சு. ஐயர் தனது மனைவிக்கு இட்டிருக்கும் சட்டமாகும்.

எனவே ஐயர் மனைவி அச்சமயம் வீட்டிலிருந்த கஞ்சியை நன்றாக கரைத்து ஒரு பெரிய குவளை போன்ற பாத்திரத்தில் ஊற்றித் தந்தார்

அதைப் பாரதிதாசன் கொண்டுவந்து பாரதியிடம் தந்ததும் அவர் அதை வாங்கி வண்டியில் அமர்ந்தபடியே ஆண்டாந்து வாயில் கடகட வென ஊற்றிவிட்டு வெற்றுக் குவளையை அவரிடம் நீட்டியபடியே 'ஆ... அமுதமடா!' என்றார் அத்துடன் வண்டிக் காரனைப் பார்த்து 'உம் ரதம் புறப்படட்டும்' என்று உத்தரவு வேறு இட்டார்'

பாரதிக்கு அந்தக் கஞ்சி அமுதமாக தெரிந்திருக்கிறது ஆக அமுதத்தை உண்ட அடுத்தகணம் அவர் தன்னைத் தேவனாப் பாவித்துக்கொள்கிறார்.

உடனே தான் அமர்ந்திருக்கும் சாதாரண வாகனத்தை அமரலோக ஊர்தியாகப் பாவித்து 'ரதம் புறப்படட்டும்' என்றார். அவர் மனத்தளவில் எவ்வளவு உயர்ந்து வாழ்ந்திருக்கிறார் பார்! என்று கூறி மெய்சிலிர்த்தார் பாரதிதாசன்!. (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் இயல்புகள்

அபிவிருத்தியின் அடிப்படையில் உலகநாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகள் எனவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எனவும் இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்து நோக்கப்படுகிறது.

உலகின் 118 நாடுகள் இந்த இரண்டாவது அதாவது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளாகக் கருதப்படுகிறது.

இந்நாடுகளை மூன்றும் உலக நாடுகளாகவும்; விருத்திக் குறைவான நாடுகளாகவும் மாற்றுப்பெயர்கள் கொண்டு அழைப்பர்.

இவற்றின் இயல்புகள் பற்றி இங்கு நோக்கவேண்டியது அவசியம்:

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் இயல்புகள்-பொதுவான பண்புகள்: விருத்தி அடைந்த நாடுகளின் பொதுவான பண்புகளிற்கு நேர்-எதிரான தன்மை கொண்டதாக, அதாவது செல்வத்தின் அடிப்படையில் வறிய நாடுகளாக சமூக அரசியல் பண்பாட்டம்சங்களில் அவற்றிலிருந்து வேறுபட்டதாகவும், பின்தங்கிய தன்மைமாறுபட்ட தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றன. இவற்றை விரிவாக நோக்கல் பொருத்தமானதாகும்.

விருத்தியடைந்துவரும் இந்த நாடுகளின் இயல்புகளை இரண்டு பெரும் பிரிவில் நோக்கலாம்.

(1) பொருளாதார செய்முறைகள் அல்லது நடைமுறைகளின் வளர்ச்சியை அளவீடு செய்தல்.

(2) மக்கள் நலனை அளவிடல்.

பொருளாதார செய்முறைகள் எனும்போது இவற்றில் மூன்று முக்கிய இயல்புகளை நோக்கலாம். அவையாவன.

(1) குடித்தொகை

(2) வருமானம்

(3) வேலைவாய்ப்பு என்பனவாகும்.

அடுத்து மக்கள் நலனை அறிதல் எனும் இடத்து மக்களின் சமூக பண்பாட்டு அம்சங்கள் அடங்குகின்றன. அதாவது.

1. பௌதீக வாழ்க்கைத் தரச் சுட்டெண்.
2. வைத்திய, சுகாதார வசதிகள்.
3. வீட்டு வசதிகள்.
4. கல்வி வசதி.
5. பாடசாலைகளில் மாணவர்களின் கல்வி கற்கும் வீதம்.
6. உணவின் அளவும் தரமும்.
7. மின்சார நுகர்வு மற்றும் வாழ்க்கைத்தர வசதிகளும், பயன்பாடும்.
8. கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் வீதம்.
9. விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் வீதம்.
10. போக்குவரத்து வசதிகள்.
11. மொத்தத் தேசிய உற்பத்தியில் தயாரிப்புத் தொழிலின் பங்கு.
12. வர்த்தம், உலகவர்த்தகம்.
13. வெளிநாட்டு வர்த்தகத்தின் கைத்தொழில் துறையில் விகிதம்:
14. மாதாந்தச் சம்பளம் பெறுபவர் வீதம்.
15. தொழிற்பயிற்சித்திறன்.
16. ஓய்வுநேரம். எனப்பலவாகும்.

இத்தகைய இயல்புகள் விருத்தியடைந்துவரும் நாடுகளில் எத்தகைய தன்மைகளில் காணப்படுகின்றன என நோக்குவோம்.

குடித்தொகை எனும் இயல்பை நோக்குமிடத்து இது உலகில் காணப்படுகின்ற 450 கோடி மக்கள் தொகையில் 2/3 பகுதியினர் இந்த விருத்தியடைந்துவரும் நாடுகளில் வாழ்கின்றனர். விருத்தியடைந்துவரும் நாடுகளில் 65 மில்லியன் தொடக்கம் 70 மில்லியன் மக்கள் பிறக்கின்றார்கள் என்றும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறான அதிகளவான வளர்ச்சியைக்கொண்ட குடித்தொகை இந்நாடுகளின் உற்பத்தியில் உயர் வைக் காட்ட முடியாமல் இருப்பதற்குக் காரணமாகும்.

குறிப்பாக இலங்கையில் குடித்தொகை வளர்ச்சியானது 1971இல் 2.2 வீதமாகவும் காணப்பட சோவியத் சமஉடமைக் குடியரசில் 0.8வீதம் மாகக்காணப்படுகிறது. இவ் வேறுபாடு மிகையதிகரிப்பை காட்டி நிற்கிறது.

வருமானம் என்பது ஓர் முக்கிய குறிகாட்டியாகும். அதாவது அந்நாடுகளின் இயல்பை எடுத்துக்காட்டும் பண்புகளில்இதுவும்ஒன்றாகும். ஒரு பிரதேசப் பொருளாதார விருத்தியைஅளவிடுவதில் அல்லதுஎடுத்துக்காட்டுவதில் தனிநபர் வருமானம் அல்லது தலா வீத வருமானம் ஒரு பரந்த அடிப்படையாகக் கொள்ளப்படுவதுண்டு.

தனிநபர் வருமானம் என்பது ஒரு நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தினை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையால் பிரிக்கும்போது பெறப்படும் அளவீடாகும்.

இத்தலாவீத வருமானம் விருத்தியடைந்து வரும் நாடுகளில் குறைவாகக் காணப்படும் இயல்பைக் கொண்டுள்ளது. அதாவது ஐ' நாவின் வரையறைப்படி விருத்தியடைந்த நாட்டு தலா ரூபாவிலும் ¼ பங்குக்கு குறைவான வருவாயைப் பெறும் நாடுகள் எனக் கருதப்படுகிறது. டட்லி சியர்ஸ் இதை 500 அமெரிக்க டொலருக்கு குறைவாக தலா வருமானம் பெறும் நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என்கிறார்.

இவ்வடிப்படையில் நோக்குமிடத்து குறிப்பாக இலங்கையானது 1980இல் 270 அமெரிக்க டொலரையும் இந்தியா 240 அமெரிக்க டொலரையும் தனிநபர் வருமானமாகக் கொண்டிருக்கிறது. இவ்வாறு குறைந்த வருமானம்கொண்ட பண்பை இந்நாடுகள் கொண்டுள்ளன. மேலும் வருமான அடிப்படையில் மேலும் ஓர் இயல்பு அதாவது வருமான சமமின்மை இது ஓர் முக்கிய குறைபாட்டம்சம் மொத்த வருமானத்தில் பெருமளவினை ஒரு சிறு பகுதியினர் பெறுவதை இத்தகைய பல நாடுகளில் நாம் காணலாம்.

இவ்விருத்தியடைந்து வரும் நாடுகளில் இவ்வியல்பானது அவற்றுக்கு எதிரான தன்மையாதாக உள்ளது. மேலும் இந்நாடுகள் விவசாய நாடுகள். ஆகையால் இங்கு பருவகால வேலையின்மை மிக முக்கிய பிரச்சினையாகும்.

இம்முக்கிய இயல்புகளை விட மற்றும் சமூக பண்பாட்டம்சங்களும் இந்நாடுகளின் இயல்பை விளக்குவனவாக உள்ளன.

உணவின் அளவும் தரமும் ஓர் முக்கிய பண்பாகும். விருத்தியடைந்து வரும்

> ஜி. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை; சமூகக்கல்வி பாடத்திட்டத்துக்கமையத் தயாரிக்கப்பட்டது.
> தயாரித்துத் தருபவர்:
> க. விமலநாதன் (பி. ஏ. ஆனர்ஸ்)

அடுத்து வேலை வாய்ப்பு எனும் பண்பை எடுத்து ஆராயுமிடத்து இதுவும் ஓர் முக்கிய குறைவிருத்தி அம்சமாகவே காணப்படுகிறது. ஒரு நாட்டில் தொழிலாளர் தொகுதியில் எவ்வளவு பேர் உண்மையாகத் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்பது ஓர் விருத்திக்கான அதன் மதிப்பீட்டை எடுத்தும் காட்டும் பண்பாகக் கருதப்படுகிறது.

இங்கு மறைமுக வேலையின்மை, குறைந்தவேலை, வேலையின்மை என்பன எந்தளவுக்குக் காணப்படுகிறதோ அந்தளவு அந்நாடு குறைவிருத்தி நாடாகக் கருதப்படுகிறது. விருத்தியடைந்த நாடுகளில் வேலைவாய்ப்பு வசதிகள் அதிகமாகவும் கீழ் உழைப்பு போன்றன குறைவாகவும் காணப்பட

நாட்டுமக்கள் உண்ணும் உணவில் ஊட்டச்சத்துக் குறைவு ஒரு முக்கிய குறைபாடாகும்.

விருத்தியடைந்த நாடுகளில் தலைக்குரிய புரத நுகர்வு நாளுக்கு 86.4 % மாகக் காணப்பட விருத்தியடைந்து வரும் நாடுகளில் அது நாளுக்கு 57.4 வீதமாகக் காணப்படுகிறது. இது மனிதவலு, விருத்தி, உழைப்புத் தன்மை போன்ற பலவற்றில் தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. அதேவேளை இத்தாக்கம் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது.

கல்வியறிவு பற்றி ஆராயுமிடத்து, இதுவும் மிக நீண்ட வேறுபாடு கொண்டதாக காணப்படுகிறது. விருத்தியடைந்த நாடுகளில் 90 வீத மக்கள் கல்வியறிவு கொண்டு காணப்பட இந்நாடுகளின் 50 வீத மக்களே கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். இது இந்நாடுகளின் பண்பை மேலும் குறைவிருத்தித் தன்மைக்குக்கொண்டு செல்கிறது.

மத்திய கிழக்கு நாடுகளில் 20 வீத மக்களே கல்வியறிவு பெற்றவர்கள் மேலும் இந்நாடுகளின் கல்வித்திட்டத்தின் குறைபாடும் கல்வியறிவு, பெறுவர்களைக் குறைக்கிறது.

சுகாதார வசதிகளை நோக்குமிடத்து இவையும் ஒரு நாட்டின் இயல்பை பிரதிபலிப்பவையே. எந்தளவு மக்களுக்கு ஒரு வைத்தியர், ஒரு தாதி, ஒரு வைத்தியசாலை இருக்கின்றது? வைத்தியசாலையிலுள்ள கட்டில்களின் தொகை என்ன? போன்றன முக்கிய இயல்புகளாகும். விருத்தியடைந்த நாடுகளுடன் இந்நாடுகளை ஒப்பிடுமிடத்து குறைவிருத்தித் தன்மை புலப்படுகிறது. விருத்தியடைந்த நாடுகளில் 750 பேருக்கு 1 வைத்தியர் காணப்பட விருத்தியடைந்து வரும் நாடுகளில் 16,000 பேருக்கு 1 வைத்தியர் என்ற தன்மையில் காணப்படுகிறது. மேலும் சிசு சிறப்பு, ஆயுட்காலக் குறைவு என்பன முக்கிய குறைவிருத்தி இயல்புகளாகும்.

**பாடம் பயில்வோம்**

இந்நாடுகளில் வீட்டுவசதி பற்றி நோக்குமிடத்து வீட்டு வசதிக்குறைவு சேரி உறைவிடம் என்பனவும் முக்கிய குறைவிருத்தி இயல்புகளாகும். போக்குவரத்து வசதிகளும் ஓர் முக்கிய குறைபாட்டம்சமாகும். போக்குவரத்துப் பாதைகளும், கொண்டு செல்லற்சாதனங்களும் சீர் குறைவாகவும், அருமையாகவும் ஒழுங்கற்றவையாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக விருத்தியடைந்த நாடுகளில் 1000 சதுர மைலிற்கு 1000 மைல் வீதிகள் காணப்பட விருத்தியடைந்து வரும் நாடுகளில் 1000 சதுர மைலிற்கு 75 மைல் வீதி அமைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அடிப்படையில் பார்க்குமிடத்து விருத்தியடைந்த நாடுகளின் வர்த்தகம் அதிலும் ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்துச் செல்ல இந்நாடுகளில் மாறுகச் செல்கிறது. இது நாட்டின் குறைவிருத்தியை அதிகரிக்கிறது' சர்வதேச வர்த்தகத்தில் 70 வீதத்தை அபிவிருத்தியடைந்த நாடுகளே இடம் பிடிக்கின்றன.

இவற்றுடன் ஒரு நாட்டின் ஸ்திரமற்ற அரசியல் நிலையும் நாட்டின் குறைவிருத்திக்கான ஓர் முக்கிய இயல்பாகும். குறிப்பாக இலங்கையை நோக்கின் இங்கு இடம் பெறும் பிரச்சினைகள் ஒருபுறம் உற்பத்திக்குத் தடையாக உள்ளதோடு மறுபுறம் அழிவுகளையும் ஏற்படுத்துகின்றன. மேலும் இவை காரணமாக முதலீடுகள் விருத்திக்கு இல்லாமல் பாதுகாப்புக்கும் போர்ச்செலவுகளுக்கும் செல்கிறது. இவ்வாறு நாடு அழிவுப்பாதையில் செல்கிறது. இது குறைவிருத்தி நாடுகளை மேலும் கீழ் நிலைக்கு தள்ள ஏதுவாகிறது.

இவ்வாறாக குறித்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின் அளவுக் குறிகாட்டிகளும், மக்களின் நலன் என்ற பல்வேறு அளவுக்குறிகாட்டிகளும் இந்நாடுகளின் விருத்தித் தன்மையில் குறைவிருத்தி தன்மையையே அதாவது குறைவிருத்தி இயல்பையே எடுத்துக் காட்டுவதைக் காணமுடிகிறது. இவற்றில் மாற்றுப் போக்குகளை ஏற்படுத்தினால்தான். இந் நாடுகள் விருத்தியடைய முடியும். ★

# முதன்மையும் முகாமைத்துவமும் வாய்ந்தது பெண்மையே!

இத்தலையங்கத்தைப் படித்ததும் ஆண்மை மிக்க ஆண்கள் அதிர்ச்சியடையக் கூடும். என்ன செய்வது? உண்மை சிலசமயங்களில் கசப்பாகவும் இருப்பதுண்டு. கசப்பை ஒதுக்கிவிட்டுதொடர்ந்து படியுங்கள்.

ஒரு மிகத் தைரியசாலியான ஆண்மகன் ஒருசமயம் தன் நண்பர்கள மத்தியில் கூறினன்;- 'என்வீட்டில் நான் தான் 'பொஸ்' [Boos]. இப்படிக் கூறுவதற்கு எனக்கு என் மனைவி அனுமதி வழங்கியிருக்கிறாள்.'

உண்மையில் பெண்களின் ஆதிக்கம் இன்று அந்த எல்லையில்தான் இருக்கிறது. ஆமாம்! அவர்கள்தாம் எல்லாவரையிலும் முதன்மையானவர்கள். 'பொஸ்களுக்கெல்லாம் பெரிய 'பொஸ்' ஆனவள் தான்பெண். ஆண்மையுடைய ஆண்மக்கள் என்னை மன்னிக்க வேண்டும். இன்று நாம் வாழ்ந்து கொண்டிருப்பது பெண்களைக்கொண்டே, பெண்களால், பெண்களுக்காக அமைந்துள்ள ஓர் உலகில் தான். இக்கூற்றால் எந்த ஆண்சிங்கமும் ஆத்திரப்பட வேண்டாம். சற்று அமைதியாக அமர்ந்து சிந்தித்துப் பார்ப்போமேயானல் உண்மை விளங்கும்.

நாம் இருக்கும் நாட்டைத் தகப்பன் நாடு என்று எவரும் கூறுவதில்லை; தாய்நாடு என்றேகூறுகின்றோம்·(துணிவு மிக்க பாரதிமட்டும் ஓர் இடத்தில் துணிந்து 'எங்கள் தந்தையார் நாடென்னும் பேச்சினிலே' என்று கூறியிருப்பது வேறு விஷயம்). நாம் பேசும் மொழியை எவரும் தகப்பன் மொழி என்று கூறுவதில்லை; தாய்மொழி என்றே கூறுகின்றோம்.

இந்தப் பெண்மையின் முதன்மை கீழைத்தேசத்தில் மட்டுமல்ல, மேலைநாடுகளிலும்தான். வெகுதூரம் போவானேன்? ஆங்கிலத்தில் ஆண்பெண்ணைக் குறிக்கும் சில சொற்களை எடுத்துப் பார்ப்போமே! பெண் என்பதைக் குறிக்கும் Woman என்னும் சொல்லில் Man (மனிதன்) அடக்கம். அவள் என்ற கருத்துள்ள She என்ற சொல்லில் He (அவன்) அடக்கம். இப்படி எங்கு பார்த்தாலும் பெண்ணே முதன்மையில் நிற்கிறாள்.

ஒரு போட்டியில் நடுவர்களாக மூவர்இருந்தால் அதில் பெண்ணுக்கே முதன்மை இடம் கிடைக்கிறது. பத்துப் பேச்சாளர்கள் ஒரு மேடையில் பேசக் காத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், அங்கும் பெண் பேச்சாளருக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. சுற்றிவளைப்பானேன், பெண்மையின் சிறப்பைப்பற்றிப் பேசுவதற்கு ஆண்களுடன்

**- ச. ம. அச்சுதன் -**

ஒரு பெண் பேச்சாளரும் அழைக்கப்பட்டிருந்தால் அங்கும் அப்பெண்ணுக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது. அத்துடன் உலகளாவிய உண்மை ஒன்றை இங்கு கூறத்தான் வேண்டும். எந்த ஒரு ஆண்மகனின் வெற்றிக்குப் பின்னல் ஒருபெண் இருந்தே ஆகவேண்டும் என்பதே அந்த உண்மை.

ஒருசமயம், ஒரு பிரபல புத்தக வெளியீட்டாளரிடம் அவரின் வெற்றியின் இரகசியத்தைக் கேட்டபோது, அவர் கூறியது என்னதெரியுமா?

'நான் வெளியிடும் புத்தகங்கள் எல்லாவற்றின் அட்டைகளிலும் மிக அழகான பெண் ஒருத்தியின் படத்தைப் போட்டுவிடுவேன். அதுதான் என் வெளியீட்டு வெற்றியின் இரகசியம்.' இங்கும் வெற்றியின் பின்னணியில் ஒரு பெண்ணின் படமே இடம்பிடித்துக் கொண்டதை எவரும் மறுக்க முடியாது.

அரச போக்குவரத்துச் சாதனங்களைப் பாருங்கள். பெண்களுக்கான விஷேட சேவைகள் (Ladies Specials) அநேகமுண்டு. ஆண்களுக்கு ஏதேனும் விஷேசமுண்டா?

நீங்கள் [ஆண்] வீதியில் அவசர அவசரமாக நடந்து போய்க் கொண்டிருக்கிறீர்கள். சனசமுத்திரத்தில், தவறுதலாக, எதிரே வந்துகொண்டிருந்த ஒரு அழகிய பெண் மீது மோதிவிட்டீர்கள்.என்ன நடக்கும். உம்மால் மோதலுண்ட பெண்ணின் காச்,மூச் என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகவேண்டிவரும். அவள் ஒரு மிகைப்படுத்தும் காரியக்காரிகையாக இருந்தால்நீங்கள் மற்ற ஆண்களின் அடி உதைகளுக்கும் ஆளாக வேண்டி வந்திருக்கும். இதே தவறை ஒரு பெண் [அழகி] உமக்குச் செய்திருந்தால் ஒரு 'Sorry' யுடன் விடயம் சுமுகமாக முடிந்துவிடும்.

இனி, தனிப்பட்டவர்கள் சண்டையை எடுத்துக்கொள்ளுங்கள். எப்பொழுதும் இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட பெண்களுக்கிடையே சண்டைமூழ்வது தான் வழக்கம். இதிலும் அவர்களே முதன்மை வகிக்கிறார்கள் என்று கூறின் மிகையானது.


ஒரு உளவியல் அறிஞரின் அறிக்கைப்படி பெண்களை வெறுக்கும் ஒவ்வொரு ஐந்து நபர்களில் ஓர் ஆண்மட்டுமே காணப்படுகிறான். மற்றைய நால்வரும் பெண்களே!

மாமனுக்கும் மருமகனுக்கும் இடையே சண்டை ஏற்பட்டதை நாம் அறிந்தோமில்லை. ஆனல் மாமிக்கும் மருமகளுக்கு மிடையே எப்பொழுதும் சண்டை நடந்துகொண்டே இருக்கிறது. குடிசை வாழ் குமரியாக இருந்தாலென்ன, அரசமாளிகையில் வாழும் அரசியாக இருந்தாலென்ன மருமகள் மருமகள் தான்; மாமியார் மாமியார்தான். சும்மா சொல்லக்கூடாது. தங்களைத் தாங்களே வெறுக்கும் விஷயத்திலும் அவர்களே முதன்மையில் நிற்கிறார்கள்.

பெண்மையின் முதன்மையைப்பற்றி இவ்வளவுஅளந்த நான் அவளின் முகாமைத்துவத் திறமையைப்பற்றியும் சிறிது கூறித்தான் ஆகவேண்டும்; இல்லையா?

(மிகுதி அடுத்தவாரம்)

# கண்மை தயாரிக்கும் முறை



ஒரு அகல் விளக்கில் நிறைய நல்லெண்ணை எடுத்து அதில் துப்பரவான திரி நூலைத் திரித்துப் போடவேண்டும்.

பின் மூன்று செங்கற்களை முக்கோணமாக அடுக்கி வைத்து அதன் நடுவில் எரியும் அகல்விளக்கை வைக்கவும்.

கற்களின் மேல் துப்பரவான தட்டு ஒன்றைக் கவிழ்த்து வைக்க வேண்டும்.

திரியில் இருந்து வரும் புகை தட்டில் படியும்.

எரிந்து முடிந்த பிறகு மற்றொரு முறை அதில் எண்ணை ஊற்றி, முதலில் படிந்துள்ள புகையின் மீது மறுபடியும் புகை படியும்படி செய்யவும்.

இவற்றைக் காற்று இல்லாத இடத்தில் வைத்துச் செய்வது நல்லது.

எல்லாம் எரிந்து முடிந்ததும் தட்டை எடுத்துப் பார்த்தால் அதில் புகை படிந்து இருக்கும்.

இந்தக் கரியின் மீதி 5 அல்லது 6 சொட்டு நல்லெண்ணையை ஊற்றிக் குழைத்தால் கண்மை தயார் ஆகிவிடும்.

இந்த மாதிரி கண்மை தயாரித்து உபயோகித்தால், கண் எரிச்சல் இராது. கண்கள் குளிர்மையாக இருக்கும். ★




## அன்னத் தோணி!

அன்னத் தோணி போகுது
அழகுத் தோணி போகுது
முன்னும் பின்னும் ஆடி ஆடி
சுளகுத் தோணி போகுது

பட்டு வெள்ளைப் பூவைப் போலே
முட்டி முட்டிச் செல்குது
குட்டித் தம்பி கிட்டச் சென்று
தொட்டுப் பார்க்கச் சொல்கிறன்

அங்கும் இங்கும் அசைந்தசைந்தே
தங்கத் தோணி போகுது
அக்கா தங்கை அண்ணைக் கெல்லாம்
சொக்கா வாங்கப் போகுதோ?

முன்னே இரண்டு போகுது
பின்னே இரண்டு போகுது
பாலு போலே வெள்ளையாக
நாலு தோணி போகுது

மெல்ல மெல்ல மாக நீந்தி
அன்ன மெங்கு செல்குது
சொல்லிக் கொள்ள முடியாத
தூரதேசம் போகுதா?

சி. சதாசிவம்

# அன்னை கஸ்தூரிபாய் வாழ்வில்--

அன்னை கஸ்தூரிபாய் படிப்பறிவு வாசனை அற்றவர். திருமணஞ் செய்த பின்னர் தான் குஜராத் மொழியில் ஓரளவு எழுத, வாசிக்கக் கற்றுக் கொண்டார்.

என்றாலும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வார்.

எம்மதமும் சம்மதம், அகிம்சை, தீண்டாமை ஒழிப்பு, இந்து முஸ்லிம் ஒற்றுமை போன்ற காந்தியடிகளின் கொள்கைகளைத் தன் கொள்கையாகக் கொண்டு நடப்பவர்.

இந்திய நாட்டின் விடுதலைக்காகக் காந்திஜி சத்தியாக்கிரகம் செய்யும்போதெல்லாம் அவரும் சேர்ந்து இருப்பார்.

காந்தி கஸ்தூரிபாயின் பிள்ளைகளான தேவதாஸ், ராமதாஸ் இருவரும் சிறை செல்ல நேர்ந்தது.

அதற்கு முதல் காந்தியடிகள் சிறை சென்று விட்டார்.

அப்போது ஒரு தொண்டர் அன்னை கஸ்தூரிபாயிடம்,

'உங்கள் குழந்தைகளைச் சிறை சென்று பார்க்கவில்லையா......?' என்று கேட்டார்.

'என் குழந்தைகள் மட்டும் தான சிறையில் வாடுகிறார்கள். எத்தனையோ குழந்தைகள் வாடுகிறார்கள். அப்படி இருக்க என் குழந்தைகளை மட்டும் போய்ப் பார்ப்பதா......?— என்று கேட்டார்.

தன் குழந்தைகள் போலவே பிறர் குழந்தைகளையும் எண்ணியபடியால் அன்னை என்று போற்றப்பட்டார் கஸ்தூரிபாய். (சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்படங்களில்

# பச்சை பசேல் என வயல்களைக் காட்டினால்

# உழவனைப் பாராட்டுங்கள்; 'கமராமனை' அல்ல!

தமிழ்த் திரையுலகில் திரைக்கதை, வசன, டைரக்ஷன் துறையில் இன்று தனி இடத்தைப் பெற்றிருக்கின்றவர் விசு.

சில கேள்விகளுக்கு விசு அளித்த பதில்கள் வருமாறு:

? உங்கள் படங்கள் எல்லாம் நாடகங்களைப் போலவே உள்ளன. வசன ஆதிக்கம் அதிகமாக இருக்கிறது என்று கூறப்படும் குற்றச்சாட்டு பற்றி......

! வாழ்க்கையே நாடகம் தான்! நாடகமே உலகம்! நாடகம் போல் என் படம் இருக்கிறது என்று சொன்னால் பெருமைதான். ஆனாலும் நாடகம் என்று எதைச் சொல்கிறார்கள்? நிறையப் பேர் ஒரே காட்சியில் ஒரே பிரேமில் பேசுவதைத்தானே?

நான் குடும்பப் பிரச்சினைகளைக் கையாள்கிறேன். ஒரு குடும்பம் என்றால் நான்கைந்து பேர் இருக்கத்தானே செய்வார்கள்.

நல்லதோ, கெட்டதோ நடந்தால் அவர்கள் கூடிப் பேசிக் கொள்ளத்தான் செய்கிறார்கள்.

? உங்கள் படங்களில் கமராவுக்குக்கூட அதிக வேலையில்லை என்று சொல்லப்படுகிறதே?

! நம்மூரில் ஒரு தவறான கணிப்பு இருந்து வருகிறது. அவுட்டோரில் பச்சைப் பசேலென வயல்களைக் காட்டினால் நல்ல கமரா என்று பாராட்டப்படுகின்றது.

பச்சைப்பசேலென வயல் வயல் விளைந்திருக்கிறது என்றால் அதனைப் பயன்படுத்திய உழவன், போடப்பட்ட யூரியா, நீர்ப்பாசனத்தை விளைச்சலைப் பாராட்ட வேண்டுமே தவிர கமராமனை அல்ல. ★

## கலை உலகில் காணப்படும் ஒற்றுமை பணத்துக்காகவே தான்

கலை உலகின் ஒற்றுமை எப்படி இருக்கிறது?

அதுபற்றி நடிகவேள் ராதாவின் மகள் நடிகை ராதிகா கூறுவதை வாசியுங்கள்:

ஜாதிகள் இல்லையடி பாப்பா என்ற பாரதி மட்டும் இப்போது இருந்தால் 'ஜாதியால் தொல்லையடி பாப்பா' என்று வேதனையோடு இன்னொரு பாட்டுப் பாடி இருப்பார்!

இதை எல்லாம் மீறி ஜாதி, இனம், மொழி என்ற வேறுபாடு இல்லாமல் ஒன்றுபட்டு இருக்கிற ஒரே உலகம் இந்தச் சினிமா உலகம் தான்!

இந்தச் சினிமா உலகத்தில் தான் ஒரு தெலுங்கு நடிகரோடு ஒரு தமிழ் நடிகை கை கோர்த்துக் காதல் டூயட் பாட முடியும்!

ஒரு தமிழ் டைரக்டர் இந்திப் படத்தை இயக்க முடியும்!

ஒரு மலையாள ஹீரோ தமிழ் வில்லனைத் தூக்கிப் போட்டுப் பந்தாட முடியும்! அதைப் பார்த்து ரசிகர்களும் கைதட்டுவார்கள்,

இதெல்லாம் கலை உலகின் ஒற்றுமைக்கு உதாரணம் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை அத்தனையும் பணத்துக்காக!

ஒரே இனம்! ஒரே தேசம்! என்ற மாபெரும் கோஷத்துக்குப் பின்னால் போலித்தனமாக நாம் ஒழித்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் வாழ்கிற மண்ணில் மட்டும் அல்ல, வெளிநாடுகளில் கூட மொழி, இனம் என்கிற பற்று இப்போது மிக அதிகமாக வளர்ந்து இருக்கிறது. ஜப்பான் நாட்டில் போய் ஆங்கிலத்தில் ஏதாவது கேட்டால், அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் கூட ஜப்பானிய மொழியில்தான் பதில் சொல்வார்கள். உழைப்பால் உயர்ந்த அந்த நாட்டில் கூட மொழிப் பற்று எந்த அளவுக்கு வளர்ந்து இருக்கிறது என்பதை அங்கு சென்று வந்தவர்கள் நன்றாக உணர்ந்து இருப்பார்கள்.

மனதில் பட்டதை அப்படியே கூறி வந்த நடிகர் ராதா போன்றே மகள் நடிகையும் கூறி வருகிறார்.

### துணுக்கு

பி. ஆர். கிரியேஷன்ஸ் தயாரிக்கும் 'உன்னை அறிந்தால்' படத்தில் ஹிந்தி நடிகர் தர்மேந்திரா இன்ஸ்பெக்டர் வேடத்தில் நடிக்கிறார்.

வி. அழகப்பன் கதைவசனம் எழுதும் 'என்வழி தனிவழி' படத்தில்ரகுவரன் வழக்கறிஞராக நடிக்கிறார்.

விஜயகுமார், ராஜீவ், கங்கா, நிஷாந்தி ஆகியோரும் நடிக்கின்றனர். ★

வெள்ளித்திரை

# கலைஞர் முன் தமிழில் பேச ஏன் கமல் பயப்படவில்லை?



கமல்ஹாசன்

கலைஞரும் கமலும் ஒரே மேடையில் சந்தித்துக் கொண்ட திரைப்படத் தொடக்க விழாவில் முதலில் பேசியவர்கள் எல்லாம் ஒரு அச்சம் நிறைந்த குரலிலேயே பேசினார்கள்:

பேசினால் தப்பு வந்து விடுமோ. தமிழில் தமக்குள்ள பலவீனம் வெளிப்பட்டு விடுமோ?' என்ற அவஸ்தையால் நெளிந்தார்கள்.

கமல் கொஞ்சமும் கவலைப்படவில்லை!

''நான் இந்த மேடையில் பேசுவதற்குப் பயப்படவில்லை. நான் பேசுவதற்கு கலைஞர் தான் பயப்படவேண்டும்'' என்றதும் கூட்டத்தில் ஒரு பரபரப்பு.

''என்ன ஆருய்யா இந்த ஆளு இப்படிப்பேசுறான்?என்று லேசா முணு முணுப்பு,

கமல் கலைஞரைப் பார்த்தபடியே ' ஏன் என்றால் நான் அவரிடம்தான் தமிழ் கற்றேன். என்னடா இவன் தப்பு தப்பாப் பேசி விடுவானோ என்று அவர்தான் பயப்பட வேண்டும்' என்றதும் கலைஞர் உட்பட அனைவருமே சிரித்து விட்டனர்.

சென்னையிலிருந்து ஈ. நவநீதன்

பிறகு கருணாநிதி சொன்னார்.

''என்னிடம் மாணவனாக வந்து அமர்ந்து கமல் தமிழ் கற்கவில்லை என்றாலும் என் பேச்சு எழுத்து மூலம் தமிழைக் கற்றிருக்கிறார். இதை அவர் இப்போது சொல்லவில்லை. முன்பே சொல்லி இருக்கிறார். யாருக்குமே பயப்படாமல் சொல்லி இருக்கிறார். அவரின் அன்றைய பேச்சு எனக்குத் தொல்லைகளுக்கு மத்தியிலே துளித் தேனாக இருந்தது! என்று பாராட்டினார் கலைஞர் ★

# அரும்புகளின் வருங்கால வளர்ச்சி ஆரம்பக் கல்வியில் தங்கி உள்ளது

கல்வியானது மனிதனின் கண் எனக் கருதப்படுகிறது. ''கண்ணுடைய ரென்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்'' என்பது பொய்யாமொழி

அறிவைத் தருதல் கல்வி; ஆற்றலை வளர்த்தல் கல்வி; இசைந்து வாழல் கல்வி; ஈசனை உணர்தல் கல்வி; உள்ளம் விரிதல் கல்வி; ஊக்கம் பெறுதல் கல்வி; எழுச்சி உறுதல் கல்வி; ஏற்றம் அடைதல் கல்வி; ஐயம் அகற்றல் கல்வி; ஒப்பரவொழுகல் கல்வி; ஓயாதுழைத்தல் கல்வி; எனக் கல்வியின் பொருளும் பரப்பும் நோக்கும் போக்கும் ஆழ்ந்து அகன்று நுண்ணியதாய் ஓங்கி உயர்ந்து உள்ளது.

இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த பெறுதற்கரிய பெரும் பேறுகளுட் தலை சிறந்த கல்வியானது தற்போது எமது நாட்டில் ஆரம்பக்கல்வி; இடைநிலைக்கல்வி; உயர்நிலைக்கல்வி என்ற ரீதியில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இம்மூன்று படிக் கல்வி முறைகளிலும் நாட்டின் அல்லது சமூகத்தின் புத்திஜீவிகள் என்ற கட்டமைப்புக்கு அத்திவாரமாக அமைவது ஆரம்பக்கல்வி என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் இன்றைய இளஞ்சிறார்கள்தான் நாளைய சமுதாயத்தைத் தாங்குகின்ற தூண்களாக விளங்குகின்றார்கள். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்ற முதுமொழிக்கிணங்க இவ்விளஞ்சிறார்களின் ஆரம்பக்கல்வியானது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகின்றது. இவ்வாரம்பக்கல்வியானது தற்போது ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வரையிலான வகுப்புகளை உள்ளடக்கியுள்ளது.

நாம் உளவியல் ரீதியாக நோக்கும்போது மூன்று தொடக்கம் ஐந்து வயதுகளுக்கிடையே குழந்தைகளின் மூளைத் தொழிற்பாடானது தீவிரம் அடைக்கிறது என்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது இத்தீவிரமான மூளைத் தொழிற்பாட்டின் பயனாக ஏற்படும் சமூக இசைவாக்கம், ஆராய்வுத் திறன், ஒற்றுமை உணர்வு, சுறுசுறுப்பாகத் தொழிற்படும் தன்மை என்பன கற்றலுக்கான ஆயத்த மனோநிலையை குழந்தைகளிடம் ஏற்படுத்துகின்றன. இது ஆரம்பக்கல்வியின் அடிப்படை அம்சமாக விளங்குகின்றது.

கற்றல் தொடர்பான தொடக்க முயற்சிதான் இவ் ஆரம்பக்கல்வியின் பயன் என நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது மூன்று வயதில் இருந்தே ஏதோ ஒரு வகையில் கல்வியைப் பெறுவதற்கு பெற்றோரால் ஊக்குவிக்கப்படும் குழந்தைகளின் எண்ணத்தையும் கருத்தையும் கவர்ந்து பசுமரத்தாணி போல் பல்வேறு விடயங்களையும் மனதில் பதிய வைப்பதற்கு இவ்வாரம்பக்கல்வியானது ஒரு முக்கிய இடத்தை வகித்து நிற்கின்றது.

எண், எழுத்து இவற்றின் அறிமுகம் முதன் முதலாக ஆரம்பக்கல்வியில் தான் ஏற்படுத்தப்படுகின்றது. அதாவது எண், எழுத்து போன்றவற்றைப் பிரதானப்படுத்திய கல்வி முறை இவ்வாரம்பக் கல்வியேயாகும். இவ்வாரம்பக்கல்வி முறையில் கற்றலை இலகுபடுத்துவதற்காக கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தப்படுவது ஒரு முக்கியமான அம்சமாக உள்ளது. இவ்வுபகரணங்களானதும் குழந்தைகளுக்கு பரிச்சயமான கற்கள், வர்ணக்கண்ணாடித் துண்டுகள், புளியங் கொட்டை, இலைகள், தடிகள் போன்றவற்றினாலோ அன்றி கழிவுப் பொருட்களில் இருந்தோ செய்யப்பட்டதாக அமைகின்றன. இதைவிட ஆரம்பக்கல்வியில் இசை, பாட்டு, அபிநயம், விளையாட்டு என்பவற்றுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

மற்றும் ஆரம்பக்கல்வி முறையானது முழுமையான ஒரு கல்வி முறையாக அமைவதற்கு கற்பித்தல் முறை சிறப்பாக அமையவேண்டியது முக்கியமானதாகும்

அன்னையின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு கல்விக் கூடத்தில் காலடி எடுத்து வைக்கும் இளஞ்சிறார்களின் உள்ளத்தை அறிந்து, அரும்பிய நிலையிலுள்ள அவர்களது ஆற்றலை இனங்கண்டு அது வளரும் வகையில் கற்பித்தல் முறை அமையுமாயின் அது வரவேற்கத்தக்கதாக இருக்கும். அதாவது ஆசிரியரின் தூண்டுதலுக்கு ஏற்ப மாணவர் துலங்குவதையே கற்றல் எனச் சுருங்கக் கூறுவர்.

ஆரம்பக்கல்வியின் நோக்கங்களான ஒரு குழந்தையின் எண்ணத்தில் கல்விச் சூழ்நிலையை உருவாக்குவது தொடர்க்கல்விக்கான உறுதியான அத்திவாரத்தை இட்டுணர்வது. கற்றலை இலகுபடுத்துவது. கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துவது போன்றவற்றை சிறப்பாக அடைவதற்கு ஏற்றவாறு கற்பித்தல் முறை அமைய மாணவனையறி, பாடத்தை அறி; உன்னையறி; என்ற முத்தான மூன்று வாசகங்களும் மூன்று கோணங்களில் பிரதிபலித்து நிற்கின்றன.

புதிய ஒரு சூழ்நிலையை, புதியவிடயங்களை ஆய்வுக்கண்ணோட்டத்துடன், ஆர்வமனோநிலையுடன் கற்கும் குழந்தைகளுக்கு முக்கியம் வாய்ந்த கல்வியாகவும் ஆரம்பக்கல்வி விளங்குகின்றது என்றே சொல்லவேண்டும்.

தற்போது நியமனம் பெற்றுள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்கென நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற முன் சேவைப் பயிற்சி நெறியில் முகிழ்க்கும் சிறார்களுக்கு இம்முழுமையான ஆரம்பக்கல்வியை முக்கனிச் சுவையென ஊட்டிடும் அற்புதக் கலையினை அறிந்து தெளிந்து, பயின்று, உணர்ந்து பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் நன்கு செயற்பட்டால் நல்லதொரு ஒளிமயமான சமுதாயம் மலரும் என்பதில் ஐயமில்லை. ★

- கௌரி நடராசா -

## சூரியன் பூமியை விழுங்குமாம்!

சர்வதேச வானசாஸ்திர சங்கப் பொதுச்செயலாளர் டாக்டர் டெரிக் மொகாலி உலகம் அழிவது பற்றி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

சூரியன் 500 கோடி ஆண்டுகளுக்கு முன் உருவானது.

அது தற்போது விரிவடைந்து கொண்டு வருகிறது.

அதன் நிறமும் வெளிர் மஞ்சளில் இருந்து சிவப்பாக மாறி வருகிறது.

அது மேலும் பிரகாசம் அடைந்து, பெரிதாகி, பூமி, புதன், சுக்கிரன், வியாழன் போன்ற கிரகங்களை விழுங்கி விடும்.

அதற்கு இன்னும் 500 கோடி ஆண்டுகள் ஆகும்.

எனவே அதுவரை பூமிக்கு ஆபத்து இல்லை.

இப்படி அவர் கூறுகிறார்.

அவர் கூறுவது சரியாக இருக்குமா? என்பதைப் பார்க்க யார் 500 கோடி ஆண்டுவரை வாழப்போகிறார்கள்? ★

# மின்னணுச் சூழல் கேடு

நம்மைச் சுற்றிலும் காற்றும், நீரும் நிலமும் சூழல் கேட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதைக் கண்கூடாக் காண்கிறோம். கண்ணுக்குப் புலப்படாத வேறுவகை சூழல் கேடும் உள்ளது.

பல்வகையான மின்னணுச் சாதனங்கள் தோன்றி தொழிற்சாலைகளிலும், அலுவலகங்களிலும், வீடுகளிலும் இடம்பெற்று வருகின்றன. அவற்றின் எண்ணிக்கையும் பெருத்து வருகிறது. ஒன்றிலிருந்து வெளிப்படுகிற மின்காந்த அலைகள் பிற மின்னணுச் சாதனங்களைப் பாதிக்கின்றன. இதுவே மின்னணுச் சூழல்கேடு ஆகும்.

இப்பிரச்சினையைச் சமாளிக்க நிபுணர்கள் வழிவகைகளை ஆராய்ந்து வருகின்றனர்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

(4) லண்டனில் ஹீத்ரோ (Heathrow) விமான நிலையத்தின் அருகாமையில் வசிப்போர் தங்கள் இல்லங்களிலுள்ள தொலைக்காட்சிகள், கணினிகள் அடிக்கடி வேண்டாத விளைவுகளைக் காட்டுகின்றன என்று புகார் கூறுவதுண்டு. விமான நிலையத்தின் ராடார் கருவி வெளியிடும் ரேடியோ அலைகளின் அடிப்படை அதிர்வெண் தொலைக்காட்சி, கணினிகளிலுள்ள அலையேற்றிகளின் அலை அதிர்வெண்களைவிட மாறுபட்டபோதும் ராடார் கருவியிலிருந்து வரும் தான்தோன்றிச் சுரங்களே (overtones) இடையூறுக்குக் காரணம் என்று தெரியவந்தது.

### இடையூறு

(5) நுண்ணலை அடுப்புகளின் (Microwaves) கதவுகள், தடுப்புக்கள் சரியாகப் பொருத்தப்படாவிட்டால் இவற்றிலிருந்து வெளிவரும் நுண்ணலைகள், வானியல் விஞ்ஞானிகளுக்குக் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன. வானியல் விஞ்ஞானிகள் விண்வெளியை ஆராய ரேடியோ டெலஸ்கோப்புகளை (Radio Telescopes) உபயோகிக்கின்றனர். இவை விண்வெளியிலிருந்து வரும் மின்காந்த அலைகளைக் கிரகிப்பவை. அருகிலுள்ள பழுதான நுண்ணலை அடுப்புக்களிலிருந்து கசியும் நுண்ணலைகளால் அல்லது அருகிலுள்ள ரோடுகளின் வழியே செல்லும் அலைப்பரப்பிகள் பொருத்தப்பட்ட வாகனங்களால் இத்தொலைநோக்கிகளில் இடையூறுகளும், குழப்பங்களும் ஏற்படுகின்றன என்று வானியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

(6) இங்கிலாந்தில் வாக்கி-டாக்கிகளின் கட்டுக்கடங்காத வளர்ச்சி ஒரு தலைவலியாக மாறியுள்ளது. இவை வெளியிடும் மின்காந்த அலைகள் வானொலித் தொடர்புகளில் பெருமளவுகுழப்பத்தை உண்டுபண்ணுவதால் இவற்றின் சக்தி குறைவாக இருக்க வேண்டுமென அந்நாட்டில் திட்டமே இயற்றப்பட்டுவிட்டது.

### கட்டுப்பாடு

(7) தொலைபேசி நிலையங்களின் (Telephone Exchanges) கருவிகள் மின்னணுக் கருவிகளாக மாறிவருகின்றன. அருகிலுள்ள வீதிகளில் செல்லும் அலைபரப்பி பொருத்தப்பட்ட வாகனங்களால் மின்னணுத் தொலைபேசி நிலையங்களின் கருவிகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மேலும், தற்போது 'எல்லாமே தானியங்கி' பாகங்கள் பொருத்தப்பட்ட கார்கள் விற்பனைக்கு வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் உள்ள மின்னணுச் சாதனங்கள் மேலும் இடையூறு ஏற்படுத்த வாய்ப்புள்ளது. எனவே,மேலை நாடுகளில் கார் இடம் பெறும் மின்னணுச் சாதனங்கள், அவற்றின் திறன் ஆகியவற்றுக்குக் கட்டுப்பாடுகள் வர ஆரம்பித்து விட்டன.

### தடுப்பதற்கு வழி

இவற்றைப்பார்க்கும்போது மின்னணுச் சூழல் கேட்டைத் தடுக்க வழி இல்லையா என எண்ணத் தோன்றும் விஞ்ஞானிகள் நீண்டகாலமாகவே இதுபற்றி ஆராய்ந்துவருகின்றனர். 'மின் காந்தத் தடுப்பியல், என்ற ஒரு தனி விஞ்ஞானப்பிரிவே உருவாகியுள்ளது.

எட்டு வழிகளின்படி (By Theory) இவ்விதப் பாதிப்புக்களை 'பாரடேகூண்டு'(Faraday Cage) மூலம் எளிதில் தடுக்க முடியும் என வெகு நாட்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டது. மின்னணுச் சாதனங்களையும் அவற்றை இயக்குவோரையும் ஒரு கம்பி வலைக் கூண்டினுள் (இதுவே பாரடே கூண்டு!) வைப்பதே அவ்வழி. நடைமுறையில் இதுசாத்தியமில்லை: சரி, கம்பிக்கூண்டு வேண்டாம்: அழகான பிளாஸ்டிக்கினால் ஆன கூண்டு பயன் தருமா என ஆராய்ந்தனர். ஆனால் இவ்வகை பிளாஸ்டிக் கூண்டுகள் மின்காந்த அலைகளைக் கடத்தும் திறன்பெற்றவையாய் இருப்பதால் இக்கூண்டுகள் பயன்படாது என்று தெரியவந்தது.

கண்ணாடிகளுக்கு இண்டியம் ஈய ஆகசைடு பூச்சினைக் கொடுத்து இவற்றைக் கட்டடங்களின் ஜன்னல்களில் அல்லது தடுப்புச் சுவர்களாகப் பயன்படுத்தினால் 30 MHz இருந்து 10 GHz வரை அலை எண்கொண்ட மின்காந்த அலைகளைத் தடுக்கமுடியும் என அமெரிக்காவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டுபிடித்துள்ளனர். சோதனை முறையில் வெற்றிகாணப்பட்டாலும் நடைமுறையில் இது அவ்வளவு பயனைத் தரவில்லை. எனவே, இன்றும் கூட 'பாரடே கூண்டுதான்' மின்னணுச் சூழல் கேட்டைத் தடுக்க ஒரேவழி என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது அப்படியானால்இதற்கு மாற்றுவழி மின்னணுச் சாதன உபயோகத்தைக் கட்டுப்படுத்துவது தானா என்ற கேள்வியும் எழுகிறது.

- ஆர். பாலகிருஷ்ணன் -

(முற்றும்) ★

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அன்னை மீது அன்பு கொள்ளுங்கள்; எத்தகைய துன்பங்களும் நேரிடா!

துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் சக்திகளுக்கும் விழா வெடுக்கும் ஒன்பது தினங்களையே நவராத்திரி என்று வழங்குவர். இவ்வொன்பது தினங்களிலும் இல்லங்களைப் புனிதமாக்கி ஆராதனைப் பொருள்கள் கொண்டு பண்டுதொட்டு நம்மார் சக்தி வழிபாடு செய்து வருகின்றனர்.

வீரம், செல்வம் கல்வி ஆகியவற்றையருளும் சக்திகளே துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி என்போர் இகத்தில் வளத்தையும், பரத்தில் முத்தியைப் பெறுவதற்குச் சக்தி வழிபாட்டை மேற்கொண்ட அடியார்கள் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்ந்தனர் என்று புராணங்கள் கூறுகின்றன.

புரட்டாதி மாதத்தின் சுக்கிலபட்சத்து முதல்நாள் நவராத்திரிவிழா ஆரம்பமாகின்றது. இவ்விழா இயற்கையோடு தொடர்புடையது, பண்பாட்டின் சிறப்பையும் கலைகளின் புனித தத்துவத்தையும் விளக்குவது.

எல்லாவற்றிலும் மேலாக ஆண்டவனின் ஆரா அன்பை அடைய வழி செய்வது; வாழ்வோடொட்டிய வகையில் துதிக்கச் செய்யும் சீர்மையுடையது.

'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே' என்ற இவ்வமுதவாக்கு முற்றிப்பழுத்த அடியார் உள்ளத்தினின்றுங் கனிந்து உதிர்ந்தது. இறைவனை அன்னையாக விளித்துப் புகழ்பாடி, அவனையே நோக்கும் தம் செய்கைகள் மூலம் அவன் தாளடைந்த மெய்யடியார்கள் அவர்கள்.

'கன்றினுக்குச் சேதா
கனிந்திரங்கல் போலவெனக்
கென்றிரங்கு வாய் கருணை
எந்தாய் பராபரமே!'

என்கின்ற தாயுமான சுவாமிகளின் அருள்வாக்கில் இறைவனை 'எந்தாய்' என்று ஏற்றிப் போற்றுகின்ற இதய அனுபவம் துலங்குகிறது. உலக வாழ்வின் இன்பங்களை நீத்து மெய்யின்பத்தை நாடிச் செல்லும் அடியார்களாலும் நீக்க முடியாத பாசமே தாய்ப் பாசம்.

இது உயிரோடொன்றிய இணைப்பு என்று, தெய்வஅனுபவத்திலே திளைத்த அடியார்களின் வாக்குகளும், வாழ்க்கையும் எமக்குக் காட்டுகின்றன. தாய்ப்பற்றைத் துறந்துவிடல் முடியாது.

அவளுக்குத் தாம் கடன் செய்ய வேண்டுமென்பதைப் பட்டினத்தடிகள் வாழ்க்கையில் பார்க்கின்ருேம். எனவே இறைவனைத் தம் அன்னையா



கப் பாவனை செய்வதில் பக்தர்களின் இதயம் ஒன்றி விடுகிறது.

ஒன்ருய்ப், பலவாய் யாவையுமாய் ஆன ஆண்டவனை அன்னையென்று விளிப்பதிலுள்ள கருத்து விசேடமானதே. பெற்றவளுக்கும் பிள்ளைக்குமுரிய தொடர்பு எந்தக் குற்றமும் விரவாத தூய்மையின் பாற்பட்டது. தாயும், சேயும் நெருங்கிப் பழகுவதற்குச் சட்டதிட்டம் ஒன்றும் கிடையாது.

சாஸ்திரங்களிற் கூறிய விதி வழியிலேதான் நடக்க வேண்டுமென்று அடியார் கவலைப்பட வேண்டியதில்லை. குழந்தை செய்கின்ற எந்தச் செயலையும் தாய் பொருட்படுத்துவதில்லை. காலால் உதைக்கும் போதும் அக்குழந்தையின் காலைக் கண்ணில் ஒற்றி இன்பம் காண்பவள் அன்னை.

தாய் தன் உயிரைப் பற்றிக் கூடப் பொருட்படுத்தாது சேய்க்குச் சேவை செய்வதிலேயே கண்ணுங் கருத்தும் கொண்டவர். இவ்விதமே இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு தாய்க்கும், சேய்க்கும் உள்ள இணைக்கத்திலும் மேன்மையுடையது.

எனவே உலக அன்னை மீது அன்பு கொண்டவர்களுக்கு எத்தகைய துன்பங்களும் நேரிடாதென்பது அடியார் துணிபு. உலகனைத்தையும் படைத்து, உலகத்தின் ஒவ்வோர் அணுவிலும் உறைகின்ற சகதியின் பேராற்றலை ஆழ்ந்த பக்தியின் பேருகப் பெற்ற அனுபவத்தை மெய்யடியார்களின் சரிதங்கள் தெளிவாக விளக்குகின்றன.

இவ்வுயரிய தத்துவத்தின் உட்பொருளாக விளங்குவது நவராத்திரி வழிபாடு. நவராத்திரியைக் கலைத்திருநாள் என்றும் கூறலாம். சாதாரண கலைத்திருநாளல்ல; அழகை வழிபாடு செய்து அதன்மூலம் அன்னையின் அருளைப் பெறுகின்ற தாய்மையான கலைநாளிது. விதியெங்கும் இசையும், எழிலும் முழங்கும் புனித நாள். எத்தொழில் செய்பவரும் அத்தொழிலின் மூலம் அன்னையைப் பூஜிக்கும் நாள்.

நவராத்திரியின் மிகப் பிரதான அம்சமாக நம்மவர் கொண்டாடுவது கலைமகள் விழா. இதையொட்டி ஆயுத பூஜை நிகழக் காண்கின்ருேம். தொழில் முயற்சிகளுக்குக் கலைவாணியின் அருள் இன்றியமையாதது என்ற நம்பிக்கை நம்மவர் மத்தியில் ஆழ வேரூன்றி நிலைத்து நிற்கின்றது.

'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்ற ஆத்மீகக் கொள்கையின் பிரதிபலிப்பே இது. அல்லலுற்றவர்களை முடிமீது வைத்துக் காக்கின்ருள். அன்புக்கடவுள் என்று கூறுவதுண்டு. அன்னையோ காலைக் கட்டிக்கொண்ட குழந்தையை மடியில் வைத்துக் கொஞ்சுகிருள். தாயின் அரவணைப்பிலே சாந்தி காணுத ஜீவாத்துமாக்களில்லை.

அன்னையானவள் அன்பின் வடிவம். அவளின் இதயத்துக்கிசைய வாழ்கின்றவர்களுக்கு என்றும் இடும்பையில்லாத இன்பநிலை கிட்டும். இவ்வுயரிய தத்துவத்தை உணர்த்தும் நவராத்திரியில் சக்திவழிபாடு செய்து அன்னையின் அருளால் எல்லா நலமும் பெற்று இனிதே வாழ்வோமாக! ★

- காவேரி யோகநாதன் -

## "நிலையான மனம் தருவாய்"

நிலையான மனம் தருவாய் - தேவி
நிலையான மனம் தருவாய்
அலை பாயும் மனதுடனே - நாளும்
அல்லல் படுகின்றேன் நான்
தலை தாழ்த்தி வணங்குகின்றேன் - எனக்குத்
தாயே நீ அருள்புரிவாய்
தலை தூக்கி நான் வாழ - தேவி
நிலையான மனம் தருவாய்.

செ. சுதாகரன்

## அர்த்தம் புரிகிறது!

பூவும் மணமும்போல
நாம் இருப்போம்-என்று
போய்விட்ட காலத்தில்
நீதானே உரைத்தாய்...
ஆனல்......
பூவாடியவுடன் மணம்போய்விடும்
என்பதை இப்போதுதான்
புரிந்துகொண்டேன்.


★ ★

உடலும் உயிரும் போல
ஒன்ருகி நாமிருப்போம் என்ருய்
ஆனல்......
உடலை விட்டு விட்டு
உயிர் எப்போதும்
ஓடிவிடமுடியும் என்பதை
இப்போதுதான் புரியவைத்தாய்
நீ அன்றே சொன்னபோதும்
அதன் பொருளை நான்
இன்று தான் உணர்ந்துகொண்டேன்.

- க. பாமா

## சொற்சிலம்பம்

போட்டி இல 89



சொற்சிலம்பம் இல: 89
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

------ இங்கே வெட்டுக ------

**முடிவு திகதி: 19-10-1988**

**இடமிருந்து வலம்:**

1. மனமகிழ்ச்சி 2. உட்காருவது 7. தமிழ் திரையுலகில் இன்று பிரபலமானவர் 8. பௌர்ணமி / அமாவாசைக்கு 12 ஆம் நாள் 9. விருந்தின் கடைசியில் கிடைப்பது 11. தடு, தடுமாறியுள்ளது 13. செய்தல் 14. பேய் 17. தலையைச் சுற்றிப் போர்த்துவது 18. 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தது 19. கேட்க உதவுவது 21. ஆணுக்கு உரியது 24. அறியாமல் நுழை.

**மேலிருந்து கீழ்:**

1. செருக்கு 2. புகலிடம் 3. மிருகம் 4. வாழ்க்கை குழம்பியுள்ளது 5. பணம் 7. நடிகருக்குத் தேவை 8. மிருகத்தின் உறுப்பு 10. பெரிய உருவம் 12. உள்ளம் 15. வரங்களில் ஒன்று 16. சமரசம் உலாவும் இடம் 17. மூப்பு 18. உணவு 20. இரும்பு கெட வரும்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்ரும் பரிசு: | 25 ரூபா |

## ஒரு கடிகாரம் பொருத்தம் பார்க்கிறது!

(காலை ஆறுமணி. துரைமணி விருந்தையில் இருந்து கோப்பியை சுவைத்துக் கொண்டிருக்கிருர். ஹோலில் சுவர்க்கடிகாரம் மணி அடிக்கிறது)

துரை: (கடிகாரத்தைப் பார்த்தபடி) அட ஆறு அடிக்காமல் ஐந்து மட்டும் அடிக்குதே! அட்ஜஸ்ட் பண்ணணும். (எழும்பி வந்துகொண்டே) செல்லம், செல்லம்! எங்கே அந்த ஸ்டூல்! ஆறுக்கு ஐந்தடிக்குது.

செல்லம்: (சமையலறையில் இருந்து எட்டிப் பார்த்தபடி) ஏன் காலங்காத்தாலை கத்திறியள். கோப்பிதான் தந்திட்டேனே. அதென்ன ஆறுக்கு ஐந்து?

துரை: நான் கதைக்கிறது கத்துறமாதிரியா இருக்கு. குசினிக்கை என்ன வெட்டிப் புடுங்கிருய்.

செல்லம்: வெட்டிப்புடுங்குறேனு? குசினிப்பைப்பைப் பூட்டினல் தண்ணி ஒழுகுது. திறந்தால் தண்ணி வருகுதில்லை. அதைத் திருத்த வக்கில்லை. அதுசரி அதென்ன ஆறுக்கு ஐந்து?

துரை: (கோபமாக) இங்கையெல்லாம் தலைகீழாகத்தான் நடக்குது:

செல்லம்: நான் பைப் போடையும், குக்கரொடையும் மாரடிக்கிறது உங்களுக்கு தலைகீழாகத்தான் தெரியும், அதென்ன ஆறும் ஐந்தும்.

துரை: நீ என்னைச் சொல்லவிட்டால்தானே ஒண்டு சொல்ல ஒன்பது சொல்லுவாய். ஆறுமணிக்கு மணிக்கூடு ஐந்து மணி அடிக்குது.

செல்லம்: ஒரு மணிக்கு இரண்டுமணி காட்டும் அதை வாங்காதையுங்கோ என்றேன் கேட்டியளா. ஸ்ரோர் றூமிலை போடுங்கோ.

துரை: (கோபமாக)பேசாதே உன்னையும் ஸ்ரோர் றூமிலை போடுறதா. எங்கே உமா (கூப்பிடுகிருர்) ஏய் உமா.

உமா: (அறையில் இருந்து வந்துகொண்டே) கூப்பிட்டியளா அப்பா.

துரை: இப்பதான் உனக்கு விடிஞ்சுதா? எங்கே ஸ்டூல் எடு அதை.

உமா: ஏனப்பா ஸ்டூல். தூசுதுடைக்கப் போறியளா?

துரை: மணிக்கூட்டை அட்ஜஸ்ட்பண்ணப் போறன்.

உமா: நான் சொல்ல வேண்டுமென்று நினைச்சேன் அந்த ஒல்லாந்தர் காலத்து மணிக்கூட்டை எறிந்து போட்டு எலக்ரோனிக் மணிக்கூடு வாங்குவமப்பா.

துரை: வாயை மூடு. கொம்மாவும் நீயும் சேர்ந்து சதி செய்யறியள். நான் ரிப்பேர்காரனிட்டை குடுக்கிறன் பார்.

★ ★ ★ ★

(சேகர் [illegible] சேகர் உமாவை எதிர்பார்த்து இருக்கிருன். உமா படி ஏறி வருகிருள்.)

சேகர்: நினைத்தேன் வந்தாய் நூறுவயசு (பாடுகிருன்)

உமா: சேகர் பகிடி போதும். இங்கைவர எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா. எத்தனை நாள் இப்படி ஒளித்து வருவது அப்பாவோடை கதைத்துப் பாருங்கோ.

சேகர்: உதைப்பார். மனுசன் முன் கோபக்காரன் என்று கேள்வி. பயமாயிருக்கு.

உமா; பயமா? ஒரு கோழையைப் போய் காதலித்தேனே. ஏன் சேகர் சுவர்க்கடிகாரத்தைப் பற்றி ஏதாவது தெரியுமா

சேகர்: ஓ தெரியுமே யார் கண்டுபிடித்ததென்ருல்

உமா: (கோபத்துடன்) ரிப்பேரைப்பற்றிக் கேட்டனுன். அப்பாவிடம் பழைய சுவர்க்கடிகாரம் உண்டு. அதிலை அவர் உயிரையே வைத்திருக்கிருர்.

சேகர்: நானும் உன்மேலை உயிரையே வைத்திருக்கிறேன். எதையும் சொல்லு செய்கிறேன். மணலைக் கயிருகத் திரிக்கவா. வானத்துச் சந்திரனைப் பிடித்து உன் மடிமீது வைக்கவா. கட்டளையிடு கண்ணே!

உமா: இந்தச் சிவாஜி கணேசன் வசனத்தைக் குப்பையிலே........

சேகர்: (இடைமறித்து) ஆ! ஐடியா வந்திட்டுது. கணேசன்னு ஒருத்தன் இருக்கிருன். மணிக்கூடு திருத்துவான். அவனிட்டை கேட்டுப் பழகி அப்பாவைச் சந்திக்கிறேன்.

உமா: இப்பதான் உங்க காதல் மூளை வேலை செய்யுது.

★ ★ ★ ★

(துரைமணி விருந்தையில் பேப்பர் படித்துக்கொண்டு இருக்கிருர். சேகர் ரீசேர்ட்டும் தொப்பியும் அணிந்து கேற்றைத் திறந்து உள்ளே வருகிருன்.)

சேகர்: (கூப்பிடுகிருன்) ஐயா!

துரை: (கோபமாக) ஐயாவும் பையாவும். ஒண்டும் இல்லை போ. விடிஞ்சாப் பொழுதுபட்டா தண்டலுக்கு லிஸ்டோட வாங்கோ (எழுந்து உள்ளே போகிருர்.)

சேகர்: ஆரம்பமே அபசகுனமாயிருக்கே!

(உமா ஜன்னலூடாக சேகரைப் பார்த்து விட்டு வெளியே வருகிருள்)

உமா: (உரத்த குரலில்) [illegible] ரிப்பேர் பார்க்கிற ஆளா? இங்கே இல்லை நீங்க போங்க.

துரை: (வெளியே வந்து) உமா நீ உள்ளே போ. தம்பி நீ மணிக்கூடு திருத்துற ஆளா. நான் ஏதோ தண்டல் காரனெண்டு நினைத்தேன். நீ வா தம்பி கடவுள் தான் உன்னை அனுப்பியிருக்கார்.

(உள்ளுக்கு அழைத்துச் சென்று சுவரில் உள்ள கடிகாரத்தைக் காட்டுகிருர் துரை.) 'உமா அந்த ஸ்டூலைக் கொண்டுவா'—

துரை: தம்பி மணிக்கூட்டைப் பத்திரமா கழட்டுங்க. உமா தம்பிக்கு ஹெல்ப் பண்ணு.

சேகர்: ஐயா ஒரு ஸ்குறூடிரைவர் இருக்கா.

துரை: நீ என்ன மணிக்கூடு திருத்த வந்தனியா இல்லை விளையாட வந்தனியா. ஒரு ஸ்குறூடிரைவர்கூட கொண்டு வரவில்லையே.

சேகர்: வீடியோ சென்ருக்குப் போய் எடுத்திட்டு வாறன்.

துரை: நீ மணிக்கூடு ரிப்பேர்காரனு, வீடியோ ரிப்பேர்காரனு.

உமா: அப்பா வீடியோக் கடைக்குப் பக்கத்துக்கடை இவற்றை மணிக்கூட்டுக் கடை.

துரை: வீடியோ என்றதும் ஞாபகம் வருகுது. என்ரை பிரண்ட் நடேசனின் மகன் பி. ஏ. பாஸ் பண்ணிட்டு வீடியோ பிஸ்னெஸ் செய்கிருனமே. தெரியுமா உனக்கு.

சேகர்: தெரியுமாவா? என்ரை பெஸ்ட் பிரண்ட். அவன் இப்ப பெரிய ஆள். மாதம் ஐயாயிரம்ரூபா உழைக்கிருன். கார், வான் எல்லாம் இருக்கு. நீங்க விசாரித்ததாகச் சொல்றன். நான் இப்ப கடைக்குப் போய் ஸ்குறூடிரைவர் கொண்டாறன். (போகிருன்)

★ ★ ★ ★

(அடுத்தநாள் காலை 9 மணி சேகர் கோட், டை, கூலிங் கிளாஸ் அணிந்து வருகிருன்.)

துரை: (மிக அடக்கமாக) தம்பி யாரைத் தேடுறியள்.

சேகர்: நான் நடேசனின் மகன். சேகர் பெயர். நீங்க விசாரித்ததா மணிக்கூடு திருத்திறவன் சொன்னுன்.

துரை: அடடே! நீங்களா தம்பி. வாங்க, வாங்க (மனைவியைக் கூப்பிடுகிருர்) செல்லம், செல்லம் (செல்லமும் உமாவும் வருகின்றனர்) உமா வா வா என்ன வெட்கம். செல்லம் தம்பிக்கு ரீ போடு. இவதான் என் ஒரே மகள் உமா, ஐந்தாம் தேதி பிறந்தவ. ரொம்ப அதிர்ஷ்டம்.

சேகர்: அப்படியா? நான் ஆருந் தேதி பிறந்தனுன். எப்படிங்க பலன்.

துரை: ஆஹா, ஆறுக்கும் ஐந்துக்கும் நல்ல பொருத்தம். (குசினிக்குப் போகிருர்)

செல்லம்: என்னங்க இந்தப் பையன் நம்ம உமாவுக்குத் தோது போல இருக்கு.

துரை: அதைத்தான் சொல்ல வந்தேன். இதிலாவது இருவர் யோசனையும் ஒன்ருயிருக்கே. (உமா வருகிருள்)

செல்லம்: இந்தப் பையனைப் பிடிச்சிருக்கா உமா?

உமா: ஏனம்மா போயும், போயும் ஒரு வீடியோக்காரனையா......!

துரை: பேசாதே! நான் தீர்மானிச்சாச்சு. சேகர்தான் உனக்கு மாப்பிள்ளை.


உமா: சரியப்பா உங்க இஷ்டம். (மணிக்கூடு ஐந்துதரம் அடிக்கிறது)

துரை: அட ஆறுக்கு ஐந்தடிக்குதே. இதை விற்கணும்.

சேகர்: வேண்டாம் மாமா. ஆறும் ஐந்தும் நல்ல பொருத்தம். ★

- வில்வம் பசுபதி -

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் டிசெம்பர் 31க்கு முன்னர்?

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் எப்போது நடைபெறும்?

மேலும் ஆறு மாதங்களுக்கு ஜனாதிபதி ஆட்சி நீடிக்குமா?

தமிழ்நாடு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் விஷயங்கள் இவை.

சென்னையில் இருந்து வந்த செய்தி ஒன்று, தமிழக சட்டசபைக்கு எதிர்வரும் டிசம்பரில் தேர்தலை நடத்தியாக வேண்டிய நிலை எற்பட்டுள்ளதாகக் கூறுகிறது.

தேர்தலை மேலும் ஒத்தி வைக்க வாய்ப்பு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் ஜானகி அம்மாள் தலைமையிலான அ. தி. மு. க, அரசு கடந்த ஜனவரி 30 ஆம் திகதி கலைக்கப்பட்டு ஜனாதிபதி ஆட்சி நடந்து வருகிறது.

முதல் கட்டமாக 6 மாதத்துக்கு அறிவிக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சி மேலும் 6 மாதம் நீடிக்கப்பட்டது?

அதன்படி 29 - 1 - 1989 அன்று ஜனாதிபதி ஆட்சி முடிவடைய வேண்டும்.

ஜனாதிபதி ஆட்சியை இன்னும் 6 மாதங்களுக்கு நீடிக்க வேண்டும் என்றால் நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

ஆனால் நாடாளுமன்றத்தில் சட்டத்திருத்தம் கொண்டு வந்து தேர்தலைத் தள்ளி வைக்கும் வாய்ப்பு இல்லை என்று கருதப்படுகிறது.

**பெரும்பான்மை**

புதிய சட்டத்திருத்தம் கொண்டு வர நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் சம்மதித்து வாக்களிக்க வேண்டும்.

தற்சமயம் புதுடில்லி ராஜ்ய சபையில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு இல்லை.

எனவே தமிழக சட்டசபைத் தேர்தலை மேலும் நீடிக்கச் சட்டத்திருத்தம் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் டிசம்பர் 31க்கு முன்பு சட்டசபைத் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும்.

அதைத்தவிர தேர்தல் கமிஷனுக்கு வேறு வழியே கிடையாது. ★

# பிணி என்றவருடன் அணி சேர முடியுமா?

முஸ்லிம் லீக் கட்சியுடன் தேர்தல் கூட்டணி இல்லை என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறினார்.

தி. மு. க. தலைவர் கருணாநிதி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

**காங்கிரஸ்**

கே: அப்துல்ஸமது காங்கிரஸ் பக்கம் சாய்ந்துவிட்டார்

## முஸ்லிம் லீக் உறவு முறிந்தது பற்றி தி. மு. க.

என்று கூறி இருக்கிறீர்களே. அது எந்த அளவு உண்மை?

ப: தேசிய முன்னணி ராஜீவ் காந்திக்கும், மத்திய காங்கிரஸுக்கும் எதிரான ஓர் அணி, அது தேசிய அணி அல்ல. அது நாட்டுக்கு ஏற்பட்ட பிணி என்று அப்துல்ஸமது மதுரையில் பேசி இருக்கிறார்.

அவரது பத்திரிகையிலேயே அந்தச் செய்தி வெளியாகி உள்ளது. அவர் அப்படி ஒரு முடிவு எடுத்த பிறகு நான் தி. மு. க. நிலைபற்றி தெளிவாக அறிக்கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தி. மு. க. வுக்கும், இந்திய முஸ்லிம் லீக் கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு இல்லை என்றாலும் கூட அதற்காக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியை தி. மு. க. எதிர் அணி என்று கருதாது எந்த அடிப்படையிலும் விமர்சிக்கவும் விரும்பாது.

எனவே இப்போது ஏற்பட்டுள்ள வேறுபாடு காரணமாக முஸ்லிம் தலைவர்கள் குறித்தோ அவர்களது பேச்சு எழுத்துக்கள் குறித்தோ எந்தவித பதில் விமர்சனமும் செய்ய வேண்டாம் என்று தி. மு. க. தோழர்களையும் பேச்சாளர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ★

# ஜெயலலிதா முதலமைச்சரானால் நாடு குட்டிச்சுவராகி விடும்

## 'நால்வர்' அணித் தலைவர்கள் பேச்சு

**சென்னையிலிருந்து தி. மேனகன்**

கடலூரில் நடந்த அ. தி. மு. க. (நெடு) ஊழியர் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் நெடுஞ்செழியன் பேசியதாவது:

எங்க நாலுபேரை (அரங்கநாயகம், நெடுஞ்செழியன், பண்ருட்டி ராமச்சந்திரன் திருநாவுக்கரசு)பார்த்து நடுத்தெரு நாராயணன் என்று; ஏளனம் செய்கிறார்கள். பழித்துப் பேசுகிறார்கள். ஒரு பத்திரிகையில் அம்மா தாயே என்று நாலுபேரும் தனித் தனியாகப் பிச்சை எடுப்பது போல் கார்ட்டூன் போட்டுள்ளார்கள். இதைப் பற்றி எல்லாம் நாங்கள் கவலைப்படவில்லை.

இந்த அம்மா (ஜெயலலிதா) என்னைப் பார்த்து ஏன் கூட்டத்துக்கு வரவில்லை என்று விளக்கம் கேட்குது; பத்திரிகை நிருபர் கூட்டத்தில் தேர்தல் நிதியாக ரூபாய் ஒன்றரை கோடி வசூல் என்று கூறினுங்க. அடுத்த நாள் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் 80 லட்ச ரூபாய் என்று கூறினர். இந்தப் பொய் சொல்வானேன்? அட பொய்தான் சொன்னுங்க. பணத்தை யார் கணக்கில் பாங்கில போட்டாங்க.

இந்த அம்மா ஒரு கூட்டத்துல பேசறுங்க என்றால் செலவு 7 லட்ச ரூபாய் ஆகுது. இந்த அம்மாவுக்குப் பாதுகாப்புக்கு என ஒரு பூனைப் படை ஒண்ணு போவுது. இந்தப் படைக்கு நாள் ஒன்றுக்கு 50 ஆயிரம் செலவு, இந்தப் பணம் எல்லாம் யாருடையது. தொண்டரிடம் வசூலித்த தொகையல்லவா அது! இப்படி ஊதாரித்தனமாகச்செலவாகிறதே என்று கணக்குக் கேட்டா பதில் என்ன வருகிறது?

ரோட்டில போறவனுக்கு எல்லாம் கணக்குச் சொல்ல முடியுமா? நாய் குரைக்கிறது. இப்படியா பதில் சொல்வது.

தொண்டர் எல்லாம் நாள் முழுவதும் கஷ்டப்பட்டு ரோட்டில, வெய்யில நின்னு சம்பாசித்தவ கொடுத்தரு: 5, 10 தான் இந்த 80 லட்சம். அவன் கணக்கு கேட்காம வேறுயார் கேட்பா? ஹெலிக்கொப்டரில் வந்தவனு நிதி கொடுத்தான்? அரசியல் தெரியணும். நாசரீகம் தெரியணும்.

இந்த இரண்டும் அந்த அம்மாவுக்குத் தெரியாது.

நமக்கு எதிரி ஜெயலலிதா, ஜானகி அணிக்கு எதிரி ஜெயலலிதா. இரண்டு பேரிடம் ஒத்த கருத்து உள்ளது. ஒன்று சேர்வோம். கூட்டணி அமைப்போம். இரண்டு கம்யூனிஸ்ட் (வலது, இடது) கட்சியும் நேருக்கு நேர் மோதிக்கொள்ளும். தேர்தல் உடன்பாடு என்றால் ஒரே பக்கத்தில் நிற்கும். அதுபோலதான் இதுவும்.

இவ்வாறு நெடுஞ்செழியன் பேசினர்.

ஜெயலலிதாவை நாங்கள் வெறுக்க, ஒதுக்கக் காரணம் என்ன? பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். ஜான்சிராணி, புரட்சித்தலைவி, எனது மகள் என்று கூறினீர்களே! இன்று ஏன் இந்தநிலை? என்று நீங்கள் கேட்பது நன்கு தெரிகிறது:

வாழ்க்கை நம்பிக்கையில் தான் இருக்கிறது. நம்பித் தான் போகிறோம். நம்பியது தவறு? நம்பிக்கையோடு பஸ்ஸில் ஏறிச் செல்கிறோம். டிரைவர் வேண்டும் என்றே மரத்தின் மீது மோதுவார் என்று தெரியுமா? நம்பித்தான் கல்யாணம் செய்து கொள்கிறோம். பிள்ளை பிடிக்காமல் போனால் என்ன செய்வது? மழை பெய்யும் என்று தான் விதை விதைத்தோம். பெய்யவில்லை என்றால் என்ன செய்வது? இதே போன்று தான் ஜெயலலிதாவை, புரட்சித் தலைவருக்குப் பின்னல் அ. தி. மு. க. வைக் கட்டிக் காப்பாற்றுவார் என்று நினைத்தோம். நம்பிக்கையுடன் இருந்தோம். குதிரைக்குட்டி தான் என்று நம்பி வாங்கினோம். ஆனல் மூக்கு வெளுத்து விட்டது. எஸ்: டி. கழுதைக்குட்டி என்று தெரிந்துவிட்டது. சோமசுந்தரத்திடம் கொடுத்துவிட்டு ஒதுங்கிவிட்டோம்:

நல்ல நோட்டு என்று நினைச்சோம். ஆனல் அது கள்ள நோட்டு என்று தெரிந்து விட்டதே. பால்நன்றாக இருந்தால் காபி போடலாம். மோர், தயிர், வெண்ணெய் கிடைக்கும். இது தீஞ்ச பால் அல்லவா?

**'டொப்' கழன்று விட்டது**

மூன்று ஆண்டுகள் கஷ்டப்பட்டு விஞ்ஞானிகள் விண்கலத்தைத் தயார் செய்தனர். விண்ணில் ஏவிய சில நிமிடத்தில் கடலில் விழுந்து விட்டது. காரணம் 'டொப்' கழன்று விட்டதாம். அதே போல்தான் இவர்களுக்கும் (ஜெயலலிதா) டொப் கழன்று விட்டது.

ஜானகி அணியை எதிர்த்து அன்று வெளியேறினீர்களே. இன்று அவர்களுடன் கூட்டணி என்கிறீர்களே நியாயமா? என்று கேட்கிறார்கள். இந்திராகாந்தி 76 இல் கருணாநிதி அரசை டிஸ்மிஸ் செய்தார். 80 இல் கருணாநிதி காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்து, தொண்டுத்தேர்தலில்போட்டியிடவில்லையா? புரட்சித் தலைவர் அரசை இந்திராகாந்தி டிஸ்மிஸ் செய்தார். பின்னர் புரட்சித் தலைவர் காங்கிரசுடன் கூட்டுச் சேரவில்லையா? அதே போன்றுதான் இதுவும். ஜானகி அணியுடன் கூட்டு வைத்துக் கொள்வதில் தவறு கிடையாது.

இவ்வாறு பண்ருட்டி ராமச்சந்திரன் பேசினர். (எ-4)

# பதவி ஆசைக்காக எதையும் செய்யத் துணிந்தவர் கலைஞர்

ஏழு கட்சி கூட்டணிபற்றி அப்துல்ஸமது கேட்பது குற்றமா என்று கருணாநிதிக்கு குமரி அனந்தன் கேள்வி விடுத்தார்.

**பொதுக்கூட்டம்**

சென்னை திருவான்மியூர் வடக்கு மாடவீதியில் இ.காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டம் நடந்தது. இதில் வைஜயந்திமாலா எம் பி, இ. காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் குமரி அனந்தன் ஆகியோர் பேசினார்கள்.

குமரி அனந்தன் பேசும் போது கூறியதாவது:—

**ஆட்டோ சங்கர்**

இதே திருவான்மியூர் பகுதியில்தான் அஷ்டலட்சுமி கோயில், விஸ்வாமித்திரர் ஆலயம், அன்னை வேளாங்கண்ணி கோயில், பாம்பன் சாமி மண்டபம் போன்றவை இருக்கிறது. அதே போல் இதே இடத்தில்தான் 'ஆட்டோ' சங்கர் வீடும் இருக்கிறது.

ஆட்டோ சங்கர் வீட்டுக்கு சென்று பார்த்தால் அங்கு 'உதயசூரியன்' சின்னம் இருப்பதை தெரிந்துகொள்ளலாம். அஷ்டலட்சுமி கோயிலுக்குக் கிடைக்கும் விளம்பரத்தை விட பலமடங்கு விளம்பரம் ஆட்டோ சங்கருக்கு கிடைக்கலாம். மக்களும் அதுபோல் ஆட்டோ சங்கரைப் பார்க்கக் கூடலாம்.

**கருணாநிதி**

மக்கள் அதிகமாகக் கூடுகிற காரணத்தால் அஷ்டலட்சுமியைவிட பெரிய தெய்வமாக ஆட்டோ சங்கரை யாரும் கருதிவிடமாட்டார்கள். அதுபோல் கூட்டம் கூடும் இடங்களில் எல்லாம் நியாயம் இருக்கும் என்று

## குமரி அனந்தன் பேச்சு

யாரும் நினைக்கமாட்டார்கள், சமீபத்தில் நாங்கள் கூட்டிய கூட்டத்தில் பெருந்திரளாக மக்கள்கூடிவிட்டார்கள், இனி எங்களுக்கு ஈடு, இணை யாருமில்லை. எங்களை யாரும் அசைக்கமுடியாது என்றவகையில் கருணாநிதி பேசியும், எழுதியும் வருகிறார்.

**முஸ்லிம் லீக்**

முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அப்துல் ஸமதுவைப் பார்த்து 'எவன் காலிலும் விழுவதற்கும் நான் தயாரில்லை' என்கிறார் கருணாநிதி.

அண்ணா அவர்கள் தி.மு.கவை ஆரம்பித்ததில் இருந்து நாங்கள் தி.மு.க.வுடன் உறவு கொண்டிருந்தோம். அப்படி இருந்த எங்களை எதிர்க்கத் துணிந்து நிற்கும் கம்யூனிஸ்ட் கட்சிவேண்டுமா? நாங்கள் வேண்டுமா? என்று அப்துல் ஸமது கேட்பது குற்றமா?

தனக்குவேண்டும் என்றால் ஒரு மாதிரியும்வேண்டாம் என்றால் ஒரு மாதிரியும்பேசுவது கருணாநிதிக்குக் கைவந்த கலையாகும். பதவி ஆசைக்காக எதையும் செய்ய கருணாநிதி தயங்கமாட்டார்.

நான் (குமரிஅனந்தன்) அவருக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். விளம்பரத்தின் மூலம் மக்கள் கூட்டம் வரலாம். ஆனல் அஷ்டலட்சுமி கோயிலுக்குரிய மரியாதை நிரந்தரமானது. அதுபோல் காங்கிரஸுக்கு இருக்கும்மரியாதை நிரந்தரமானதாகும்?

இவ்வாறு குமரி அனந்தன் பேசினர். ★

# சுய நலம்

தெருக்கோடியின் குப்பை மேட்டில் செத்துப்போன கோழியின் உடல் கிடந்தது. யாரோ மனிதர்கள் வீசி விட்டுச் சென்றிருக்க வேண்டும்.

மோப்பம் பிடித்த தெரு நாய்கள் இரண்டு அந்தச் செத்த கோழியைப் பிய்த்துப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தன.

எங்கிருந்தோ இரண்டு வளர்ப்பு நாய்கள் அத்தெருவால் வந்து இக்காட்சியைக் கண்டுவிட்டன.

வளர்ப்பு நாய்கள் தெரு நாய்களைக் கடித்துக் குதறின.

தெருநாய்கள் ஈடுகொடுக்க முடியாது ஓடி வெகுதூரத்தில் போய் நின்று மூச்சு வாங்கின.

**உருவகக் கதை**

'மனிதர்கள் அறிவில்லாதவர்கள்' என்று ஒரு தெருநாய் மற்றத் தெருநாயிடம் கூறிற்று.

நம்ம சாதி நம்மை இப்படிக் கடிக்கும் போது ஏனப்பா நீ மனிதர்களை இழுக்கிறாய் என்றது மற்றத் தெருநாய்.

'நாய் நன்றி உள்ள மிருகம்' என்று மனிதன் சொன்னனே, அதற்காகத்தான் அவனை இழுக்கிறேன். காக்கைகளைப் பார் சாப்பாட்டைக் கண்ட உடனே கத்திக் கத்தித் தன்னை முழு இனத்தையுமே அந்த இடத்திற்கு அழைத்துச் சாப்பிடுகிறது. இந்தநாய்கள்...... நம்ம சாதிக்கு நல்ல பேர் வச்சான் பார் நாயென்று. சாப்பிட்டுக் கொண்டிருந்த எங்களைக் கடித்து வெருட்டித் துரத்திவிட்டுத் தாங்கள் மட்டும் தின்னுதே...... இது சுயநலமில்லையா என்று கேட்டது.

தன்னினத்திற்கு பல்லைக் காட்டி மற்றவர்களுக்கு வாலை ஆட்டும் இந்த நாய்கள் சுயநலமிகள் தான் என்றது மற்றத் தெருநாய். ★

[illegible]

## பொது அறிவுப்போட்டி இல. 15

| | | |
|---|---|---|
| 1: | எது உயரத்தைக் குறிக்கும்? | கோபுரம் / குன்று |
| 2. | யாருக்குச் சலுகை உண்டு? | பிள்ளைகள் / பெண்கள் |
| 3. | உதைக்கக் கூடியது எது? | வில்லவாசி / கழுதை |
| 4. | இரத்தம் குடிப்பது எது? | மூட்டைப்பூச்சி / நுளம்பு |
| 5. | படைகளில் ஒன்று? | யானை / சேனை |
| 6. | குழந்தை விரும்புவது எது? | பொம்மை / மிட்டாய் |
| 7. | புழுக்கமான நேரத்தில் எதை எதிர்பார்ப்பார்கள்? | காற்று / தென்றல் |
| 8. | தொழில் தொடங்க எது தேவை? | மூளை / மூலதனம் |
| 9. | எப்படி இருக்க விரும்புகிறார்கள்? | மெலிவாக / வலிவாக |
| 10. | அரிசியில் கிடப்பது எது? | நெல் / கல் |
| 11. | நோயாளிகளுக்கு எது தேவை? | மருந்து / ஓய்வு |
| 12. | கொம்பு உள்ளது எது? | ஆடு / மாடு |

பெயர்:- ..................
விலாசம்:- ........................
..............

பொது அறிவுப்போட்டி இல: 15
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 26. 10. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**பொது அறிவுப்போட்டி இல: 14 சரியான விடைகள்**

1. நீர் 2. சொல் 3. சூரிய 4. பம்பாய் 5. தை 6. சேலை 7. நெருப்பு 8. அன்னை 9. மிடுக்கு 10. சடுகுடு 11. பவுடர் 12. உடும்பு.

சிங்கர்
விவசாய நீரிறைக்கும் இயந்திரம்
சேனை, வயல், இரத்தினக் கற் குழிகளுக்கு முற்றிலும் உகந்தது

அதிக செயலாற்றல்
மணிக்கு 8250 கலன் இறைக்க வல்லது
செலவுச் சிக்கனம்
குறைந்தளவு எரிபொருளில் அதிக சேவை.
நீடித்த பாவனை
நவீன சிங்கர் தொழில்நுட்ப உற்பத்தி என்பதால் அதிக காலம் உழைக்கும். பெற்ரோல் அல்லது மண்ணெண்ணெய்யில் இயங்கும் 4 குதிரைச் சக்தி கொண்ட உலகப்புகழ்வாய்ந்த ஹொண்டா ஜீ. கே. என்ஜின் பொருந்தியது.
இரண்டு வடிவ அமைப்புகள் உள்ளன.
• எஸ். பி. 50 (மார்க் 2) விலை. ரூ: 11, 390/-
• என் எஸ். பி. 50 விலை: ரூ. 11,290/-
உதிரிப் பாகங்கள் நாடெங்குமுள்ள சிங்கர் கடைகளில் தாராளமாகக் கிடைக்கும்



விவசாயப்பிரிவு
சிங்கர்
மாசற்ற மேன்மை
சிங்கரின் பராமரிப்புச் சேவை உன்னதமானது. நம்பகமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road,
Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை

15-10-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

சர்வஜன வாக்கெடுப்புத் தோல்வியால்

# சிலியில் ஜெனரல் பினோசேக்கு ஏற்பட்ட சோதனை

## ஆட்சிக் காலம் முடியுமுன்னரே பதவியை இழக்கும் ஆபத்து

கடந்த 5 ஆம் திகதி சிலியில் இடம் பெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் ஜனாதிபதி ஜெனரல் ஒகஸ்ரோ பினோசே (Augusto Pinochet) தோல்வி அடைந்தார்.

இவரின் தோல்வியை அடுத்து சிலியில் தற்போது ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கி உள்ளன.

ஜெனரல் பினோசே உடனடியாகப் பதவி துறக்கவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரி வருகின்றனர். அதிகார மாற்றம் பற்றிய பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

### 1973 புரட்சி

1973 ஆம் ஆண்டு சிலியில் நடைபெற்ற இராணுவப் புரட்சியின்போது ஜெனரல் பினோசே ஆட்சியைக் கைப்பற்றினார். அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த சோஷலிஸ்ட் ஜனாதிபதி சல்வடோர் அலெண்டே (Salvador Allende) படுகொலை செய்யப்பட்டார்.

தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளரான ஜெனரல் பினோசே கடந்த 15 வருடகாலமாக சிலியின் ஆட்சிபீடத்தில் இருந்து வருகிறார்.

பேர்டினன்ட் மார்க்கோஸ் கடைசியாக அதாவது 1986 இல் பிலிப்பீன்ஸில் நடத்திய தேர்தல் போன்று சிலி சர்வஜன வாக்கெடுப்பும் சர்வதேச நாடுகளின் கவனத்தைப் பெருமளவு ஈர்த்திருந்தது.

பல தரப்பிலும் குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்பட்டதால் சர்வஜன வாக்கெடுப்பில் ஒழுங்கீனங்கள் இருக்கக் கூடாது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு எச்சரிக்கை விடுத்திருந்தது. 30 நாடுகளைச் சேர்ந்த 300 பிரதிநிதிகள் சர்வஜன வாக்கெடுப்பைக் கண்காணிக்க சிலிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இலங்கையில் இருந்தும் திரு.நீலன் திருச்செல்வத்துக்கு அழைப்பு வந்திருந்தது.

பெரும்பாலான உலக நாடுகளில் தற்போது தேர்தல்கள் நடைபெறுவதில்லை. மக்களின் நெருக்குதல் காரணமாக தேர்தல் நடந்தாலும் தோல்வி அடைந்த கட்சியினரால் மோசடிக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

பாகிஸ்தானில் இது சர்வசாதாரணம். 1977 இல் பூட்டோவின் வீழ்ச்சிக்கு வித்திட்டதும் இதுவே.

பொதுத்தேர்தலில் மோசடி செய்து வென்றதாக எதிர்க்கட்சிகள் கிளர்ச்சி நடத்திய சமயம் ஸியா - உல் - ஹக் திடீர்ப்புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றி இருந்தார்.

மோசடிக் குற்றச்சாட்டுக்களைத் தவிர்ப்பதற்கே சர்வதேச நாடுகளின் உறுப்பினர்கள் தேர்தலைக் கண்காணிக்க அழைக்கப்படுகின்றனர்.

### பிரபல சர்வாதிகாரி

ஜெனரல் பினோசே லத்தீன் அமெரிக்காவின் பிரபல சர்வாதிகாரியாகக் கருதப்பட்டார் பரகுவாவில் நீண்டகாலம் வலதுசாரி இராணுவ தர்பார் நடத்தும் ஆட்சியாளர்களுடன் இவர் ஒப்பிடப்பட்டு வந்தார். சோஷலிஸ்ட் ஜனாதிபதி சல்வடோர் அலெண்டேயின் ஆட்சியின் பின்பு சிலியை இடதுசாரியிலிருந்து வலது சாரிக்குத்திசை திருப்பினார்.

சமீபகாலமாக சிலி பொருளாதாரத்துறையில் ஓரளவு முன்னேற்றம் கொண்டிருந்தது.

இதனால் சர்வஜன வாக்கெடுப்பில் எப்படியும் வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்து வந்தது. ஆயுதப்படைகளின் செல்வாக்கும் அவருக்கு இருந்து வந்தது.

### நீடிப்புக்கு அனுமதி கோரல்

கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பில் சிலி மக்கள் ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்று வாக்களிக்கக் கோரப்பட்டிருந்தனர்.

தனது ஆட்சிக்காலத்தை மேலும் 8 வருடத்துக்கு நீடிப்பதற்கு ஜெனரல் பினோசே இந்த சர்வஜன வாக்கெடுப்பில் நாட்டு மக்களிடம் அனுமதி கோரி இருந்தார்.

''ஆம்'' என்றதற்கு பெரும்பான்மை வாக்குகள் கிடைத்திருந்தால் ஜெனரல் பினோசே மேலும் 8 வருடகாலம் ஆட்சியில் நீடிக்க முடியும்.

''இல்லை'' என்றதற்குப் பெரும்பான்மை வாக்குகள் கிடைத்திருந்தால் 1989 டிசம்பருக்கு முன் சிலியில் புதிதாக ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் ஜெனரல் பினோசே நடத்த வேண்டும்.

### அரசமைப்புத் திருத்தம்

1980 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட அரசமைப்புத் திருத்தத்தின்படி 1990 மார்ச் மட்டும் ஜெனரல் பினோசே பதவியில் இருக்க முடியும்.



ஜெனரல் பினோசே

அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு 90 நாட்களுக்கு முன் அதாவது 1989 டிசம்பர் அளவில் ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்த வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பை முன்னிட்டு ஜெனரல் பினோசே சில நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அவையாவன:-

★ கடந்த 7 வருடகாலமாக சிலியில் இருந்து வந்த அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது.

★ வெளிநாடுகளில் அஞ்ஞாத வாசம் புரிந்த 500 பேர் நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர். 1973 புரட்சியின் போது படுகொலை செய்யப்பட்ட சோஷலிஸ்ட் ஜனாதிபதி சல்வடோர் அலென்டேயின் மகள் இஸபெல் அலென்டேயும் (Isa Bel Allendee) இவர்களில் ஒருவர்.

பாகிஸ்தானில் பெனாஸீர் பூட்டோ நாடு திரும்பியமை ஸியா-உல்-ஹக்குக்கு எப்படிச் சவாலாக மாறினதோ அதே போன்ற நிலை இஸபெல்லா அலென்டேயின் வருகையால் சிலியிலும் ஏற்பட்டது.

சர்வஜன வாக்கெடுப்பை முன்னிட்டு 16 எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்திருந்தன. ஜெனரல் பினோசேக்கு எதிராக இவை அணிதிரண்டிருந்தன.

சர்வஜன வாக்கெடுப்புத் தினமான அக்டோபர் 5 ஆம் திகதி வரை நிச்சயமற்ற சூழ்நிலை இருந்துவந்தது. ஜெனரல் பினோசே தோல்வியை எதிர்நோக்கும் பட்சத்தில் அவருக்கு ஆதரவாக ஆயுதப் படையினர் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற ஊகங்களும் இருந்துவந்தன.

### வெற்றியில் நம்பிக்கை

மனித உரிமை மீறல், மற்றும் செல்வாக்கு இழக்க வைத்த பல நடவடிக்கைகளின் மத்தியிலும் தமது வெற்றியில் ஜெனரல் பினோசே நம்பிக்கை வைத்திருந்தார்.

இதற்குக் காரணம் சமீபத்திய பொருளாதார அபிவிருத்தியே.

சிலியின் முக்கிய ஏற்றுமதிப் பொருள் செப்பு ஆகும், (Copper) சுதந்திர வர்த்தகக் கொள்கை காரணமாக செப்பு மற்றும் மீன், பழம், மரம் ஏற்றுமதிகளில் 10 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது.

உள்ளூர் உற்பத்தியிலும் 5 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது.

தென் அமெரிக்க நாடுகளான ஆர்ஜென்டீனா, பிரேஸில் போன்று அல்லாது சிலியின் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி அடைந்திருந்தது. இதற்கு ஜெனரல் பினோசேயே காரணமாக இருந்தார்.

நாட்டில் பணவீக்கமும் குறைந்திருந்தது. 5 வருடகால தேக்க நிலையின் பின்னர் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

தற்போதைய முன்னேற்றங்கள் கடந்த 15 வருடகால அடக்கு முறையை மறைத்து விடும் என்று ஜெனரல் பினோசே நம்பி இருந்தார்.

இவரது நம்பிக்கையை சர்வஜனவாக்கெடுப்பு முடிவு சிதறடித்துவிட்டது.

பேசாது இருந்திருந்தால் 1990 மார்ச்வரை ஜெனரல் பினோசே நிம்மதியாக ஆட்சி செய்திருக்கலாம். 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த' நிலைக்கு அவர் தற்போது தள்ளப்பட்டுள்ளார். ★

உலக உலா

# இங்கிலாந்து ரத்துச் செய்த இரண்டு கிரிக்கெட் சுற்றுலா

நான்கு வாரங்களாக இழுபறி நிலையில் இருந்த இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பதினொரு வாரகால இந்திய சுற்றுப் பயணம் இறுதியில் ரத்தாகி விட்டது.

கிரிக்கெட் பிரியர்களுக்கு இது கவலை தரும் செய்தி.

நிறவெறியை எதிர்ப்பவர்களுக்கு இது மகிழ்ச்சி தரும் செய்தி.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆண்டின் இறுதியில் இந்தியாவுக்கு வந்து டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்ளவிருந்தது. இந்த அணியின் கப்டனும் வீரர்களில் ஏழு பேரும் தென் ஆபிரிக்கா சென்று கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இது நடந்தது 1981 இல். ஆனால் அவர்கள் இந்தியா வரும் இங்கிலாந்து அணியில் இடம் பெறுவதை இந்தியா விரும்பவில்லை.

உலகில் நிறவெறி ஆட்சி நடைபெறும் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக முழுமூச்சுடன் குரல் கொடுக்கும் நாடு இந்தியா.

இந்தியாவுக்கு ஆத்திரமூட்டவே இங்கிலாந்து அணியில் தென் ஆபிரிக்கா சென்றவர்களுக்கு இடமளிக்கப்பட்டது என்ற கருத்து புதுடில்லியில் நிலவியது.

அதைத் தொடர்ந்து இந்திய அரசு பிரச்சினைக்குரிய இங்கிலாந்து வீரர்களுக்கு விஸா வழங்கமுடியாது என்று அறிவித்தது.

நான்கு வாரங்களாக இங்கிலாந்துக்கும் புதுடில்லிக்கும் இடையே சமரச முயற்சிகள் ரெலிபோனிலும் டெலக்ஸ் செய்தி மூலமும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

ஒரு கட்டத்தில் சம்பந்தப்பட்ட இங்கிலாந்து வீரர்கள் தென் ஆபிரிக்காவுக்கு எதிர்காலத்தில் செல்லமாட்டோம் என உறுதி மொழி தந்தால் விஸா வழங்கப்படும் என்ற நிலைக்கு இந்தியா இறங்கி வந்தது.

அதனை இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிராகரித்து விட்டது.

இந்தியாவும் விளையாட்டுக்காக உலக அரசியல் அரங்கில் விலையை விலைக்கு வாங்கத் தயாராக இருக்கவில்லை.

செப்டம்பர் 9 ஆம் திகதி, சம்பந்தப்பட்ட இங்கிலாந்து வீரர்களுக்கு விஸா வழங்க முடியாதென இந்திய அரசு அறிவித்தது.

சென்ற 7 ஆம் திகதி, இந்தியப் பயணத்தை ரத்துச் செய்வதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது.

அப்போது இங்கிலாந்து சபைத்தலைவர் அலன் ஸ்மித் சொன்னதாவது:

இந்தியப் பயணத்தை மேற்கொள்ள எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் வீணாகிப்போய் விட்டன; அதனால பயணம் ரத்துச்செய்யப்படுகிறது.

சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்தின் சட்டவிதிகளுக்கு ஏற்பவே தான் இங்கிலாந்து அணி தெரிவானது. இச்சம்மேளனத்தின் விசேட மாநாடு அடுத்த ஜனவரியில் நடைபெறவுள்ளது. இத்தருணத்தில் இந்தியப் பயணம் ரத்தாக வேண்டி ஏற்பட்டது கவலைதருகிறது.

திரு. ஸ்மித்தின் அறிக்கை இந்திய கிரிக்கெட் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இங்கிலாந்து தனதுமுடிவை சர்வதேச கிரிக்கெட் சம்மேளனத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்தியப் பயணம் ரத்தானது ஏற்பட்ட இழப்புக்கு நட்டஈடு கோருவது என்று இங்கிலாந்து தீர்மானித்திருக்கிறது.

அப்படியான நட்டஈட்டுக் கோரிக்கைகளை இந்திய கிரிக்கெட் சபை தான் கவனிக்கும் என்று இந்தியா அறிவித்திருக்கிறது.

இந்திய - இங்கிலாந்து கிரிக்கெட் போட்டிகள் ரத்தானதற்கு யார் காரணம் என்பதில் இரண்டு நாடுகளுக்கும் இடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது.

அரசியல் காரணமாக இங்கிலாந்து, முன்னரும் ஒரு முறை கிரிக்கெட் போட்டி ஒன்றை ரத்துச் செய்திருந்தது.

இது 20 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்றது:

அப்போது தென் ஆபிரிக்கா சென்று கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ள இங்கிலாந்து தீர்மானித்தது.

இங்கிலாந்து அணியில் கறுப்பு நிறத்தவரான பேசில் டிலிவேரா என்ற வீரர் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவருக்கு விஸா வழங்க முடியாது என்று தென் ஆபிரிக்க அரசு அறிவித்தது.

அதைத் தொடர்ந்து இங்கிலாந்து தனது தென் ஆபிரிக்கப் பயணத்தை ரத்துச் செய்தது.

இப்போது நிறவெறி நாட்டுக்குச் சென்றவர்களைக் கைவிட முடியாத நிலையில் இந்தியப் பயணத்தை இங்கிலாந்து ரத்துச் செய்தது.

இங்கிலாந்து அணியில் இடம்பெற்ற பிரச்சினைக்குரிய எட்டு வீரர்களும் வருமாறு;

கிரஹாம் கூச் (கப்டன்), ஜோன் எம்பியூறி, நெப் பெய்லி, கிம் பார்னெற், கிரஹாம் டில்லி, அலன் லாம்ப், பில் நியூபோர்ட், ரிம் ரொபின்ஸன்- இவர்கள் அனைவரும் ஐ. நா வின் 'கறுப்புப் பட்டியலில்' இடம் பெற்றுள்ளனர்.

1981 இல் தென் ஆபிரிக்காவுக்கு தன்னிச்சையான கிரிக்கெட் குழு ஒன்றுக்கு கப்டனாகச் சென்றதற்காக கிரஹாம் கூச் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ள மூன்று ஆண்டு காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

1981 இல் கறுப்பு நிறத்தவரை கிரிக்கெட் அணியில் சேர்க்கப் போய் தென் ஆபிரிக்கப் பயணத்தை இங்கிலாந்து ரத்துச் செய்தது.

இன்றோ அந்த நாட்டுச் (நிறவெறி) சென்ற வரைச் சேர்க்கப்போய் இந்தியப் பயணத்தை இங்கிலாந்து ரத்துச் செய்ய வேண்டியதயிற்று.

என்னே வேற்றுமை! *

## நாட்டினைப் பெறுவதென்றோ?

உறுதிபெற்று வாழ்ந்திருந்த தமிழினத்தார்
ஊருக்கும் உதவாமல் வெளிநாடு போனார்
நிலைமை மிகச் சீர்கெட்டுப் போன திங்கே
நேற்றிருந்த நிலை மீண்டும் நாளையில்லை
கல்வியிலே நாட்டமுண்டு ஆனால் எல்லாம்
காசுபணம் சேர்த்திடவே மொழியைக் கற்றார்!

நத்தைக்கும் கூடுண்டு காட்டில் வாழும்
நரிக்கும்தான் புழையுண்டு கடலில் பூக்கும்
முத்துக்கும் ஓடுண்டு தூக்கணத்து
முட்டைக்கும் வீடுண்டு! குமரித் தோன்றி
எத்திக்கும் புழ்மணந்த தமிழர்க் கிந்தநாள்
இடமில்லை, நாட்டினைப் பெறுவதென்றோ?

— அ. நிக்ஸன் —

## வல்லரசுகளை திணறடிக்கும் கிழக்கு ஜேர்மனி

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு உதயமாகி சென்ற 7 ஆம் திகதியுடன் 39 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டது.

இந்தநாட்டின் சனத்தொகை 1 கோடி 66 லட்சம் மட்டுமே.

இலங்கையிலும் பார்க்க சிறிது அதிகம் அவ்வளவு தான்.

இருந்தும் முடிந்த சோல் ஒலிம்பிக் போட்டியில் வல்லரசான அமெரிக்காவைத் தோற்கடித்து கூடிய தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

37 தங்கப்பதக்கங்கள், [illegible] வெள்ளிப் பதக்கங்கள், 30 வெண்கலப்பதக்கங்களை [illegible] படி முடிந்தது. என்று உலகில் ஆச்சரியப் படாதவர்களே இல்லை.

1956 இல் மெல்போர்ணில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டில் கிழக்கு ஜேர்மனி முதன் முறையாகப் பங்குபற்றியது.

கிழக்கு ஜேர்மனி என்றநாடு உதயமாகிய 7 ஆவது ஆண்டிலேயே உலகப் போட்டியில் கலந்துகொண்டு முதலாவது தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

கடந்த 32 ஆண்டுகளில் நடந்த ஒலிம்பிக்போட்டிகளில் இந்தநாடு பெற்ற பதக்கங்களின் எண்ணிக்கை 571 ஆகும். அவற்றில் 204 தங்கப்பதக்கங்கள். ★

## உலக விளையாட்டு

## சொற்சிலம்பம் போட்டி முடிவுகள்

### பரிசு பெறுவோர் விபரம்:

### இல: 87

**முதலாவது பரிசு:**
க. ஞானமுத்து, கைதடி மேற்கு, கைதடி.

**இரண்டாவது பரிசு:**
செல்வி. பிரேமலதா இராசேந்திரம், ஊறணி, வல்வெட்டித்துறை.

**மூன்றும் பரிசு:**
தி. விசாலாட்சி அம்மா, பொலிஸ் நிலையத்தடி, சுன்னாகம்.

### இல: 88

**முதலாவது பரிசு:**
எம். இந்திராணி, ''சரவணப் பொய்கை'' மந்துவில், கொடிகாமம்.

**இரண்டாவது பரிசு:**
திருமதி. G. நாகேஸ்வரி, C/o K. ஞானமுத்து. மானிப்பாய் வீதி, கைதடி மேற்கு, கைதடி.

**மூன்றுவது பரிசு:**
செல்வி. அ. கீதா, ஊறணி, வல்வெட்டித்துறை.

### சொற்சிலம்பம் போட்டி சரியான விடைகள்

### இல: 87

**இடமிருந்து வலம்:**
1. கற்பகம், 6. கதகளி, 7. காந்தி 8. கலி 9. பகல், 11. காதல், 12. பனை 13. உழைப்பு 15. கதி, 16. மார்கழி, 17. ஆந்தை, 20. ஓம், 21. பூட்டு, 22. குருடன்.

**மேலிருந்து கீழ்**
1. கதலிவாழை, 2. கற்க, 3. பகல் 4: பதகளிப்பு 5. சிந்தனை, 7. கால், 10. கல், 11. பூம்புகார், 12. பதி, 14. உமா, 15, கந்தன், 18. குகன், 19. காடு, 20. பூம்,

### இல: 88

**இடமிருந்து வலம்:**
1. மந்தமாருதம் 5. பனி 7. தகடு 8. கடுகு 9. தரி 10. தம்பி 11. கப்பி 13. உதவு 15. மகுடி 18. பகன் 19. தக்காளி 21. பாவம் 22. கிரி 23. டசின்.

**மேலிருந்து கீழ்:**
1. மருதம் 2. தவிடு 3. பருப்பு 4. தனி 6. மனிதன் 8. கதவு 11. கதகளி 12. பிடி 14. உபகாரி 16. குயவன் 17. தடு 20. கீக் 21. பாசி.

## பொது அறிவுப் போட்டி இல: 14 முடிவுகள்

### பரிசு பெறுவோர் விபரம்:

**முதலாவது பரிசு:**
செல்வி க. காந்திமதி C/o Mr. S. S. கனகரட்ணம், கட்டுடை, மானிப்பாய்.

**இரண்டாவது பரிசு:**
பா. பாலதயாளினி, சுதா கிளினிக், இராஜகாரியார் லேன், மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

**மூன்றுவது பரிசு:**
செல்வி. செ. யோகமலர், ஆண்டு 11B, ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org